

நாராயணீயம் - தமிழாக்கம்

முன்னுரை

ஓம் நமோ நாராயணா!

எங்கும் பரவி எதிலும் விளங்கும் பிரம்மத்தை தங்கு தடையின்றி தமிழில் வணங்க ஆசைப்பட்டேன். சில வருடங்களுக்கு முன்னால் என் தந்தையாரின் இறுதிக் காலத்தில் பக்கவாதம் படுத்திய போது நாராயணீயத்தை வாசித்து கொண்டே இருந்தார். அவருடன் வாசித்த ‘ அக்ரே பஷ்யாமி’ தசகத்தை அவரது முதல் வருட நினைவு நாளில் தமிழாக்கம் செய்தேன். அதற்கு பிறகு பல மாதங்களுக்குப் பிறகு கண்ணன் பிறக்கும் 38 வது தசகம் எழுதினேன். அதைத் தொடர்ந்து ராசக் க்ரீடை எழுதினேன். இப்படியாக படிப்படியாக எல்லா தசகமும் எழுதினேன். நாராயணீய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள தமிழ்

உரையை வைத்து எனக்கு தெரிந்த தமிழில் பாடல் வடிவில் எழுதியுள்ளேன். இதில் எதுகை மோனைக்காகவும் எண்ணத்தின் ஓட்டம் காரணமாகவும் ஆங்காங்கே என் கற்பனை கலந்திருக்கும்.
தேசம், காலம், நேரம், இனம், மொழி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நாராயணனுடன் உலகெங்கும் பிராயணம் செய்தேன். விடுமுறைக்கு செல்லும் போதெல்லாம் விடாமல் என்னுடன் வந்தார். வாகனங்களிலும் வழித்துணையாகவும் வந்தார்.
சென்ற ஆண்டு வைகுண்ட ஏகாதசிக்கு நூறு 100 தசகங்களையும் எழுத வைத்தார். கைபேசியிலும், ஐ பேட் இலும், கணினியிலும் வரையப்பட்ட எழுத்தோவியம். இதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.
இதை என்னுள் மரபணுக்கள் மூலம் தமிழார்வத்தை ஊட்டிய என் தாத்தா சங்கண்ணாவிற்கும் என்னுள் நாராயணீயத்தை ஊட்டிய என் தந்தை வெங்கடாசலத்திற்கும் என்னுள் நாமரசத்தை தாய்ப்பாலுடன் ஊட்டிய தாய் சுந்தரிக்கும் என்னை வழியெங்கும் காத்தருளும் குருநாதருக்கும் சமர்ப்பிக்கிறேன்.

இதற்கு ஊக்கம் அளித்த நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும்  மனமார்ந்த நன்றி.

ஓம் நமோ நாராயணா!

நாரயணப் பதிகம்

பதிகம் 1- - பகவானின் இயல்பும் பெருமையும்

1.
காலத்தால் கடந்தாலும்  கண்ணுக்குத் தெரிந்து
மூலமான உருவமாய்,  முழுமுதற்க்  கடவுளாய்

சீலமான வாழ்விற்கும் செழிப்பான இன்பத்திற்கும்
கோலமாய் வீற்றிருக்கும்  குருவாயூர் அப்பனே

2.
கிடைப்பதற்க்  கரிய கீர்த்தி பெற்றவனை
குடையைச் சுமந்த கோவர்த்தன கிரிதாரியை
விடையாய்த்  தெரிந்த விளையாட்டு பிரம்மத்தை
தடையின்றி நாமிங்கு தரணியில் பாடுவோமே

3
சத்திய உருவமாய் சாத்திர உண்மையாய்
நித்திய தூய்மையாய் நிர்மால்ய சேவையாய்
தித்திக்கும் இனிப்பாய் திகட்டாத அறிவாய்
உத்திர வாதத்தோடு உன்னதம் பெற்றவனே

4
கலக்க முடியாத கடலான பிரம்மமே
சுலபத்தில் கிட்டாத சுவையான அமுதமே
குலத்தைக் காத்திடும் குவியலான முத்தே
உலகத்தைப் பேணிடும் உன்னத முழுமுதலே

5.
மாறிவிடும் பொருளாய் மாயை ஆனவனே
கூறிவிட ஏதும்  குறைகளே  இல்லாதவனே
பூரித்த உருவத்தில் பொலிவான சத்தியமே
வாரிவழங்கும் கருணை வடிவான கடைக்கண்ணே

6
திருஉருவ மேனியில் திகழும் அப்பனே
உருவத்தில் காயாம் பூ உள்ளத்தைத் தொடுமே
மருவில்லா மேனியிலே மகாலட்சுமி அமர்வாளே
பெருக்காய் ஆனந்தம் பெருகியே ஓடுமே

7.
பிறப்பென்னும் துன்பம் பெறுவது எதற்கென்று
பிறவா வரத்தை பேணிவிட நினைத்தேன்
தரமான உன்னுருவம் தரணியில் கண்டிடவே
பிறந்திங்கு நான் பேரானந்தம் அடைந்தேன்

8
வேண்டாத போதும் விருப்பத்தைத்  தருவாய்
வான்புகழ் பாரிஜாதமாய் வாசனை அளிப்பாய்
ஏனோ அறியாது எல்லோரும் இவ்வுலகில்
வீணே கற்பகமரத்தை விரும்பி நின்றாரே

9
உவமை இல்லாத உண்மையான பொருளே
உவந்து வரங்களை உளமாரத் தருபவனே
சிவந்த வண்ணமாய் சிங்கார உருவமே
தவமாய் எங்களுக்குத் தலைவனாய் வந்தவனே

10.

முரன் என்ற முரட்டசுரனைக் கொன்றவனே
அறமாய் வலிமையோடு அடக்கி ஆள்பவனே
திறமாய்த்  தலைவனாகி தேவர்களைக் காப்பவனே
சிறப்பான புகழுடன் சீலமான பகவானே

நாராயணப் பதிகம் 2
உருவத்தின் இனிமையும் பக்தியின் இனிமையும்

1.
ஒளிரும் கதிராய் உன்கிரீடம் மின்னுமே
விளியில் அருளும் விழியே - முகத்தில்
கனிவான புன்னகையே! கன்னத்துக் குண்டலமே!
இனிதான மார்பில் இயல்பான திருநாமமே!

2.
அங்கியில் இரத்தினமும் அழகான கரங்களில்
சங்கும் கதையும் சக்கரமும் தாமரையும்
பொன்னரை நாணும் பொலிவான பீதாம்பரமும்
உன்னருமை திருவடியை உள்ளத்தால் வணங்கினேனே

3.
வியப்புக்கு மேலான வியப்பே! உலகில்
இயல்பான இனிமையே ! இவ்வுலகில் போற்றப்படும்
பொருளுக்கு மேலான போற்றியே! கவர்ந்திடும்
பொருளுக்கு மேலான கவர்ச்சியே! நாராயணனே!

4.
அண்டியவரைக் கைவிடாது அருளைச் சொரிபவனே
உன்மார்பைத் தழுவிய உன்னத மகாலக்ஷ்மியே
உன்னழகில் மயங்கி உலகை மறந்தாளென
அன்னையும் அவச்சொல் அடைந்து நின்றாள்

5.
நிலையில்லாது இலக்குமி நின்னோடு நின்றதால்
விலையில்லா உன்னழகில் வியந்து மகிழ்ந்தாள்
உன்னையே தியானிப்பவர் உள்ளத்தில் நிலையாய்
அன்னை மகாலக்ஷ்மி அழகாய் அமர்ந்தாள்

6
உன்னுருவத்தின் அழகில் உருவாகும் அமுதம்
தன்னறிவைத் தூண்டுமே! தானாக ஆனந்தம்
கண்ணீராய் பெருகும் - கசிந்துருகும் உடலும்
மண்ணிலே சிலிர்க்கும் மயக்கும் மாதவனே!

7.

சிறப்பான பக்தியோகம் சிந்தையில் நின்றிட
அறமான கர்மயோகம் ஆழமான ஞானயோகம்
இரண்டுக்கும் மேலான இனிதான பக்தி
பிறந்தவர் மனதில் பிறக்கச் செய்வாய்!

8.
பலனை விரும்பாது பணியைச் செய்வதே
உலகின் கர்மயோகம் - உபநிடத அறிவால்
உள்ளம் பெறுவதே உன்னத ஞானயோகம்
அள்ளும் பக்தியோ அழகான பேரின்பம்

9.
கடினமான செயல்களால் களைத்து ஞானத்தின்
விடியலில் அடையலாம் வீடுபேறு - வேதாந்த
வழியில் பிரமத்தின் வடிவத்தை தியானித்து
அழியாத பேரானந்தம் அடைவர் பலர்

10.
அன்பால் செய்யும் அமுதமான பக்தியே
இன்பத்தை நமக்கு எளிதில் தரும்
கனிவான அப்பக்தியை கண்ணனே விரைவில்
இனிதாய் எனக்கு இன்றே தருவாய்!

நாரயணப் பதிகம் 3

பக்தியை வேண்டுதல்

1.
பக்தர்கள் பாடுவதும் பார்க்காமலே நினைப்பதும்
மக்கள் மகிழ்வதும் மாதவனை எண்ணுவதும்
சிக்கலின்றி வாழ்வதும் சிந்தை பேறுபெறுவதும்
சக்கரத்து நாயகனால் சாத்தியமான சங்கமிது

2.
நோய்வாய்ப் பட்டாலும் நோகாது நினைப்பேன்
சாய்ந்திடும் உடலாலும் சரியாத மனத்தாலும்
வாய்விட்டு உன்நாமம் வாஞ்சையுடன் பாடுவேன்
ஓய்வில்லா கண்ணனே உனைப்பாட அருள்வாய்!

3.
உன்னருள் இருந்தால் உடலும் நலமாகும்
என்துன்பம் நீக்குவது எளிதன்றோ உனக்கு
பக்தர்கள் உன்னால் பரவசம் பெற்று
முக்தர்களாய் இன்பத்தை முற்றிலும் அடைந்தாரே!

4.
நாரத முனிவரும் நாடுவது என்ன?
சாரதி உன்னை சரணம் அடைந்து
அறியாத ஆன்மாவின் அறிவை அறிந்து
தெரியாத ஞானமும் தெரிந்து கொண்டார்

5.
சந்தேகம் ஏதுமில்லை சாத்திரம் உண்மை
எந்நேரமும் நிலைக்கும் ஏற்றமிகு வேதங்கள்
கணக்கில்லா துன்பம் கணப்பொழுதில் மறையும்
எனக்கு பக்தி என்றும் வேண்டும்

6.
குணங்களைக் கேட்கலாம் குறையைப் போக்கலாம்
மனக்கவலை அழியலாம் மாறாத களிப்படையலாம்

அறிவின் தூய்மை அகமும் அறியும்
விரிந்திடும் ஆனந்தம் வேண்டுவது இனி யாது?

7.
கண்கள் உன்னையே கண்டு நின்றிட
கொண்ட பாதங்கள் கோவிலை நாடிட
செவிகள் உன்கதையை செவ்வனே கேட்டிட
புவியில் நாசிக்கு பூக்கட்டும் துளசிமணம்

8.
உடலும் சிலிர்க்கும் உள்ளம் உருகும்
கடகடவென கண்ணீர் கரைபுரளும் - கவலைகளை
மடமடவென மனமிங்கு மறந்து போகும்
திடமாய் நெஞ்சில் திருஉருவம் நிற்கும்

9.
குருவாயூர் தலைவனே!கும்பிடாத மூடருக்கும்
திருவருள் புரிபவனே! திருமகள் தலைவனே!
வருத்தும் என்நோயை வாதத்தின் கொடுமையை
அறுத்து எடுப்பாய்! ஆனந்தம் தருவாய்!

10
உன்சித்தம் எதுவோ உலகிலது நடக்கட்டும்!
என்மனம் தாங்கிட எழிலாய்த் திருவடி
என்னால் முடிந்தவரை ஏற்றமிகு பாடலில்
உன்னைப் பாடியே உயிரும் வாழ்வேன்!

நாராயணப் பதிகம் 4

அஷ்டாங்க யோகம்

1.
உன்னை வழிபட உடலுக்கு வலிமையும்
உன்னை நினைக்கும் உள்ளமும் வேண்டும்
உறுப்புகளால் யோகத்தை உனக்காக செய்வேன்
அருளைப் பெறுவதால் ஆனந்தம் அடைவேன்

2.
உறுதியுடன் நியமங்கள் உடலால் செய்வோம்
அருமையாய் தினமும் ஆசனங்கள் செய்வோம்
நீராடித் தூய்மை நித்தமும் பெறுவோம்
ஊரிலே ஆசனங்கள் உன்னதமாய் செய்வோம்

3.
ஓம் எனும் பிரணவத்தை உள்ளே வைப்போம்
ஓம் என்று மூச்சினை உள்ளடக்கி விடுவோம்
இந்திரியம் அடக்கி இடைவிடாது நினைப்போம்
மந்திரங்கள் மூலம் மனத்தை அடக்குவோம்

4.
காணக் கிடைக்காத கைவல்ய உருவத்தை
மாணப் பெரிதான மகத்தான திருமேனியை
திருவடியை மனதால் தியானம் செய்து
பெருகும் பக்தியை பெருமிதமாய்ப் பருகுவோம்

5.

பயிற்சி செய்து பக்தர்களாக மாறுவோம்
உயிரைக் கொண்டு உன்னுருவை எண்ணுவோம்
மனதால் நினைத்து மன்றாடி நிற்போம்
தினமும் உன்னையே தியானம் செய்வோம்

6.
அழகிய உன்னுருவை அகத்தில் காண்கிறோம்
பழகிய முகமாய் பார்வைக்குள் காண்கிறோம்

செழுமையான பிரம்மம் சேர்ந்து நிற்கும்
முழுமையான ஆனந்தம் மூலமாய்க் கிட்டும்

7.

நினைவால் யோகத்தை நித்தம் செய்வோம்
வினைகளான காலத்தை விரைவில் கடப்போம்
அடைந்த சமாதி அதனை விட்டால்
தடைகள் அகற்றி தாரணை தொடங்குவோம்

8.
உன்னை நினைத்து ஒன்றாய்க் கூடுவோம்
உண்டாகும் பேரின்பம் உளமார கொண்டாடுவோம்
பக்தர்கள் கூட்டமாய் பாடி நிற்போம்
முக்தர்கள் போலவே முனிவராய் மாறுவோம்

9.

ஊற்றாய் மூச்சை உள்ளுக்குள் அடக்கி
காற்றை வயப்படுத்தி கருத்துடன் பிரணாயாமம்
ஆற்றல் அதனால் அதிகரித்து நாடியும்
போற்றத் தகுந்த பேறும் பெற்றிடும்

10
முக்தியை உடனே முனைந்து விரும்புவோர்
சக்தியுடன் உடலை சட்டென விடுவார்
உன்னை அடைந்திட உடலோடு சிலரும்
உன்னைப் படிப்படியாய் உள்ளுக்குள் அடைவார்

11.

பக்தனுக்கு அக்கினி பாதை காட்டிட
சுக்கில பட்சம் சுகமாய் வழிகாட்டிட
உத்திராயாணத்தில் கதிரவன் உலகம் செல்வான்
பத்திரமாய் துருவனின் பாதம் தொடுவான்

12.
அங்கிருந்து உன்னுலகம் அடைந்து அவனும்
பொங்கிய ஆதிசேடனின் பூரிப்பில் மூழ்குவான்

தாங்கிய பிரம்மனின் தாரணி செல்வான்
ஓங்கிய உன்புகழை உத்தமன் பாடுவான்

13.
உன்னுலகம் அடைந்த உள்ளத்தால் மோட்சமும்
பொன்னுலகம் சென்றதில் பூரிப்பாய் பெறுவான்
விண்ணுலகம் சென்றிட விடுதலை அடைந்திட
மண்ணிலே யோகத்தை மனிதன் செய்வான்

14.
நிலமும் ஒளியும் நீரும் காற்றும்
துலங்கும் வானமும் தூய  பெருமையும்
விளங்காத மாயையும் விரிந்து இருக்க
உளமார அனுபவித்து உன்னுலகை அடைவான்

15

ஒளியுலகம் சென்றவன் உன்னையே காண்பான்
வெளியுலகம் அறியாது வெற்றியை அடைவான்
உன்குணம் பாடும் உள்ளம் கொண்டேன்
என்னை நீயே என்றும் காப்பாய்!

நாராயணப் பதிகம் 5

விராட புருஷனின் தோற்றம்

1.
இரவும் இன்றி இனிதான பகலுமின்றி
உறவின்றி ஒளியாய் உலகில் நீயிருந்தாய்
பிறப்பின்றி இறப்பின்றி பிரளயத்திற்கு முன்னர்
சிறப்பாக இருந்து செழுமையாய் ஒளிர்ந்தாய்

2.
காலமும், சிறப்பும், கருமமும் அறியாமையும்
கோலமான சத்துவமும், கூட்டமான உயிரினங்களும்
உலகிலே இல்லாதபோது உன்னுருவைத் தியானித்து
சுலபமாய் இன்பத்தை சுவைத்தாய் நீயே

3.
இரண்டாயிரம் கோடி இனிதே கழிந்திட
பரந்த பூமியில் பையபைய பிறக்கும்
விரிந்து காலமெனும் விசையான சக்தியும்
புரியாத மாயையும் பூத்திடும் குணங்களும்

4.
அருகிலே இருந்தாலும் அதனுள் நுழையாத
உருவம் உன்னுடையது- உயிராய் புகுந்து
புத்தியை படைத்து புத்துயிர் தருவாய்
தத்துவம் படைத்து தானாக நிற்பாய்

5.
சத்துவ குணம் சாத்தியமாகும் - அறியாமை
புத்தியில் நிரம்பி பூமியும் இருக்கும்
நானெனும் மமதை நாடாது உருவாகும்
ஏனென்றறியாது குணங்கள் எம்மை தாக்கும்

6.
அகங்காரம் இங்கு அனைத்து குணங்களை
மகத்தாய் ஆட்டிட, மாறாத காற்று,
இந்திரன், வருணன், இன்னும் தேவர்கள்
இந்திரியப் பற்றோடு இவ்வுலகில் பிறந்தனர்

7.
புத்தியும் ஆளுமையும் புதிரான மனமும்
சித்தம் சேர்ந்து சிறப்பான விருத்தியும்
உத்தமமாய் இங்கு உருவாக்கி, உலகை
மொத்தமாய் படைத்து முழுதாய் நிற்பவனே

8.
ஒலியைப் படைத்தாய் , ஒளியைப் படைத்தாய்
பொலிவாய் வானம் புதிதாய் சுவை
நிறைவாய் காற்றும், நிறமும், நீரும்
வரிசையாய் உருவாக்கி வையகம் நிரப்பினாய்

9.
தனித்தனியாய் நின்றபடி தானியங்கி தேவர்களை
கனிவாய் ஒன்றாக்கி காரிய செயலாக்கி
உண்டாக்கிய தேவர்களுக்கு உருவாக்கும் சக்தியளித்து
அண்டத்தை உருவாக்கி அதனையும் காப்பாய்

10.
நீரினுள் மூழ்கி நீண்ட காலம்
பாரிங்கு அடங்கி பாதை தொலைக்க
விரிந்த உருவமாய், விராட புருஷனாய்
பிறந்தநீயே!- நோயிலிருந்து பேணியெனைக் காப்பாய்

நாராயணப் பதிகம் 6

விராட புருஷனின் உருவம்

1.
திருமேனியுடன் திகழும் தேவனே! ஈசனே !
திருவடிகள் பாதாளமாகிட திருப்பாதம் மேலே
இருப்பது இரசாதலம், இரண்டுகணுக்காலும் மஹாதலம்
உருவத்தில் பதினான்கு உலகங்களாய் இருப்பவனே!

2.
முழங்கால் தலாதலமாக முட்டுக்கள் சுதலமாக
சுழலும் விதலமும் சுடராய் அதலமும்
நித்தியமான பூமியின் நிலங்களேழும் நின்அங்கமாக
சத்தியம் காக்கவே சக்கரம் ஏந்தினாய்

3.
உலகத்தையே திருமேனியாய் உடைய பகவானே
சுலபமாய் மஹர்உலகம் சுழலும் கழுத்தாக
முகமும் நெற்றியும் முக்கியஜனர் தபஸ் உலகமாக
சுகமான தலை சத்திய உலகமாக

4.
உலகமே உடலாக உன்பிரம்ம மந்திரம்
அளவில்லா வேதமாக ஆன்மா தலையாக
கண்ணிமை இரவு பகலாக கண்கள் கதிரவனாக
தண்ணென்ற மேகங்கள் தலை கேசமாக

5.
செவிகள் திசையாக, செவ்விதழ் வெட்கமாக
நாசித் துவாரம் நற்தேவதை அச்வினியாக
பற்கள் நட்சத்திரமாக, பார்வை படைப்பாக
உற்சாக கோரப்பல் உயிரெடுக்கும் எமனாக

6.
புன்னகை மாயையாக புவியிலுன்மூச்சு காற்றாக
உன்நாக்கு நீராக, உன்சொல் பறவையாக
இன்னிசை சித்தராக, இரு கை தேவராக
உன்வாய் நெருப்பாக, உன்மார்பு தருமமாக

7.
இருதயம் மூலகாரணமாக, இனியவயிறு கடலாக
உருவத்தின் முதுகு உலகின் அதருமமாக
ஆண்குறி பிறப்பாக, ஆடை நேரமாக
மாண்புகள் மிகுந்த மணாளக் கண்ணனே !

8.
இடுப்பு விலங்காக இனியநடை காலமாக
சுடும் கால்நகம் சுற்றும் மிருகங்களாக
முகமும் கைகளும் முத்தான கால்களும்
சுகமான வருணங்களின் சுந்தரமான பிறப்பிடமாக

9.
உன்செயல்கள் சக்கரமாகி உலகத்தின் வாழ்க்கையாகி
உன்எலும்புகள் மலைகளாகி உன்வல்லமை அசுரர்களாகி
உன்நாடி ஆறுகளாகி உன்மயிர்கள் மரங்களாகி
உன்மேனி விரிந்த உலகமாகி விளங்கட்டும் !

10.
உலகத்தின் வடிவமான உயரிய தலைவனே
உலகத்தில் கருமவழியின் உள்ளமாய் உயிராய்
எங்கும் நிறைந்த எம்பிரானே! குருவாயூரப்பனே !
எங்களின் நோயை எளிதில் நீக்குவாய் !

நாராயணயப் பதிகம் 7
பிரம்ம தேவனின் தவமும்,  வைகுண்ட தரிசனமும்

1.
பதினான்கு உலகங்களில் பதிந்த வடிவமே
அதிசய சத்தியஉலகின் ஆதிபிரம்ம வடிவமே
மூன்று உலகங்களின் முதன்மை வடிவமே
சான்றுகள் காட்டிடும் சத்திய ஹிரண்யகர்ப்பனே

2.
உலகை பிரம்மனும் உருவாக்க முயன்றான்
கலங்கிய மனதுடன் கவலையும் கொண்டான்
அவனும் செய்த ஆராய்ச்சிகள் புரியாதவேளையில்
"தவம்செய் தவம் செய்" தானாகக் கேட்டகுரலே!

3.
எங்கும் தண்ணீர் எழும்பி இருந்திட
அங்கும் இங்கும் ஆவலாய் தேடிட
எங்கும் காணாது எழிலாய் தவமிருக்க
சங்கு சக்கரனை கண்டானே வைகுண்டத்தில்

4.
ஒளிமயமாய் விகாரமில்லா ஓங்கிய வைகுண்டமே
களிப்பை அளித்து கவலைகள் நீக்குமே
அறியாமை துன்பம் அச்சம் சினமின்றி
விரிந்த உலகிலே விளங்குமே ஆனந்தம்!

5.
பாவங்கள் இல்லாத பாதையே வைகுண்டம்
யாவரும் ஒளியோடு யவனமாய் இருப்போரே
நான்கு கரங்களோடு நலமாய் இருப்போரே
ஆன்மாவில் தெய்வத்தோடு ஆனந்தமாய் கலப்பாரே!

6.
தேவபெண்கள் சூழலக்ஷ்மி திருமேனி ஒளிர
ஆவலை உண்டாக்கி அனைவரும் வியக்கிறார்கள்
திக்குகள் ஒளிர நின்றவள் உந்தன் திருவடி
பக்கத்தில் அமர்ந்தாளே பார்க்கவும் ஆசையே

7.
இரத்தின மயமான இருக்கையில் நீயிருக்க
பிரம்மனும் கண்டிட பிரகாச ஒளிக்கிரீடமே
ஸ்ரீவத்ச மருவோடு ஸ்ரீயின் ஒளியோடு
ஸ்ரீவத்ச பெருமாளே சிவப்பான கௌஸ்துபமே

8.
சங்குசக்கர கதாபாணியாக சர்வதிசை. ஒளிர
பொங்கிடும் அழகில் பூத்த தாமரைமலரே
மங்காத ஆனந்தம் மகிழ்ச்சி ஊட்டிடும்
அங்கமுடை திருமேனியே அழித்திடு என்நோய்களை

9.
உன்னைக் கண்டதும் உற்சாகமான பிரம்மன்
உன்னையே வேண்டி உள்ளம் உருகினான்
ஒன்றாகி இரண்டாகி ஒளியான உருவே
நின்று இங்கருளும் நிலையான பொருளே

10.
படைக்கும் அறிவை பகவானே அருளிட
கிடைத்த ஞானத்தில் கீரத்தியுடன் பிரம்மன்
சிவந்த திருவடியை சிந்தையில் கொண்டான்
உவந்து நானும் உன்னையே வணங்குகிறேன்

பதிகம் 8
பிரளயம் முடிவும் பிரம்மனின் பிறப்பும்

1.
முடிந்திடும் பிரளயம் முதலில் பிரம்மன்
அடியெடுத்து வந்திட அவனும் உன்னிடம்
மறைகள் பெற்று மானுடத்திற்கு வழங்க
குறைகள் இல்லாது குலமும் ஓங்குமே

2.
நோய் என்னை நோகடிக்க வைக்க
வாய் உன்னை வணங்கி நினைக்க
ஓடி எங்கோ ஓரிடத்தில் அமர்ந்து
பாடி மகிழும் பரவசம் தருவாயோ

3.
தினமும் செய்யும் தினசரி கடமைகள்
மனமும் ஒத்து மகிழ்வோடு செய்திட
கர்ப்பத்தை பிரம்மனும் கடமை தவறாது
சிற்பமாய் உன்னருளால் சிருஷ்டி செய்வானே

4.
ஆயுளில் பாதி அடைந்த பிரம்மன்
சாயும் இரவிலும் சலிக்காது காலையிலும்
ஆயிரம் கோடி அனுதினமும் படைக்க
வாயினால் உன்திரு விளையாட்டை உரைப்பேன்

5.
தாமரை மலரில் தவமிருக்கும் பிரம்மன்
கோமள உருவம் கோவிந்தன் உன்னிடம்
சேர்ந்திட விரும்பி சேவித்து கலந்திட
ஆர்ப்பாட்ட கடலாய் அண்டம் ஆனதே

6.
உலகில் எங்கும் உறைந்திடும் தண்ணீர்
கலந்து நிற்கும் கடலுடன் தெரிய
பள்ளி கொண்ட பாம்பணையில் உன்னுருவம்
அள்ளி தெளித்த அழகாய் தெரியுமே

7.
ஒடுங்கிய சக்திகளை ஒருங்கே இணைத்து
படுத்து உறங்கிய பாம்பணை திருமாலே
பிரளயம் முடிந்த பின்னால் எழுப்ப
அரவம் கொடுக்க ஆணை இட்டாய்

8.
ஆயிரம் நான்கு ஆயிரம் ஆண்டுகள்
கோயிலில் உறங்கிய கோமகள் மணாளா
காலம் என்னும் கம்பீர சக்தி
மாயமாய் உன்னை மறைவில் எழுப்பியதே

9.
உன்னுள் அடங்கிய உலகத்தைக் கண்டாய்
நுண்ணிய உருவமாய் நீரினில் கண்டாய்
கண்ணிலே அருளுடன் கருணை புரிந்தாய்
மண்ணிலே உலகத்தை மறுபடி செய்தாய்

10.

இறையின் வயிற்றில் இருந்து வருமே
மறையின் பொருளாய் மகத்தான தாமரை
நுண்ணிய உருவாய் நுணுக்க அழகாய்
தண்ணென்று மொட்டு தளிராய் பிறக்குமே

11.
நீரில் இருந்து நீண்ட மொட்டு
பாரில் இருளை பட்டென்று போக்கி
நான்கு புறமும் நன்றாக விரிந்து
வான்வரை விரிந்து வையகம் பரவியதே

12
அந்த தாமரையில் அழகாய் பத்மஜன்
சிந்தை மகிழ சிரித்தபடி வந்திட
கற்ற மறைகள் கடிமனம் நினைவில்
பெற்ற பிரம்மன் பிறந்து நின்றானே

13
குருவாயூரில் வாழ்பவனே குலங்களைக் காப்பவனே

உருவாய் பிரம்மனை உருவாக்கிய தலைவனே
பெருமைகள் ஆயிரம் பெற்று திகழ்பவனே
சிறுமை நோய்களை சீக்கிரம் அழிப்பாயே !

பதிகம் 9
பிரம்ம தேவன் தவமும் உலகப் படைப்பும்

1.
அங்கிருந்த தாமரை அளித்த பிரம்மன்
எங்கிருந்து இம்மலர் எழுந்தது என்றே
இங்கும் அங்கும் என்றுமுகம் திருப்ப
மங்காத நான்கு மலர்முகம் பெற்றான்

2.
அசையும் மலரை அக்கடலில் கண்டான்
விசையாய் இருந்த வினயனைக் காணாது
நானாக மலரின் நடுவில் எங்கனம்
தானாகத் தோன்றினேன் தன்னையே கேட்டான்

3.
அறிவும் பலமும் ஆழப்பெற்ற பிரம்மன்
அறியும் ஆசையில் அந்தக் கொடியை
வழியாய்க் கொண்டு வேகமாய் இறங்க
அழியா உன்மேனி அறியாது தவித்தான்

4.
எல்லாத் துளைகளிலும் எங்கும் தேடினான்
இல்லாத உன்னை எண்ணியே ஏங்கினான்
தாமரை மலரில் தவமும் இருந்தான்
கோமள மேனியனை கும்பிட்டு நின்றான்

5.
ஆண்டுகள் நூறு அவனும் தவமிருக்க
வேண்டிய யோகத்தில் வியக்கும் உருவம்
கண்ணுக்குள் அவனும் கண்டு கொண்டான்
உண்டாகிய அறிவில் உள்ளமும் மகிழ்ந்தான்

6.
மணியும் முத்தும் மகுடமும் கிரீடமும்
அணியும் கௌஸ்துபம் அழகிய பீதாம்பரம்
உன்மேனி அழகாய் ஒளிவீச இங்கு
என்முன் நிற்கும் எழில்மேனி அப்பனே

7.
எல்லை இல்லாது எங்கும் நிறைந்து
சொல்ல சொல்ல சுவைக்கும் தலைவனே
பலப்பல குணங்கள் படைத்த தேவனே
உலகை பிரம்மனிடம் உருவாக்க சொன்னாய்

8.
அழியா உலகை அழகாய் படைப்பாய்
எழிலாய்ச் செய்து என்னருள் பெறுவாய்
தவங்கள் புரிந்து தாரணி படைப்பாய்
கவலை இன்றி கடமை செய்வாய்

9.
ஆண்டுகள் நூறு அவனும் தவமிருக்க
வேண்டும் பலங்கள் விரும்பிப் பெற்றான்
நீரில் அசையும் நின்மலரைக் கண்டான்
நீரையும் காற்றையும் நித்தம் உண்டான்

10.
குருவாயூர் தலைவனே! கூடிய உன்னருளால்
உருவாகும் மூன்று உலகமே உயிர்களே!
அருளுடன் இவற்றை அவனும் உருவாக்க
அருளைப் பொழிந்து அனுதினம் காப்பாய்

பதிகம் 10

படைப்பின் வகைகள்

மனிதரை விலங்கை மாய உடலை
புனித தேவரை புதுப்புது படைப்பை
பிரம்மாண்ட  நிலத்தை, பெரிய தாவரத்தை
பிரம்மன் வலிமை பெற்று படைத்தான்

2.

அச்சம் சினம் ஆசை அகங்காரம்
மிச்சமாய் பொய்மை மேவிப் படைத்தான்
துச்சமாய் குணங்கள் துரிதமாய் படைத்தான்
உச்சத்தில் வருந்தி உன்திருவடி அடைந்தான்

3.
ஸனகனை ஸனந்தனை ஸநாதன முனிவரை
மனதினால் பிரம்மன் மகத்துடன் படைத்தான்
உருவாக்கும் தொழிலை ஒருகணம் மறந்துன்
அருளை பெறவே அவர்கள் ஏங்கினர்

4.
மனதின் கோபம் மங்காது நிற்க
சினம் என்னும் சிவன் உருத்திரன்
கண்ணுக்கு இடையே காட்சியாய் மிருடன்
உண்டாகி எங்கும் உலகில் பரவினான்

5.
உன்ஏவலில் பிரம்மன் உருத்திரனை அழைத்து
அன்போடு உருவங்கள் அளித்து சொன்னான்
பதினோரு பெயர்களை பலவகை உருவங்களை
அதிசயமாய் அளித்து அண்டம் படைஎன்றான்

6.
உடனே உருத்திரன் உருத்திர கணங்களை
கடனே என்று காட்டி படைக்க
அச்சம் தரும் அபாய உருவம்
அச்சம் பெற்று அவனே தடுத்தான்

7.
தானே படைக்க தாமரை பிரம்மன்
நானே என்று நாரதரும் மரீசியும்
புலகனும் பிருகுவும் புலஸ்தியும் வசிஷ்டரும்
உலகில் தோன்றி உன்னடி பணிந்தனர்

8.
தரும தேவர் தட்சன் கர்த்தமன்
அருமை சரஸ்வதி அழகாய் பிறக்க
காமத்தில் பிரம்மன் காதலில் விழுந்திட
தாமதமின்றி அறிவுரை தட்சன் வழங்கினான்

9.

தேன் போன்ற தெவிட்டாத புராணங்களை
நான்கு மறைகளை நான்முகன் படைக்க
மண்டலத்தில் உருவாக்கி மலரடி பணிந்தான்
அண்டம் உருவாக்கி அடைக்கலம் புகுந்தான்

10.
ஆண்பெண் என்று அங்கே மனுவுக்கும்
காண்பாய் சதரூபை காதல் பிறக்க
உருவான தன்னுடலை உடனே பிரித்தான்
குருவாயூர் தலைவனே கோவிந்தனே காப்பாய்

பதிகம் 11

ஹிரணியாட்சன் ஹிரண்யகசிபு பிறப்பு

1.
படிப்படியாக உலகில் படைப்பு வளர
அடியினைக் காண அடியார் முனிவர்
வரிசையாய் ஸனகருடன் வைகுண்டம் வந்தனர்
அறியமுடியா அழகான ஆனந்த ரூபனே

2.
மணிகள் வீடுகள் மாடங்கள் கொண்டு
அணியாய் வைகுண்டம் அழகாய் இருந்ததே
பேரின்பம் முனிவரும் பெற்றிட வந்தனர்
காரிருள் நீக்கிடும் கருணைக் கடலே

3.
உன்னைக் காண உன்மனையில் புகுந்திட
தன்னை மறந்து தவமுனிவர் வந்திட
ஜயனும் அவனோடு விஜயனும் அங்கே
பயமின்றி அவர்கள் பாதையைத் தடுத்தனரே

4.
இங்கே நீங்கள் இருந்தபடி தவறுகள்
தங்காது செய்வதால் தண்டனை பெறுவீர்
அரக்கனாய் பிறந்து அங்கே செல்வீரென
இரக்கம் காட்ட இவர்களும் வேண்டினரே

5.
செய்தி அறிந்த செம்மால் வண்ணா
உய்வினை நீக்க உடனே நீயும்
திருமகளுடன் கருடன்மேல் திருவலம் வந்தாய்
திருமேனி தரிசனம் திகட்டாது தந்தாய்

6.
சொல்லிய நன்மொழி சுகத்தைத் தந்திட
நல்ல முனிவரும் நாராயணா துதிபாட
மூன்று பிறவியெடுத்து முக்தி பெற்றிட
சான்றாய் ஜயவிஜயர் சரித்திரம் படைத்தாய்

7.
செருக்குடன் பெற்ற சினத்தோடு கசியபருக்கு
இருவரும் பிறந்து இன்சொல் மறந்திட
அரக்கராய் பூமியில் அவதரித்த கதை
உரக்கச் சொல்ல உன்புகழ் பாடுமே

8.
ஹிரண்யகசிபு மற்றும் ஹிரண்யாட்சன் என்று
அரக்கர்கள் உலகை ஆண்டதில் பக்தர்கள்
முயன்று உன்னை முன்னால் அடைய
துயரம் கொண்டு துதித்து வந்தனர்

9.
பகைவன் யாருமே பாரினில் இல்லை
வகையாய் நீருக்குள் வாட்டினான் நிலமகளை
கதையை எடுத்து கத்தித் திரிந்தான்
கதையை சொல்லிட கண்ணன் வந்தாயே

10.
உன்னுடன் போரிட உற்சாகமாய் வந்தான்
அன்பிலே தோய்ந்து ஆளுமை உடையவனே
என்நோய் தீர்க்கும் எழிலான உருவமே
கண்முன் வருவாய் காட்சி தருவாய்

பதிகம் 12
வராக அவதாரம்

1.
நிலமும் மூழ்கி நீரில் மறைய
உலகம் படைக்கும் உன்னத ஸ்வாயம்பூ
கலக்கமாகி உன்னிரு காலடி பிடித்து
சுலபத்தில் பிரம்மனை சென்று அடைந்தான்

2.
நிலமின்றி மக்கள் நிம்மதியாய் எங்கிருப்பர்
குலம்காக்கும் தாமரை குணமுடை பிரம்மன்
அண்டம் காத்திட அருளை வேண்டினான்
கண்மூடி தியானிக்க கண்டான் உன்னையே

3.
உன்னடி பணிந்து உள்ளம் உருகி
என்செய்ய இனியென்று ஏங்கிய பிரம்மனின்
நாசித் துவாரத்தில் நற்பன்றி உருவாகி
ஆசிகள் பலபெற்று ஆகாயம்வரை விரிந்ததே

4
பெருவிரல் அளவு பெருத்த உடலுடன்
உருவத்தில் யானைபோல் உருமாறி வளர்ந்ததே
வானளவ உயர்ந்து வளர்ந்த பன்றியை
காண பிரம்மனின் கண்ணும் பனித்ததே

5

இந்தபன்றி யாரோ எங்கிருந்து வந்ததோ
அந்தஹரி மாயையோ ஆகிவந்த உருமலோ
ஆக்கை பெரிதாய் ஆங்கே கொண்டதோ
மூக்கின் நுனியில் முதலாய் வந்ததோ

6
பேருடல் கொண்டு பெரிய உறுமல்கேட்டு
பேறுபெற்ற முனிவர்கள் பெருமகிழ்வு கொள்ள
உலகம் மூன்றும் உன்னருள் வேண்ட

சுலபமாய் கடலுள் சுழன்று விழுந்தாயே

7.
உடலில் ரோமம் உக்கிரமாய் நிற்க
கடலில் நீயிறங்கும்  காட்சியைக் காண
உயர்ந்த வாலை, உருவத்தின் தோற்றத்தை
அயர்ந்த முனிவரும் அதிசயமாய் கண்டனர்

8
பாதாள உலகில் பாயும் உருமலுடன்
ஆதார நிலமகளை ஆங்கே நீதேடிட
அச்சத்தில் முதலைகள் அங்கும் இங்குமோட
மிச்சம் இருந்ததோ  மிரண்ட திமிங்கலமே

9
அசுரர்கள் உன்னை அழிக்க முயன்றிட
அசுரத் தலைவன் ஆட்சன் அவனை
அழித்து நீயும் அவளைக் காத்தனை
எழிலாய் பற்களால் எடுத்து வந்தனை

10
கோரப் பற்கள் கொண்டு எடுத்தாய்
நீரில் இருந்து நிலமகளை மீட்டாய்
நோயில் இருந்து என்னைக் காப்பாய்
வாயிலில் நாராயணா வந்து அருள்வாய்

பதிகம் 13
ஹிரண்யாட்ச இறப்பு

1.
உன்னைத் தேடியே உலவினான் ஹிரண்யாட்சன்
தண்ணீரில் மூழ்கியே திரிந்து வந்தான்
நாரதரும் அங்கு நலமாய் வந்தார்
வரதனின் பெருமையை வஞ்சகமாய்ச்  சொன்னார்

2.
மாயாவி விஷ்ணு மண்மகளை எடுக்கிறார்
சாயாத பெருமை சரித்திரம் ஆனதே
எங்கே அவன் என்றசுரன்  கேட்க
இங்கே அவனென  இதமாய்ச்  சொன்னார்

3.
காட்டு விலங்கோ கடுமை பற்களோ
ஆட்டிக் கொல்கிறேன் ஆர்ப்பரித்து நின்றான்
நடுங்கும் நிலமகளை நிலைக்க செய்து
கடுமையாய் போரிட்டுநீ காத்து நின்றாய்

4.
மாலைப் பொழுதிற்கு முன்பே கொன்றிட
வேளை வந்ததென்று வேண்டினான் பிரம்மன்
கதையுடன் நின்ற கதையைச் சொல்லவா
உதைத்து நீயும் உறுமியதை சொல்லவா

5.
கதையும் விழுந்து காதை பிளக்க
அதையும் தாங்கி அசுரன் போரிட
சக்கர ஆயுதம் சுதர்சனன் ஏந்தி
வக்கிர அசுரன் வதம் செய்தாயே

6.
சூலத்தை எறிந்து  சுதர்சனனை தாக்கினான்
காலத்தை வென்ற கடவுளாய் நீயும்
முறித்து சூலத்தை முடித்து விட்டாய்
சரிந்த அசுரன் சண்டைக்கு வந்தான்

7.
மாயத்தின் துணையில் மறுபடி மறுபடி
ஆயத்தம் செய்து அசுரன் தாக்கினான்
கைமுட்டி தாக்கி கால்களால் தாக்கி
ஐயம் அகற்றி அசுரனைக் கொன்றாய்

8.
அசுரனின் பேருடல் ஆங்கே சரிந்திட
அசுரனின் இறப்பில் அண்டம் அதிர்ந்தது
தேவர்கள் சூழ்ந்து தேவனைப் பாட
பாவங்கள் போனதில் பரவசம் மிகுந்தது

9.
வேதம் தாங்கிய வேத புருஷனே
ஆதார ஸ்வரூப ஆஸ்ரிய புருஷனே
அங்கத்தில் மறைகளை ஆண்ட அழகனே
பொங்கிடும் பாண்டங்கள் பூத்த வீரியமே

10.
மதுவின் பகைவனே மாறாத உண்மையே
யதுகுல திலகனே யாவர்க்கும் எளியனே
வாழ்த்திய மகிழ்வில் வைகுந்தம் சென்றாயே
ஊழ்வினை நோயை உடனே தீர்ப்பாயே

14

## கபிலர் அவதாரம்

1.
பிரம்மனின் மகன் பிறந்த நாள்முதலாய்
வரத்துடன் உன்னை வணங்கி வந்தான்
திருவடிகள் இரண்டை தியானம் செய்து
வரும் நாட்கள் வந்தித்து இருந்தான்.

2.
நிழலில் பிறந்த நிஜமான கர்த்தமன்
அழகிய உன்னை அனுதினம் வணங்கி
மொழியில் விரும்பி முன்னின்று பிரம்மன்
தொழிலைச் செய்ய துதித்து நின்றான்.

3.
கருமேனி அழகாய் கார்மேகம் போலிருக்க
அருமலர் தாமரை அணியாய் கரமிருக்க
திருமேனி தரிசனம் திறம்பட காட்டி
அருளி கர்த்தமனுக்கு அபயம் செய்தாய்.

4.
அவனுக்கு மனைவியாகி அவனியைக் காக்க
மகளாய் ஒன்பதும் மகனாய் கபிலரும்
சுகமாய் பிறந்து சுபிட்சம் அடைய
அகத்தினில் வீடுபேறு அடையச் செய்தாய்.

5.

அனுதினம் உன்னை ஆராதிக்கும் அரசன்
மனுவிற்கு அறிவுரை மாபெரும் நாரதர்தர
மகளான தேவஹூதி மனைவி சதரூபை
இவரோடு கர்த்தமனை இனிதே கண்டான்

6.
தேவஹூதி என்ற தேவமங்கை அவளுடன்
தேவன் உந்தன் திருவடி வணங்கி
தொண்டினை செய்து துயரம் களைந்து
அண்டம் காக்கும் அன்பினை செலுத்தினான்

7.
மனைவிகள் விருப்பத்திற்கு மனமும் இரங்கி
மனைவியுடனே விமானம் மண்ணிலே செய்து
வானத்தின் அழகிய வழிகளில் வலமும்வந்து
தானாக உன்புகழ் தரணியில் பரப்பினான்

8.
ஒன்பது பெண்கள் உலகிலே பெற்று
உன்பால் ஈடுபாடு உள்ளத்தால் கொண்டு
காட்டுக்கும் செல்லாமல் கர்த்தமன் அங்கே
வாட்டிய மனதுடன் காத்து நின்றான்

9.
உன்னையே வணங்கி உன்னையே நினைத்த
உன்னருமை தேவஹூதியின் உதிரத்தில் உதித்த
பரமாத்மா கபிலர் பரந்தாமா நீயே
அறத்தினை உணர்த்தும் அன்பான கபிலரே

10.
கபிலனாய் வந்தவனே கருணைக் கடலே
அகிலம் காத்திட அவதாரம் செய்தவனே
கூட்டமான நோய்களை குணமாக்க வருவாய்
வாட்டங்கள் போக்கிட வாசுதேவன் வருவாய்.

பதிகம் 15

கபில உபதேசம்

1.
சிற்றின்பம் தந்திடும் சிக்கலான சுமைகள்
பெற்றுவிட்ட பக்தியே பேரின்பம் ஈந்திடும்
கற்றுவிடு பக்தியுடன் கருத்தினை சீராக்கி
பற்றினை அழித்து பரமானந்தம் பெற்றுவிடு

2.
தத்துவங்கள் இருபத்திஐந்தை தந்தாய் தேவஹூதிக்கு
பத்து இந்திரயங்கள் பற்றினை விட்டுவிட
மஹத் பிரகிருதி மனம்ஐந்து மாத்திரைகள்
அஹங்காரம் ஐந்துபூதங்கள் ஆன்மா அவையென்றாய்

3.
பிரகிருதி குணங்கள் பிறவியைத் தாக்க
அறிந்து உண்மையை ஆராய்ந்த அறிவில்
பற்றுகள் புருஷனை பற்றாமல் நீங்க
கற்பிக்க நீயும் கபிலனாய் வந்தாய்

4.
திருமேனி கருடன்மேல் திகழும் அழகு
உருவம் அணிகலனுடன் ஒளிரும் பச்சிலை
தூயமனம் தியானிக்க தோன்றும் உருவமே
ஆஸனம் மூலம் அடையலாம் என்றாயே

5.
உன்னைப் பற்றி உளமார கேட்க
உன்புகழ் பாடி உல்லாசமாய் இருக்க
வெள்ளம் போலவே வீறுகொண்டு பக்தி
கள்ளம் இல்லாது காத்து நிற்குமே

6.
இல்லறம் காக்கவே இரவும்பகலும் உழைத்து
கல்லாது பக்தியை கடைபிடிக்காது மறந்தால்
பெண்ணாசை பொன்னாசை பெற்றுத் திரிந்தால்
மண்ணிலே நரகமே மனிதனுக் கென்றாய்

7.

கருவிலே அறிந்து கருத்தினை இழந்து
வருத்தமுடன் பிறந்து வாலிபத்தில் வளர்ந்து
பருவத்தில் மதியிழந்து மயக்கத்தில் ஆழ்ந்து
பெருந்துன்பம் அடையும் பேதைமை உரைத்தாய்

8.
தேவர்களை வழிபட்டு தேடிச்செல்லும் வழிகளை
தேவஹூதிக்கு சொல்லிட தேவன்நீ வந்தாய்
அறங்கள் புரிவார் அடைவார் தட்சிணாயவழி
மறந்து பற்றற்று மனமடையும் உத்தராயணவழி

9.
அறிய வேண்டிய அறிவெல்லாம் சொல்லி
அறியவைத்து தேவஹூதிக்கு அருளைப் பொழிந்தாய்
பக்தியின் மேன்மையில் பரமனை அடைந்து
முக்தியை அவளும் முன்னின்று பெற்றாள்

10.
குருவாயூர் தலைவனே குலங்களை காப்பவனே
திருவடி தாமரையை திறம்பட பற்றினேனே
என்னை தாக்கிய எல்லா நோயும்நீக்கி
உன்மேல் பக்தியை உண்டுசெய் நீயே!

பதிகம் 16
நர நாராயண அவதாரம்/ தட்சன் யாகம்

1.
பிரம்மனுக்கு மகனாகி பிரஸூதியை மணந்தான்
பிறந்த பதிமூன்று பெண்களை தருமனுக்களித்தான்
ஸுவதாவை பித்ருவுக்கும் ஸுவாஹாவை அக்னிக்கும்
ஸதியை சிவனுக்கும் ஈந்தான் தட்சன்

2.
நரனும் நாரயணனும் நலமாய் இணைய
அறமுள்ள மூர்த்தி அவனைப் பெற்றாள்
தேவர்கள் மகிழ்ந்து தோத்திரங்கள் செய்ய
மலர்கள் பொழிய முரசுகள் அதிர்ந்தனவே

3.
ஒருவர் தவமும் ஒருவர் போருமாய்
இருவடிவ நரநாரயணனாய் இனிதே ஆண்டாய்
ஆயிரம் கவசங்கள் ஆங்கே சூழ்ந்த
ஆயிரகவச அசுரனை அழித்துக் கொன்றாய்

4.
உன்னுடன் பிறந்தவரோடு உயரிய பத்ரியில்
பின்பற்றிய நெறியோடு பெருமையுடன் வாழ்ந்தாய்
உன்அமைதி உன்அடக்கம் உளமறிந்து இந்திரன்
தன்வலிமையால் மன்மதனை தந்திரமாய் ஏவினான்

5.
மன்மதன் அங்கே மயக்கிட வந்தான்
தன்னுடன் வஸந்தன் தென்றலை கொணர்ந்தான்
அழகிய தேவகன்னிகை அம்பினால் அடித்தான்
அழகான நீயோ அசையாது உரைத்தாய்

6.
மன்மதனே வஸந்தனே மரியாதை தருகிறேன்
என்மனம் மகிழவே ஏற்றுக் கொள்ளுங்கள்
கண்ணுக்கு அழகாய் கவர்ந்திடும் பெண்களை
மண்ணிலே அவர்முன் மயக்கிட வைத்தாய்

7.
ஒன்றாய் திரண்டவர் உள்ளமும் மயங்க
அன்றே அவர்செருக்கை அழித்த நறுமணமே
அழகிலே சிறந்த அபூர்வ ஊர்வசியை
அழகாய் உருவாக்கி அவருக் களித்தாய்

8
உன்கதை கேட்டு உள்ளம் கலங்கி
இந்திரன் மயங்கி ஊர்வசி கண்டான்
அழகிலே சிறந்து அமைதியில் சிறந்து
அழகிற்கழகான அருமைக் கண்ணனே

9.
புகழுக்கு மயங்கி புவியில் தட்சன்
இகழ்ந்து உன்னை ஏளனம் செய்தான்
சிவனை பகைத்து ஸதியை அவமதித்து
அகமும் அறிவையும் இழந்து நின்றான்

10.
சிவனும் தட்சனை சினந்து அழிக்க
அவனியில் தேவர்கள் அமைதியை வேண்ட
உன்னருள் பெற்று உயிர்பெற்று எழுந்தான்
என்னையும் நீயே எழிலாய் காப்பாய்

பதிகம் 17

துருவ சரிதம்

மனுவின் மகனாகி மன்னனாய் இருந்தான்
அவனும் உத்தானபாதன் என்று அழைக்கப்பட்டான்
இருமனைவியர் கொண்டே இனிதே வாழ்ந்தான்
ஸூருசியிடம் ஸூநீதி சுகமாய் கொண்டான்

அன்புக்கு பாத்திரமான அழகான ஸூருசி
தன்மகன் உத்தமனை தந்தைமடி ஏற்ற
கணவன் அன்பை கண்டிராத ஸூநீதி
மகனான துருவனை மடியிலேற்ற மறுத்தாள்

மனைவியின் சொல்லுக்கு மயங்கிய மன்னன்
அணைக்காது துருவனை அவமதித்து அனுப்ப
அன்னையை அவனும் அணுகிச் செல்ல
உன்னை சரணடைய உத்தரவு தந்தாள்

ஐந்துவயது நிரம்பிய அழகிய துருவன்
மந்திரம் கற்று மதுவனம் சென்றான்
நாரத முனிவர் நடுவில் கண்டு
சாரமாய் சாத்திரம் பலவும் கற்றான்

சுடுசொல் தாங்காது சுந்தர துருவன்
கடுந்தவம் புரிந்து காட்டில் இருந்தான்
மகனைப் பிரிந்து மன்னனும் வாட
சுகமின்றி மாதங்கள் சுழண்டு ஓடின.

தசைகள் செய்த தவத்தின் வலிமையில்
திசைகள் யாவும் திணறிய மூச்சில்
உன்வடிவம் மட்டுமே உள்ளத்தில் கொண்டவன்
முன்னால் உந்தன் மூர்த்தியும் தெரிந்ததே

அதிசய அழகில் ஆனந்தப் பெருக்கில்
மதிமயங்கி துருவன் மகிழ்ந்து நின்றான்
தன்னையே மறந்து கண்மல்கி நின்றான்
கன்னத்தில் நீயும் சங்கினால் தொட்டாய்

துருவனை வாழ்த்தி தூயவனாய் செய்தாய்

கருத்தினை அறிந்து கண்ணீர் துடைத்தாய்
அரசாளும் பதவியை அள்ளிக் கொடுத்தாய்
சிறந்த பதவியை சின்னமாய்த் தந்தாய்

வேந்தனும் உன்னருள் வேண்டி செல்ல
தந்தைக்குப் பின்மகன் தாரணி ஆண்டான்
எல்லா வளமும் எல்லா செல்வமும்
எல்லா விருப்பங்களும் இனிதே பெற்றான்

உத்தமன் உயிரை இயக்கன் எடுக்க
யுத்தம் செய்யவே ஆயத்தம் ஆனான்
போரினை நிறுத்த குபேரன் மகிழ
வாரிநீயும் வரங்களை வளமாய் தந்தாய்

இறுதியில் அன்னையுடன் இவ்வுலகம் விட்டு
உறுதியான அன்பில் உன்பதம் சேர்ந்தான்
அடியாரைக் காக்கும் ஆனந்த கண்ணனே
அடியேன் நோயை அறவே போக்கிடு

பதிகம் 18
ப்ருது சக்ரவர்த்தி சரிதம்

அங்கன் என்றொரு அரசன் துருவனின்
சங்கத்தில் பிறந்தானே- தூயவன் அவனுக்கு
வேனன் மகனாய் பிறந்து துர்நடத்தை
ஆனதால் காட்டுக்கு அங்கன் சென்றானே

பாவியான வேனன் பாராளும் மன்னனாக
சேவித்து மக்கள் செருக்கினை வளர்த்தனர்
தன்வலிமை புகழ்ந்து தந்நல வேனன்
உன்வேள்வி தடுத்து உலகிலே வாழ்ந்தான்

முனிவர்கள் சேர்ந்து முன்னால் வந்து
தனியன் அவனுக்கு தருமத்தை சொல்ல
என்னினும் மிக்கவன் எவனும் இல்லையென
உன்னை இகழ்ந்து உயிரையும் இழந்தான்

வேந்தன் உடலை வேண்டும் என்று
பாந்தமாய் ஸூநீதை பாதுகாத்து வைக்க
தொடையைக் கடைய தொலைந்தது பாவங்கள்
கடையக்கடைய நீயுமங்கே கையினில் தோன்றினாய்

பாணர் உன்புகழ் பாடிநிற்க நீயும்
மாணப் பெரிதாய் மகத்தான பிருதுவே
துன்பங்கள் யாவும் தாங்கிய நிலமகளை
இன்பமாய் இங்கே இவ்வுலகில் எழவைத்தாய்

நிலமகள் காமதேனுவாக நிலைத்த தலைவர்கள்
உலவும் கன்றாக உயரிய தேவர்கள்
பால் கறந்துமகிழ பாத்திரங்கள் தந்து
மால்நீ உணவுகளை மகிழ்வுடன் அளித்தாய்

மூன்று உலகிற்கும் முதன்மை ஆனவனே
சான்றாய் அசுவமேதம் சாத்தியம் ஆக்கினாய்
இந்திரன் பொறாமையில் இழிந்த வேடனாகி
தந்திரம் செய்திட தானேபின்னர் தோற்றான்

அசுவத்தை அடிக்கடி அபகரித்த இந்திரனை
அசுவனிடம் தோற்றவனை அம்முனிவர்கள் தாக்க
பிரம்மனே அவர்களை பொறுக்க சொன்னான்
பிரபஞ்ச மூலவனே பீதாம்பர திருமாலே

கங்கையின் கரையில் காத்தபடி தவமிருந்து
மங்காத பக்தியில் மகிழ்ந்து தளைக்க
நன்மைகளை சொல்ல நல்லதொரு சனகர்
அன்று முனிவர்களுக்கு அழகாய் சொன்னார்

குருவாயூர் தலைவனே குலங்களைக் காப்பவனே
அருளிய சனகர்மூலம் அறிவினை பெற்றாய்
உன்வடிவம் அடைந்து உருவத்தில் பிருதுவானாய்
என்நோய்கள் போக்கி என்றும் காப்பாய்

பதிகம் 19

ப்ரசேதஸ்ஸூக்களின் வரலாறு

பிருதுவுக்கு மகனாக வஜிதாசுவன் வந்தான்
உருவாய் ஹவிர்த்தானன் ஒருபிள்ளை பிறந்தான்
அவனுடைய மகனும் அறங்கள் செய்தான்
அவனுக்கு ப்ரசேதஸ்ஸூக்கள் அழகாய் பிறந்தனர்

படைக்கும் ஆர்வத்தில் பத்துபேரும் கடலை
அடைந்து கடுந்தவம் ஆர்வமாய் செய்தனர்
கடலின் கரையில் கருத்தை கவர்ந்த
தடாக நிலையை தானும் அடைந்தனர்

அப்போது உருத்திரன் அந்த தடாகத்தை
தப்பாது வந்தடைய தடாகம் குளிர்ந்தது
பக்தர்களை கண்டவன் பரந்தாமன் குணங்களை
கற்பிக்க தோத்திரங்கள் கருத்துடன் பாடினான்

உன்னை வழிபட்டு உன்னுள் கலந்திட
உண்டான ஆனந்தம் உளமார சுவைக்க
பதினாயிரம் ஆண்டுகள் பாடிதுதித்து மூழ்க
அதிசய தவத்தை அவர்கள் செய்தனர்

வேள்வியை அழிக்கும் வேனனும் மாறிட
கேள்வியில் சிறந்து கும்பிட்டு நிற்க
தந்தையும் நாரதர் தந்த அறிவில்
விந்தையாய் உன்னால் வீடுபேறு பெற்றான்

கருடன் மீதமர்ந்து காட்சி தந்தாய்
திருக்கரங்கள் எட்டிலும் திவ்யமாய் ஆயுதங்கள்
அருளிடும் பேரொளி அள்ளி வீசிட
உருவத்தை பக்தருக்கு உளமார காட்டினாய்

வரங்கள் ஏதும் வேண்டாத போதும்
வரங்களை அவருக்கு வாரி அளித்தாய்
எப்போதும் உன்னினைவு எழிலாய் கொண்டிட
தப்பாது உந்தன் தாளடி பணியவைத்தாய்

மரங்களின் பெண்களை மணந்து வாழ்ந்திட
வரங்கள் பலநூறு வழங்கி வாழ்த்தினாய்
பிறக்கும் தட்சனை பேணிக் காத்திட
அறங்கள் செய்து அருளிச் சென்றாய்

நிலத்தை மறைக்கும் மரத்தை எரிக்க
உலகில் அவர்கள் உள்ளம் கொள்ள
தடுத்து அவர்கள் தருமம் காக்க
அடுத்து பிரம்மன் ஆங்கே வந்தான்

தட்சன் மகனாகி தரணியில் பிறக்க
பெற்ற ஆனந்தம் பேரின்பம் ஆகிட
அருளும் நாரதர் அவர்களுக்கு வழிகாட்ட
குருவாயூர் தலைவனே காத்தருள வேண்டும்

பதிகம் 20
ரிஷப யோகீஸ்வர சரிதம்

அரசன் பிரயவிரதன் அன்பான மகன்
வரங்கள் பெற்றிட வேள்விகள் செய்தான்
அக்னியின் நடுவிலே அருளுருவம் கண்டான்
பக்தி பெருகி பரவசம் கொண்டான்

உன்னையே துதித்து உள்ளம் மகிழ்ந்து
கண்மூடி தவமிருப்போர் கண்முன் வந்தாய்
நாபிக்கு மகனாக நானே பிறக்கிறேன்
சோபித்து அக்னியில் சொல்லி மறைந்தாய்

நாபியின் மகனாக நாடிநீ பிறந்தாய்
வியாபித்து ரிஷபனாய் வந்து பிறந்தாய்
நற்குணங்கள் பலகொண்டு நாட்டினை ஆண்டான்
கற்றறிந்த மக்களை காத்து நின்றான்

அரசன். நாபியும் அரசாங்கம் அளித்து
வரங்கள் பெற்றிட வனவாசம் சென்றான்
உன்னையே எண்ணி உலகில் தவமிருந்து
உன்னை அடைய உன்னுலகம் வந்தான்

இந்திரன் கொண்ட இதமில்லா பொறாமையில்
மந்திரம் செய்து மழையின்றி மக்கள்தவிக்க
தந்திரம் செய்து தரையில் மழையிறங்க
வந்தனம் செய்து வளங்கள் அளித்தாய்

இந்திரன் மகளை இனிதாய் மணந்து
சிந்தை மகிழ்ந்து சித்தம் குளிர்நதாய்
பெற்ற பிள்ளைகள் பலரும் இருக்க
மற்றவரில் மூத்தவராய் பரதன் ஆனான்

பரதன் நாடாள பாரதம் ஆனது
சிறந்த யோகிகளாய் சிலர் மாறிநிற்க
ஒன்பது பகுதிகளாய் உன்தேசம் மாற
சன்மாரக்க நெறியில் சாத்திரம் படித்தனர்

பக்தியுடன் மோட்சம் பதவியாய் பெற்றிட
முக்திக்கு வழிதேடி முன்னின்று சென்றிட
பித்தனாய் மாறியே பேயனாய் ஆனாய்
உத்தமனாய் வைராக்யம் உளமாரக் கொண்டாய்

பரமாத்ம உருவாய் பாரினில் அலைந்தாய்
தரங்கள் மாறாது தளிராய் இருந்தாய்
மண்ணுலகம் முழுதும் மாறாது திரிந்தாய்
விண்ணுலக ஆனந்தம் விளைந்திட மகிழ்ந்தாய்

இரைதேட மறந்தாலும் இனங்களை காத்தாய்
உரைக்க முடியாத உயர்வை கொண்டாய்
குடகுமலை பகுதியில் குருவாயூர் தலைவனே
தடங்கள் பதித்த தாமரை மணாளனே

21
பதிகம்
ஒன்பது நாடுகளும் ஏழு தீவுகளும்

நடுவில் இருக்கும் நாடு இளாவிருதம்
அடுத்து பார்வதியை அப்பெண்கள் வணங்க
மந்திரங்கள் மூலம் மனமார சிவனை
சுந்தரமாய் வணங்கி ஸ்தோத்திரம் செய்தனர்

பத்திராசுவம் என்றநாடு பக்கத்தில் இருக்க
பத்திரமாய் வேதங்களை பிரளயத்தில் நீகாக்க
அத்தகைய உன்னை அனுதினம் தியானிக்க
சித்தமும் நித்தம் சிந்தித்து நிற்கும்

தெற்கில் ஹரிவருஷம் திறம்பட திகழ்ந்தது
வெற்றி திலகமாய் வீற்ற உன்னை
பற்றுடன் உன்னை பிரகலாதன் பாடிநிற்க
கற்றறிந்து உன்னை கருத்துடன் வணங்கினேன்

கேதுமாலம் நாட்டில் கேளிக்கை புன்முறுவல்
ஏதுவாய் உன்விளையாட்டை ஏற்றமுடன் கொண்டாட
இலக்குமி பிரம்மன் இவர்களும் வணங்க
இலக்குமி அன்பிற்கு எழிலான மன்மதனானாய்

வடக்கில் அமைந்த வைவஸ்த மனுவும்
அடக்கமுடன் உன்னடி அணைத்து வணங்க
யோகியாக உள்ளத்து யௌவன சுந்தரனே
வேதியர் வணங்கிடும் விந்தையான மீனவடிவமே

அறிவில் சிறந்து ஆற்றல் உடையவனே
அறியா முடியாத ஆமை வடிவமானவனே
அர்யமா என்பவன் அடிபணிந்து வணங்கிய
தர்மம் காக்கும் தூயோனுன்னை துதிக்கிறேன்

யாகத்தில் தோன்றிய வராக மூர்த்தியே
மேகத்தைத் தொட்ட கோரப்பல் மேனியோனே
சோகத்தை மறந்து சுந்தரமகள் தொழுதாளேஎன்
ரோகத்தை போக்கிடு ரம்மியம் சேர்த்திடு

தெற்கிலே உள்ள திறமான நாட்டில்
வற்றாத அனுமன் வணங்கி நின்றான்
பொற்றாமரை சீதையின் பொக்கிஷ இராமனே
உற்றோமாய் கொண்டோம் உளமார வணங்குவோம்

பரதக் கண்டத்து பக்தர்கள் பலராலும்
சிறந்த நாரத சீரிய அறிவாலும்
நண்பனாய் நிற்கும் நாராயணப் பெருமாளே
என்னைக் காத்தருளி இனிமை தரவேண்டும்

சால்மலித் தீவில் சந்திரனே லட்சத்தீவில்
மால்சூரியனே சாகத்தீவில் மாறாத காற்றே
குசத்தீவில்  தீயான கொழுந்தே கிரௌஞ்சத்தீவில்
நிஜமான நீரே நீரே பிரம்மனே

திருப்பாறகடலில் பள்ளிகொண்ட திருமால் ஆனவனே
திருவடி தொழுத திருபக்தன் துருவனுடன்
விண்மீன் கூட்டத்து வித்தை கிரகங்களுடன்
அண்ணல் நீயேநரகம் அண்டாது காப்பாய்

ஆதிசேட உருவமே அசையும் குண்டலமே
ஆதியும் அந்தமும் ஆகிநின்ற வடிவமே
கலப்பை ஏந்திய கரமே பாதாள
உலகாளும் அரசேஎன் உடல்நோய் போக்குவாய்

பதிகம் 22
அஜாமிளன் மோட்சம்

அஜாமிளன் என்றொரு அந்தணன் இருந்தான்
அஜாமிளன் இல்லறத்தில் அறவழியில் சென்றான்
தந்தை சொல்கேட்டு காட்டுக்கு சென்றான்
தந்திர காமவலையில் தடுக்கி விழுந்தான்

தருமத்தை விட்டு தரம்கெட்டு திரிந்தான்
அருமை மகனிடம் அன்பு செலுத்தினான்
உன்பெயர் சொல்லியே உளமார அழைத்தான்
இன்பத்தில் திளைத்து இனிதே வாழ்ந்தான்

இறக்கும் நேரத்தில் எமனும் வந்தான்
பிறந்த பயனில் பெயரை அழைத்தான்
நாராயணா என்றே நாமம் சொன்னான்
வாராத வலிமை வசமாய் கொண்டான்

தீயஉள்ளம் கொண்டாலும் திருப்பெயர் சொன்னான்
தூயஉன் நாமம் துணிந்து சொன்னான்
நாற்கரங்கள் கொண்ட நாராயண ஆட்கள்
நாற்புறம் சூழ்ந்து நலமாய் காத்தனரே

கயிற்றால் கட்டிய கடினமான ஆட்களை
உயிரை எடுக்க ஓடிவந்த எமதூதர்களை
விட்டுவிடு என்றுசொல்லி விரைந்து காத்தனரே
தொட்ட பாவம்யாவும் தொலைந்து போயிற்றே

பாவங்கள் பலஅவன் பயமின்றி செய்ததை
கோபமாய் எமதூதர் கொந்தளித்து சொல்ல
புரிந்த பாவமெல்லாம் போய் தொலையுமே
அறியாது சொன்ன ஹரிநாம பலனில்

வேதங்கள் நோன்புகள் விரட்டும் பாவத்தை
ஓதஅவை அறிவை ஒழிப்பது இல்லை
நாராயண திருமந்திரம் நலமாய் பாவத்தை
கோராது அழித்து குலமும் காக்குமே

ஆயிரம் பிறவியில் அறியாது செய்பாவங்கள்
வாயினால் நாராயணா வந்தனை செய்திட
ஓடிஒளியுமே உன்நாம ஓங்கார பலமே
பாடிய பலனே பக்தரைக்  காக்குமே

நெருப்பு எரிக்கும் நிஜமான விறகை
மருந்து குணமாக்கும் மாயஉடல் நோயை
திருப்பெயர் உரைப்பது திருவருள் தருமே
மறுப்பின்றி உலகில் மனிதரைக் காக்குமே

விலகிய எமனை விடுத்து அஜாமிளன்
உலகில் தியானித்து உன்னை நினைத்தான்
உன்திருவடி நினைத்து உன்னையே அடைந்தான்
உன்மலர் பணிந்து உன்னுலகம் வந்தான்

அஞ்சிய எமன் ஆணை இட்டான்
தஞ்சமென்று உன்னடி தனை வேண்டியோரை
நெருங்காது இருக்க நெஞ்சம் கொண்டான்
குருவாயூர் தலைவனே குலம் காப்பாய்

பதிகம் 23
தக்ஷ சரிதம் சித்ரகேது உபாக்யானம்

தட்சன் உன்னை தன்படைப்பு பெருக
தட்டாமல் பூஜிக்க தயாளன் நீயும்
எட்டுக் கரங்களுடன் எழுந்தருளி நின்றாயே
அக்கணம் அவனுக்கு அஸிக்னீ அளித்தாயே

அவன் மக்கள் ஆயிரம் ஆயிரமாய்
கவனமாய் உன்வழியை கருத்தில் கொண்டு
நாரதன் அறிவுரையை நாளும் பற்றினரே
நாரதன் நிலையில்லா நாடோடியாக சபித்தானே

குலமும் பெருகிட குலப்பேரன் விச்வரூபன்
உலகத்தில் இனிய உன்நாமம் ஓதிட
தேவர்கள் அசுரர்கள் தோற்கடித்து செல்ல
ஆவதைச் செய்திடும் ஹரி நாராயணனே

சூரசேன நாட்டின் சித்திரகேதுவும் மகனுக்காக
தாரங்கள் சூழவேண்டி தாளடி பணிந்தான்
அங்கிரஸ முனிவர் அருளிட பெற்றான்
மங்கையர் சதியில் மகனை இழந்தான்

நாரதர் அங்கே நடுநாயகமாய் வந்து
இறந்த மகனை எழவும் செய்தார்
யாருக்கு பிள்ளைநான் என்றவன் கேட்டிட
யாவருக்கும் உரியவனே யௌவன சுந்தரனே

மந்திரங்கள் கற்று மன்னன் உன்னையே
சிந்தை நினைத்து சிறப்பாய் வாழ்ந்தான்
ஏழு நாட்களில் எழிலான தலைவனாகி
வாழும் வாழ்வில் வந்தனம் செய்தான்

வெண்மை நிறத்துடன் வீற்ற உன்னுருவம்
தண்டின் அழகுடன் தாமரைபோல் இருக்க
கண்முன் தோன்றி கருத்தினை உரைத்தாய்
மண்ணிலே சித்திரகேது மகிழ்ந்து நின்றான்

சிறந்த பக்தர் சித்திரகேது சிற்றின்பங்களை
துறந்து உன்னையே தொழுது நின்றார்
வித்தியாதரப் பெண்கள் வித்தையாய் பாட
சித்தம் மகிழ்ந்து சிறப்புடன் வாழ்ந்தான்

பற்றுகள் நீங்கி பரமசினைக் கண்டான்
மற்றவை துறந்தவன் மனைவியுடன் இருந்த
சங்கரனைப் பார்த்து ஏளனம் செய்தான்
அங்கே பார்வதி அவனை சபித்தாள்

அஞ்சாது சித்திரகேது அசுரனாகப் பிறந்தான்
தஞ்சம் என்று உன்தாள் பணிந்து
இந்திரனுடன் போரிட்டு இருப்பிடமாய் வைகுண்டம்வந்து
மந்திரமாய் உன்நாமம் மகிழ்ந்து சொன்னான்

அன்று அசுரர்களின் அன்னை இந்திரனை
கொன்றுவிட முயன்றிட குருவாயூர் தலைவனே
உன்னையே பூஜித்த உன்னினைவு கொண்டால்
என்னையும் காத்து இவ்வுலகையும் காப்பாய்

பதிகம் 24
ப்ரஹ்லாத சரிதம்

மதுவின் பகைவன் மதுசூதனா உன்னருளால்
அசுரன் ஹிரண்யாட்சன் அழிந்து போனான்
அவன் சகோதரன் கசிபுவோ உன்மேல்
சினம் கொண்டு சீறியே நின்றான்

உன்னைக் கொல்லவே உலகில் கடுந்தவம்
தன்னாலே முடியுமென்று தவமும் புரிந்தான்
மனிதர்கள், தேவர்கள், மிருகங்கள் கொல்லாத
இனிய வரத்தை, இறவாமையை பெற்றான்

தேடிஉன்னை கொல்ல தேவலோகம் வந்தான்
ஓடிவந்து வைகுண்டம் உள்ளே நுழைந்தான்
நுண்ணிய மேனியில் நுழைவது தெரியாது
விண்ணிலே உன்னைக்காணாது வென்றதாய் எண்ணினான்.

தரமான பிரஹ்லாதன் தரணியில் பிறந்தான்
வரதா, உன்னருளால் வந்து பிறந்தான்
உருவிலே அசுரனானாலும் உத்தம குழந்தையாய்
கருவிலே பக்தியுடன் கடவுள்புகழ் கேட்டான்

பாடிய பிரஹ்லாதனுக்கு படிப்பிக்க ஆசிரியர்களை
கொடியவன் கசிபு கோபத்துடன் அனுப்பினான்
அவன்புகழ் சொல்லி அடிமைபடுத்த, பிரஹ்லாதன்
கவனமாய் அவற்றை கருத்துடன் தள்ளிவிட்டான்

படித்ததில் சிறந்தது பாரினில் எதுவெனக் கேட்க உன்
அடிகளைப் பணிவதே அகிலத்தில் சிறந்ததென்றான்
இயற்கையில் கொண்டான் இந்தஅறிவு என்றவர் சொல்ல
வியந்து ஹிரணியகசிபு வீரியம் கொண்டான்

சூலங்கள் குத்திட சுற்றிலும் பாம்பிருக்க
மூலமாய் நம்பியவனை மிதிக்க யானைகள்வந்திட
உலையும் வேகாது பட்டினிபோட உயர்ந்த
மலையில் உருட்டிவிட.... உன்னையே வணங்கினான்

அடியவன் உன்னையே அனுதினம் துதித்த பிரகலாதன்
கொடியவன் கசிபு கோபத்தின் காரணத்தில்
கட்டி வைத்தாலும், கருத்தினில் பக்தியுடன்
மட்டில்லா மகிழ்வுடன் மற்றவருக்கும் சொன்னான்

சிறுவர்கள் கூட்டம் சிந்தையில் உன்னைக்கொள்ள
உறுப்புடன்  கசிபு உரக்க கூவினான்
உனக்கு யாரிங்கு உறுதுணை என்றுகேட்டான்
எனக்கு வைகுண்ட நாராயணனே துணையென்றான்

எங்கே அவன் என்றே வினவ
இங்கே என்று இத்தூணைக் காட்ட
விஷ்ணுவே நடந்ததை விவரிக்க வார்த்தையுண்டோ
கஷ்டங்கள் போக்கி காத்தருள்வாய் தேவா!

பதிகம் 25
நரசிம்ம அவதாரம்

காதைப் பிளக்கும் கர்ணகொடூர ஒலியே
தூணைப் பிளக்க தொடையும் நடுங்குமே
அண்டத்தில் அசையும் அசையா பொருளும்
கொண்ட அச்சம் குறையாது நீளுமே

அச்சத்தில் இருந்த அசுரன் கண்டான்
உச்சத்தில் உதித்த ஒருவடிவம் கண்டான்
மிருகமும் இல்லாமல் மனிதனும் இல்லாமல்
உருவத்தில் விநோதமாய் உன்னதமாய் நீவந்தாய்

பொன்னைப் போல் பூத்தகண்கள் உருக்குமே
விண்ணைத் தொடும் விரிந்த பிடரிமயிரே
வாளைப் போல் வளைந்த நாக்கே
கோரைப் பற்களே! குகைபோல் திருமுகமே

கன்னத்தின் கோடுகள் கண்ணுக்கு அச்சமே
மின்னும் நகங்கள் மேனியின் பிளவுகள்
பருத்த கைகள் பரவிய முழக்கங்கள்
உருவமான நரசிம்மனே உன்னை வணங்குகிறேன்

இவன் விஷ்ணுவே இவனைக் கொல்வேன்
அவனும் கதையை அப்படியே தூக்கிவர
இருகையால் நீயவனை இறுக்கி பிடிக்க
விறுவிறுவென்று மற்போர் வியப்பாய் நடந்ததே

பதரான அவனை பதமாய் பிடித்து
கதவின் படியில் கால்தொடையில் வைத்தாய்
நகங்களின் உதவியில் நரனைப் பிளந்தாய்
மகத்தான வதம் மடியிலே செய்தாய்

கொட்டும் உதிரத்தைக் குடித்து மகிழ்ந்தாய்
விட்டெறிந்து உடலை வீரியமாய் குதித்தாய்
நிலமும் சுழன்று நில்லாது ஆடியதே
உலகமே கலங்கி உன்னைக் கண்டதே

உன்னைக் கண்டாலே உள்ளத்தில் அச்சமே
உன்னிடம் வரவே உலகமே அஞ்சியதே
சிவனும் பிரம்மனும் இந்திரனும் அஞ்சிட
அவரவர் தனியே அன்புடன் துதித்தனர்

குறையாத உன்சினம் குறைக்க பிரகலாதன்
உரைத்தான் அஞ்சாமல் உன்புகழ் பாடினான்
தலையில் கைவைத்து தந்தாய் அருளை
அலையாத மனமருளி அவனை அணைத்தாய்

இப்படி திருவிளையாடி இங்கே எழுந்தாய்
எப்படி பாடுவது எப்பேர்பட்ட பெருமை!
அன்பினால் பக்தரை அணைக்கும் அப்பனே
என்பிணி யாவும் எடுத்து எறிவாயே!

பதிகம் 26

கஜேந்த்ர மோக்ஷம்

பாண்டிய மன்னன் பக்தியின் தியானத்தில்
ஆண்டவன் உன்னையே ஆழமாய் சிந்தித்தான்
அகத்தியர் வருவதை அறியாது இருந்தான்
ஜகத்தில் விருந்தினராய் வந்தவரை மறந்தான்

கடுஞ்சினம் கொண்ட அகத்தியர் அவனை
அடுசொல் சொல்லி அசையாத யானையாக்கினார்
இந்திரத்யுமன் உன்னை இதயத்தில் கொண்டு
கஜேந்திரன் வடிவில் கருமையாய் பிறந்தான்

உயிர்களில் எல்லாம் உத்தமனாய் பிறந்தான்
வலிமை கொண்டு வலமும் வந்தான்
திரிகூட மலையில் திரிந்து வந்தான்
சிரித்தபடி விளையாடி சிறந்து வாழ்ந்தான்

தன்னுடைய வலிமையினால் துன்பங்கள் இல்லாது
உன்னுடைய அருளால் உற்சாகமாய் வாழ்ந்தான்
வெயிலின் கடுமை வீறிட்டு இருக்க
அயர்ச்சியில் குளத்தில் அன்பரோடு விளையாடினான்

கந்தர்வன் சாபத்தில் கடிமுதலையான ஹூஹூ
அந்தக் குளத்துநீரில் அலைந்து வந்தது
காலை முதலை கவ்விய செயலே
வேலை அதுவும் வேந்தன் லீலையே

ஆயிரம் ஆண்டுகள் ஆங்கே அந்தயானை
ஓயாத வலையில் ஒடுங்கிப் போராடியது
தக்க கால தருணம் வந்தவுடன்
பக்தனுக் கருள பரகருணை செய்தாய்

முற்பிறவி பயனாய் முக்திநிலை அறிந்து
பொற்றாமரை அதனை பூவடியில் சூடவே
உண்மை உணர்ந்து உன்னையே துதித்து
வெண்தாமரை எடுத்து வேண்டி நின்றான்

ஆதிமூலமே என்ற அலறல் கேட்டது
ஜோதிவடிவம் நானில்லையென சிவனும் பிரம்மனும்
செல்லாது இருக்க சுந்தர ரூபனே
எல்லா உருவமே எழுந்தாய் கருடன்மேல்

சக்கரத்தை வீசியே சாபத்தை நீக்கினாய்
அக்கணமே முதலை அழகிய கந்தர்வனே
கரத்தால் தூக்கியே கருணையுடன் கஜேந்திரனை
வரங்கள் தந்து வாழ வைத்தாய்

விஷ்ணுவே இக்கதையை விடியலில் பாடுபவர்
கஷ்டங்கள் போக்குவேன் கஜேந்திரனுக்கு சொன்னாய்
அவனோடு நீயும் அழகிய வைகுண்டம் சென்றாய்
அவனியில் நோயை அறவே போக்குவாய்.

பதிகம் 27

கூர்ம அவதாரம்

தேவப்பெண்ணிடம் பெற்ற தெய்வீக மாலையை
தேவர்களின் தலைவனிடம் துர்வாசர் தந்தார்
ஆவலில் இந்திரன் ஐராவதத்திற்கு அளிக்க
காலால் யானையும் கழற்றி மிதித்ததே

கோபத்தில் துர்வாசர் கொந்தளித்து இந்திரனுக்கு
சாபமும் கொடுத்ததில் சரித்திரம் பிறந்ததே
இளமை இழந்து இந்திரன் வாட
அழகும் இழந்து அத்தேவர்கள் வாடினரே

அவர்கள் பிரம்மனின் அருளை வேண்டிட
தேவர்கள் உடனே தெய்வமான உந்தன்
பெருமையைப் பாடி புகழ்ந்து நிற்க
அருளுரையாய் கடைக அமுதம் என்றாய்

தேவர்கள் அசுரர்கள் திகட்டாத அமுதம்பெற
ஆவலுடன் மந்திரமலையை அப்படியே மத்தாக்க
செருக்குடைய மலையும் செங்குத்தாய் நழுவிட
கருடன் மேலேறிநீ கடலிலே வைத்தாயே

மாசுகள் நீங்கிட மகத்துக்கள் பெற்றிட
வாசுகியை மத்தாக்கி வகையாய்க் கடைய
தேவர்கள் ஒருபுறம் தேவாதிதேவன் அருளில்
அசுர்ர்கள் மறுபுறம் மதுசூதன் அறிவில்

பாற்கடல் கலங்கி பாரெங்கும் அதிர்ந்தது
கார்மேகம் சூழ கடிமலை மூழ்கியது
உறுதியுடை ஆமை உடலாகி நின்றாய்
கருத்துடன் தேவர் கவலை போக்கினாய்

முதுகெலும்பு வலிதாய் முன்னால் சென்றாய்
அதுவே உறுதியென ஆமையாய் பிறந்தாய்
நீருக்குள் சென்று நிமிர்ந்து நின்றாய்
பாருக்குள் மலையை பார்க்கும்படி கொணர்ந்தாய்

பெருமலை மேலெழும்ப பெருமகிழ்ச்சி கொண்டனர்
இருந்தவர் எல்லோரும் இதமாய் கடைந்தனர்
வலிமை அளித்து வாசுகியைப் பேணினாய்
எளிதில் சோர்வை எடுத்து எறிந்தாய்

உயர எழுந்த உன்னத மலையை
துயரம் துடைக்கும் தூமலர் கரத்தால்
மெல்ல நீஅழுத்தி மெத்தனம் புரிந்தாய்
உள்ளத்தால் மகிழ்ந்து உன்னையே துதித்தார்

காற்றில் பாம்பின்நஞ்சு கலந்து வந்திட
ஆற்றல் தாங்காது அசுரர்கள் வாடினரே
சோகங்கள் போக்கும் சுகந்தனே உன்அருளாலே
மேகங்கள் தேவர் மேனியில் மழைபொழிந்தனவே

அஞ்சியே ஓடின அக்கடலில் திமிங்கிலங்கள்
தஞ்சமென்று உன்னை தேவர்கள் அடைய
இரண்டு கைகளால் இழுத்தாய் வாசுகியை
கரங்கூப்பித் தொழுகிறேன் காப்பாய் பிணிகளை.

பதிகம் 28
மகாலக்ஷ்மி சுயம்வரமும் அமுதத்தின் தோற்றமும்

கொழுந்தாய் நெருப்பு கொந்தளித்து எரிய
எழுந்த கடலுள் எழிலாய் தெரியுமே
காலகூடம் நஞ்சு கடலில் தோன்றிட
நீலகண்டம் பெற்றிட நெற்றிக்கண்ணன் விழுங்கினாரே

கடைய கடைய காமதேனு வந்தாள்
தடையின்றி அதனை தவமுனிவருக்குத் தந்தாய்
சிறந்த குதிரையும் சிறந்த யானையும்
விரிந்த கற்பகமும் விரும்பி தேவருக்கீந்தாய்

பாற்கடலில் லக்ஷ்மி பளிங்காய் தோன்றினாள்
பார்ப்போர் மனமெல்லாம் பரவசம் தந்தாள்
உலகம் எல்லாம் உணர்வில் மூழ்கி
கலங்கி தூயவளைக் கண்டு மகிழ்ந்தன

தேவர்கள் தலைவன் தேவேந்திரன் அப்போது
காவல்புரி நாயகனைக் கருத்தில் கொண்டு
மணிமயமான ஆசனம் மகாலக்ஷ்மிக்கு தந்தான்
பணிவோடு முனிவர்கள் பாலபிஷேகம் செய்தார்

உந்தன் கடைக்கண் ஓரமாய் விழுந்திட
மந்தகாச அவயங்கள் மாலையாய் மின்ன
மஞ்சள் பட்டாடை மகாலக்ஷ்மி தரிக்க
கொஞ்சும் அழகுடன் குண்டலங்கள் ஜொலித்தன

வண்டுகள் ஒலிக்க வசீகர நடையில்
அண்ணலைக் கண்டு அழகாய் நாணி
சிணுங்கும் சிலம்போடு சிங்கார மாலையோடு
அணுகும் நேரம் அதுவே சுயம்வரம்

குற்றங்கள் இல்லாத குணவான் நீயே
முற்றிலும் நற்குணங்கள் முழுதாய் பெற்றவன்
கற்றறிந்தார் அறிவார் காலத்தை வென்றவனை
உற்ற நேரத்திலவள் உன்னை அடைந்தாள்

பற்றுகள் அற்றவள் பரந்தாமனைச் சேர்ந்திட
குற்றமில்லா திருமால் கூடிய வேளையில்
திருமார்பில் அவளை திவ்யமாய் ஏற்க
உருவான உலகம் உற்சாகம் கொண்டதே

மயக்கும் அழகுடன் மந்தகாச வாருணீ
தயக்கம் இன்றி, தானென்ற செருக்கை
உண்டாக்கி, அறியாமையை உலகில் பெருக்க
அண்டத்தில் அவளை அசுரருக்கு ஈந்தாய்

புதிய மேகமாய் பொலிவான தலைவனே
அதிசய கரங்களால் அமுதத்தை ஏந்தி
மதிமயக்கும் தன்வந்தரியாய் மண்ணில் தோன்றினாய்
உதிக்கும் ஒளியே உடல்நோய் போக்குவாய்!

பதிகம் 29
மோகினி அவதாரம்
அமுதத்தை கொள்ளுதலும் அசுரரை அழித்தலும்

அமுத கலயத்தை அசுரர்கள் பிடுங்கி
சுமுகம் இல்லாது சுற்றத்துடன் சண்டையிட
அடைக்கலம் அடைந்த அத்தேவர்களை அமைதியாக்கி
கடைக்கண் நேரத்தில் காணாமல் மறைந்தாய்

அழகான பெண்ணாய் அன்னநடை நடந்தாய்
பழகிய அசுரர்கள் பார்வையைக் கவர்ந்தாய்
கவர்ச்சி மார்பு கலயங்கள் கொண்டாய்
அவளையே நோக்கி அசுர்ர்கள் வந்தார்

மான்விழி கொண்ட மங்கையைக் கண்டு
தேன்கலயம் அதனைத் திறம்பட தந்தார்
அங்கம் அசையும் அழகான மோகினியிடம்
பங்கிடும் பணியை பாங்காய் தந்தார்

எந்தன் செயலை ஏற்க வேண்டுமென்றாய்
தந்திரமாய் அவர்களை தனித்தனியே பிரித்தாய்
அமுதத்தை பங்கிட அற்புதம் செய்தாய்
சுமுகமாய் இருசாரராய் சூட்சமம் செய்தாய்

தேவர்கள் அமுதம் திகட்டாது பெற்றிட
பாவங்கள் உடையவரகள் பாத்திரம் பெற்றார்
பாதிஅமுதம் குடித்த பாவத்துடன் இராகு
ஆதிமூலன் உன்மூலம் அடக்கப் பட்டான்

கலயத்தை அசுரர் கைப்பற்றிய குற்றம்
கலகலப்பு உருவாக்கி கர்மவினை ஆனது
உலகிலே போரும் உடனே மூண்டது
சுலபத்தில் மாயை சூட்சியும் செய்தது

போரிலே தேவரைப் பேணிவிட வந்தாய்
ஊரிலே காலநேமி உடனே மாலிஅழிந்தான்
உலர்ந்ததாலும் நனைந்ததாலும் ஒருபோதும் அழியா
பலவரம் பெற்றநமுசி பாரிலேநுரையால் அழிந்தான்

நாரதர் சொல்படி போரினை நிறுத்தினாய்
வீரசிவனும் உன்னழகை விழியில் காணவந்தான்
பூதகசங்கள் பார்வதி பூரிப்புடன் வைகுண்ட
வேதநாயகனைக் காண வேண்டி வந்தான்

மனதைக் கவரும் மந்தகாச உருவத்தை
கணத்தில் பூஞ்சோலையில் காணவும் வைத்தாய்
மன்மதக் கணைகள் மகேசனைத் தாக்க
உன்னுடல் தழுவியே உள்ளம் மகிழ்ந்தான்

கண்ணைக் கவர்ந்த காமனும் மறைய
உண்மை அறிந்த உமாபதி உன்புகழ் பாட
மண்ணிலே உன்பெருமை மகேசன் உணர்ந்திட
விண்ணிலே விரிந்த விஷ்ணுவே காத்திடுவாய்

பதிகம் 30
வாமன அவதாரம்

பலிஎன்ற மாவீரன் பாரினை வசப்படுத்தி
வலியறியாது மீண்டும் வாழவே உயிர்பெற்றான்
இந்திரன் போரிலே இவனை அழித்தாலும்
தந்திர சக்தியில் திரும்ப வந்தான்

தேவர்கள் வாடுவதை தேவரன்னை கண்டிட
ஆவது தெரியாது அடைக்கலம் புகுந்தாள்
காசியப முனிவர் கடுந்தவம் செய்யச்சொல்ல
மாசில்லா உன்னையே மனதார சரண்டைந்தாள்

பயோவிரதம் அதனை பத்தினி காத்திட
தயாள கடவுளைத் தரணியில் கண்டாள்
சங்குசக்கர கதாபாணியாய் சத்தியம் செய்தாய்
மங்காத அழகுடன் மகனாய் பிறப்பேனென்றாய்

தவவலிமை மூலமே தன்கருவில் உன்னை
அவளும் தாங்க அழகான குழந்தையாய்
சங்குசக்கர உருவுடன் சரித்திர நாளில்
பொங்கும் பொலிவுடன் புவனத்தில் பெற்றாள்

மங்கல முரசும் மலர்களும் பொழிய
எங்கும் மகிழ்வு எல்லோரும் கொள்ள
வெல்க வெல்க என்றே வெற்றி முழக்கமிட
உல்லாசமாய்நீ பிராம்மண உருவம் பெற்றாய்

முனிவர்கள் உபநயனம் முதலாய் செய்திட
தனியனாய் நீயும் தகதகவென ஜொலித்தாய்
மேகலை தண்டம் மேனியில் தவழநீ
வேகமாய் அச்வமேத வேள்விக்குச் சென்றாய்

பின்னால் வரும் பேருருவை தெரிவிக்க
முன்னால் நிலமும் முறையாய் அதிர
பகைவரின் கொடுமை படாமல் இருக்க
வகையாய் குடையை வாகாய் ஏந்தினாய்

வடகரையில் இருந்த யாகசாலை சென்றாய்
இடத்திலே ஆசார்யர்கள் இருந்தபடி உன்னை
விண்ணின் சூரியனோ வெளிச்சமிகு அக்னியோயென்று
கண்டதும் ஆச்சரியத்தில் கவலை உற்றார்கள்

உன்னழகை கண்டவர் உள்ளம் உருகிட
தன்னாலே வந்து தாளடி வணங்கினர்
பக்தியில் மிகுந்த பலியும் ஓடிவந்து
சுக்ராச்சாரி அவரும்வர சுத்தம் செய்தான்

திருவடி அலம்பிய திருநீர் தலையிலே
கருத்துடன் ஏந்தி காலடி பணிந்தான்
நற்குலத்தில் பிறந்து  நம்பிக்கை கொண்டு
பொற்பாதம் தொழுதார் புண்ணியம் செய்தார்

பதிகம் 31
பலியின் செருக்கை அழித்தல்

திருமேனி ஒளியை திவ்யமாய் கண்டான்
ஒருவனே உயரியவனே உனக்கு யாதுவேண்டும்?
உணவோ வீடோ ஊருக்கான நிலமோ
கணத்தில் தருவேன் கர்வம் பொங்கினான்

எல்லாம் தருகிறேன் என்று சொன்னவனிடம்
சொல்லிய சொல்லின் செருக்கை அழிக்க
மூன்றடி நிலமே முன்னின்று கேட்டாய்
சான்றாய் நிற்கும் சரித்திர நாயகனே

உருவத்தில் சிறியவன் நீ உன்காலால் மூன்றடி
தருகிறேன் மேலும் தரணியைத் தருகிறேன்
நிலம் யாவற்றையும் நீபெற்றிட முடியும்
உலகத்து நாயகனே உன்னால் அவன்திமிர் அழிந்ததே

மண்ணில் மூன்றடி மகிழ்ச்சி தருமே
கண்ணில் அழகுடன் கருத்து சொன்னாய்
உன்னை அறிந்த உயரிய குருவும்
அன்று அவனை தடுக்க முயன்றாரே

அகங்காரம் கொண்ட அரசனுக்கு ஆசார்யர்
பகவானே வந்ததை பார்த்து சொல்ல
கொடுத்தே தீருவேனென்று கொண்டவள் உடனே
விடுத்துநீரை உன்திருவடி வார்த்து நின்றான்

ஐயங்கள் இல்லாது அரசன் உலகங்களை
ஐயன் திருவடியில் அளித்து நின்றான்
தேவர்கள் மலர்பொழிய தேவன் நீ வளர்ந்தாய்
தேவனின் பிரம்மாண்டம் திகைப்பை ஊட்டியதே

பிரம்மனின் உலகிற்கு பிரமிப்புடன் திருவடிவர
பிரம்மன் கமண்டலத்து நீரீனால் அலம்ப
கந்தருவர்கள் நடனம் கரகோஷ முழக்கம்
மந்திரங்கள் பொங்க மகிழ்ச்சி பெருகியதே

அரசன் உடன்பாடின்றி அசுரர்கள் சண்டையிட
வரங்கள் தரும் வரதனிடம் தோற்றனரே
எதிரில் இருப்பவன் இறைவனே என்று
அதிரடியாய் பாதாளம் அறிந்து சென்றனரே

கருடன் வருணபாசங்களால் கட்டினான் பலியை
திருமாலே மூன்றாவது திருவடி மண்ணினை
மன்னனிடம் கேட்டாய் மகிழ்ந்து அவனும்
தன்தலையில் திருவடியை தாங்க வந்தான்

செருக்கை அழிக்கவே சிந்தை கொண்டேன்
உருவத்தை அளந்து உயர்வை பெறுவாய்
இந்திரன் பதவியும் இன்னும் மென்மேல்
மந்திர உலகமும் மாட்சிமையும் பெறுவாய்என்றாய்

பதிகம் 32
மீனாவதாரம்

உண்டான பிரளயம் உலகினை அச்சுறுத்த
கொண்டு சென்ற வேதங்களைக் காக்க
மீன்வடிவம் ஏந்திய மேன்மை பொருந்தியவனே
தேன்போல் இனிக்கும் திகட்டாத நாமனே

ஸத்திய விரதன் சாந்தமாய் தர்ப்பணம்
நித்தியம் செய்யும் நிரம்பிய குணத்தான்
கூப்பிய கரங்களில் குஞ்சான மீனானாய்
காப்பாய் நாராயணா கடலிலே வீழ்வாய்

அஞ்சிய உன்னுருவை அவனும் அளந்து
மிஞ்சிய பாத்திரத்தில் மீனாய் வளர்த்தான்
படிப்படியாக வளரும் பாத்திரமும் மீனும்
அடியடியாய் வளர்ந்து அளவும் பெருகும்

கட்டளைப்படி முனிவர் கடலிலே உன்னைவிட
திட்டம்படி ஏழுநாள் திவ்யகாட்சி காணலாம்
என்று நீசொன்னதால் ஏற்றமுடன் சென்றான்
அன்று நீசொன்னதை அண்டமும் கேட்டதே

குறித்த நாளில் கூடிய வேளையில்
புரிந்த லீலையில் புவனம் அழிந்தது
நீரில் மூழ்கியே நிலமும் பிரமித்தது
பாரில் முனிவர்கள் புகுந்தனர் கடலுள்

சுழன்ற பிரளயத்தில் சுற்றும் தோணியும்
உழன்ற முனிவர்கள் உன்னையே துதிக்க
பெரிய மீனாய் பிரம்மாண்டம் தெரிந்தாய்
அறிந்தவர் காண அழகாய் வெளிவந்தாய்

எட்டு லட்சமைல்கள் எழிலாய் நீண்டாய்
எட்டு திக்கும் ஏகாந்த ஒளியானாய்
உந்தன் சொற்படி உன்கொம்பில் தோணியை
மந்தகாசத்துடன் கட்டி மகிழ்ந்து நின்றனர்

தோணியை இழுத்தபடி தோன்றும் திசைகளில்
ஆணித்தரமாய் சென்றாய் அகிலம் காண்பித்தாய்
துதிக்கும் பக்தருக்கு துன்பம் துடைத்தாய்
புதிய ஆன்மாவை புரிய வைத்தாய்

முனிவர்களை காத்து முன்போல் செய்து
இனிவரும் காலத்தில் இனியமனுவாய் ஆக்கினாய்
வேந்தனுக் கருளி வைவஸ்தன் ஆக்கினாய்
அந்த ஹயக்ரீவ அசுரனை எதிர்த்தாய்

உயர்ந்த கொம்பால் உடலைப் பிளந்தாய்
அயர்ந்த மார்பில் அசுரன் வீழ்ந்தான்
பிளந்த மார்பில் பேணி எடுத்தாய்
அளந்த வேதங்களை அள்ளி எடுத்தாய்

பதிகம் 33
அம்பரீஷ சரிதம்

அபாயம் காத்த அரசன் மனுவாக
நபாகன் மகன் நாபாகன் ஆவான்
சூழ்கடல் உலகில் சிறந்த அம்பரீஷன்
ஆழ்மனதில் பக்தி அதிகம் கொண்டான்

அம்பரீஷன் பக்திக்கு ஆண்டவன் நீயே
கம்பீர சுதர்சன சக்கரம் தந்தாய்
வேண்டாமலேயே அவனை விரும்பி காத்தாய்
ஆண்டவன் நீஅவன்மீது அருள் புரிந்தாய்

மதுவனத்தில் அம்பரீஷன் மனைவியுடன் வழிபட்டான்
அறுபதுகோடி பசுக்களை அளித்து நின்றான்
ஒருஆண்டு காலம் உள்ளத்தால் விரதம்
அருமையாய் செய்தே அவனும் காத்தான்

வழிபாடு முடிந்து வாழ்த்தி நின்றான்
அழியாத கடவுளை அண்டி நின்றான்
துர்வாசர் முனிவரும் துவாதசி அன்று
அர்த்தமுடன் காண அரசனிடம் வந்தார்

காலத்தைக் கடத்தி கணங்களைப் போக்கினார்
காலத்தில் விரதமுடிக்க காணாத முனிவரால்
நீரினை குடித்து நிம்மதி பெற்றான் முனிவரோ
ஊரிலே அரக்கியை உருவாக்கி விரட்டினார்

ஊரினைக் கொளுத்தி ஊர்வலம் வந்தாள்
பாரிலே அவளும் பயங்கரமாய் திரிந்தாள்
அச்சமின்றி அவள்முன் அசையாது நின்றான்
துச்சமாய் அவளை சுதர்சனம் விழுங்கியதே

துர்வாசரைத் தேடித் துரத்தி சென்றதே
துர்வாசர் கலங்கி தொலைதூரம் சென்றார்
காலச் சக்கரம் கடமையில் தவறாதென்று
நீலகண்டனும் பிரம்மனும் நிலமையை கணித்தாரே

முனிவரும் உன்னைத்தேடி மூவுலகம் சென்றார்
இனிவரும் காலத்தில் இனியனே நீவைகுண்டத்தில்
பக்தருக்கு நானடிமை பணிவாய் சொன்னாய்
திக்கில் அம்பரீஷன் திருவடி பணியச்சொன்னாய்

உடனே அவரும் ஓடியே வந்தார்
தடங்கல் இன்றி தாளடி பணிந்தார்
அம்பரீஷன் விலகி அருளுடன் சுதர்சனத்தை
அன்புடன் பார்க்க ஆங்கேஓர் அதிசயமே

விரதத்தை முடித்து வேண்டுதல் செய்தான்
வரங்களைப் பெற்று வாழ்த்தி நின்றான்
குருவாயூர் தலைவனே குலங்களைக் காப்பவனே
அருளிட வேண்டும் அன்புகூர வேண்டும்

பதிகம் 34

ஸ்ரீமத் ராமாயணம் - அனுமனின் தொடர்பு வரை

இருசிய சிருங்கர் இனிதான யாகம்செய்ய
அருளிய பாயசம் அமிரதமாய் தந்தாய்
தசரதன் மனைவியர் தருணத்தில் பருகிட
அசராத இராமனாய் அவதாரம் செய்தாய்

தந்தை சொற்படி தண்டத்தை ஏந்தி
மந்திரம் கற்று முனிவரைத் தொடர்ந்தாய்
அம்பினால் தாடகை அழித்து விட்டாய்
தம்பியுடன் யாகத்தை தரணியில் காத்தாய்

வேள்வியின் தொடக்கத்தில் வேந்தனாய் அசுரர்களை
கேள்விகள் இன்றி கொன்று தாக்கினாய்
நிலமகள் பெண்ணை திருமணம் செய்ய
உலகிலே சிவதனுசு உற்சாகமாய் முறித்தாய்

பிருகுவின் குலத்திலகம் பரசுராமன் சினத்தால்
உருவத்து தவவலிமை உன்னுள்ளே நுழைந்திட
அழகிய உருவத்து அயோத்தி இராமனே
அழகான சீதையுடன் அரண்மனையில் வாழ்ந்தாய்

பட்டமிட நினைக்கயில் பரதனின் அன்னை
முட்டுக்கட்டை போட்டுவிட முதன்மை இராமனே
தந்தை சொற்படியே தம்பதியராய் சென்றாய்
சித்திரகூட மலையில் சிந்தை மகிழ்ந்தாய்

பிரிந்த சோகத்தில் பிரிந்த தந்தைக்கு
வருந்தி தர்ப்பணம் வணங்கி செய்தாய்
பரதன் விருப்பத்திற்கு பாதுகை தந்தாய்
சரபங்க முனிவருக்கும் சாபவிமோசனம் தந்தாய்

அரக்கர்களை அழித்து ஆரண்யம் காத்தாய்
அகத்திய முனிவரிடம் அஸ்திரங்கள் பெற்றாய்
நண்பன் ஜடாயு நடுவழியில் கண்டாய்
உண்மை மகிழ்வோடு ஒருகரையில் வாழ்ந்தாய்

காமத்தில் வந்த கன்னியவள் மூக்கை
சாமத்தில் வெட்டி சரித்திரம் படைத்தான்
எதிர்க்க வந்த எக்காள இராக்கதர்கள்
உதிரியாய் விழுந்து உலகை விட்டாரே

மூக்கறுந்த சூர்ப்பனகை மூட்டிவிட்ட கோபத்தில்
ஆக்கை பெருத்த அரசன் இராவணன்
மாயமானை வைத்து மனதை மயக்கி
காயங்கள் தந்துசீதையை கவர்ந்து சென்றானே

சீதையைத் தேடியே சிந்தை வருந்தினாய்
காதை பிறக்க காவியம் செய்தாய்
இறந்த ஜடாயுவுக்கு ஈமச்சடங்கு செய்தாய்
சிறந்த அனுமனையும் சீக்கிரம் கண்டாய்

பதிகம் 35
ஸ்ரீமத் இராமாயணம் - சுக்ரீவன் நட்பு முதல்

சுக்ரீவன் நட்பிற்காக துந்துபி கால்விரலை
உந்தியெறிந்தாய் அம்பினால் ஊரின்  மரங்களை
முறித்தாய் கொல்ல முயன்ற வாலியைக்
குறிவைத்தாய் குலவிளக்கைப் பிரிந்து வாடினாய்

வானரங்கள் படைசூழ வழியெங்கும் தேடினாய்
வானரம் அனுமனை விரைவாக அனுப்பினாய்
கணையாழி கையில்கொண்டு காற்றின் புதல்வன்
அலைகளைக் கடந்து அயலூர் சென்றான்

பறந்து சென்று கடலைக் கடந்தான்
விரைந்து சென்று வனத்தை அடைந்தான்
கணையாழி கொடுத்து கையில் சூடாமணி
அணைத்து பெற்றான் அஸ்திரங்கள் பொறுத்தான்

இராவணன் சினமடைய இலங்கையை எரித்தான்
வானரபடைகள் வழியெங்கும் மூண்டு வந்தார்
காலடியில் சரண்புகுந்தவனை கனிவோடு காத்தாய்
சாலச்சிறந்த கடலை சட்டென்று கடந்தாய்

கட்டிய அணையில் காலாற நடந்து
கொட்டிய முரசில் குவிந்தனர் அரக்கர்கள்
நாகாஸ்திரம் தாக்கி நற்போர் புரிந்தாய்
சாகாது கருடன் சட்டென்று விடுவித்தான்

உயிரை இழந்த உன்னருமை சகோதரன்
உயிரை மீட்டதே உயரிய சஞ்சீவமலை
மாயை அகற்ற மகத்தான போரிலே
ஓயாது போரிட்டு ஒவ்வொருவராய் அழித்தாய்

போரிலே இராவணனை பிரம்மாஸ்திரம் தாக்க
ஊரிலே அழிந்து உலகமும் அடங்க
புஷ்பக விமானத்தில் புதிதாய் பறந்தாய்
அஷ்டதிக்கும் அதிர அயோத்தி சென்றாய்

சிறந்து வாழ்ந்த சீதைமேல் பழிவர
துறந்து அவளை துன்புற்று நின்றாய்
அசுரர்கள் பலரை அழித்து கொன்றாய்
சிசுக்களை ஆசிரமத்தில் சீதையும் ஈந்தாள்

வேள்விச் சாலையில் வேந்தன் கதையை
கேள்வி ஞானத்தில் கீதமாய் பாடினார்
மக்கள் மூலம் மறுபுறம் உணர்ந்தாய்
தக்கதருணத்தில் சீதை தரைக்குள்ளே மறைந்தாள்

விண்ணுலகம் சென்று வைகுண்டம் அடைந்தாய்
மண்ணிலே பிறந்து மனிதனுக்கு அறிவூட்ட
அவதாரம் எடுத்த அழகான இராமனே
அவனியில் துயரங்களை அழித்து காப்பாய் !

பதிகம் 36
பரசுராம சரிதம்

அத்திரி முனிவருக்கு அன்று மகனானாய்
தத்தன் என்றபெயரில் நலமுடன் வாழ்ந்தாய்
கர்த்தவீரியன் உன்னைக் கண்டு வணங்க
பத்திர வரங்களைப் பரிவுடன் ஈந்தாய்

அந்தணர்களை பகைத்த அரசகுலம் அழிக்க
இந்த உலகில் இளையஇராமனாய் பிறந்தாய்
ஜமதக்னி இரேணுகைமகனாய் ஜன்மம் எடுத்தாய்
விமலன் நீயிங்கு வீரயனாய் வளர்ந்தாய்

சினத்தில் ஜமதக்னி சீறிஎழுந்து மனைவியை
இனத்து மகன்களை வெட்டிட கட்டளையிட
தந்தை சொல் மந்திரமாய் வெட்டினாய்
தந்திரமாய் உயிர்பெற வரமும் வாங்கினாய்

தோத்திரம் சொல்லி தோன்ற வைத்தாய்
ஆத்திரம் அடங்க அனுசரணை செய்தாய்
காமதேனுவும் ஆசிரமத்தில் கருணை பொழிய
சோமனிடம் கோடாரி சோபிக்க பெற்றாய்

கர்த்த வீரயார்ஜூன் காட்டிற்கு செல்ல
அர்த்தமுடன் பசுவை அள்ளிச் செல்ல
சினத்தில் போரும் சீறியே முளைக்க
இனங்கள் அழிந்து இறந்து போயினவே

சுக்ராச்சார்யர் உபயத்தில் சுகமாய் உயிர்பெற்று
பக்தன் உன்னை பகைவரை அழிக்க
அக்கணமே செல்ல ஆணையிட்டார் ஜமதக்னி
பக்கத்தில் படையுடன் பகைவனை அடைந்தாய்

இனிய சொல்லுக்கு இணங்காத காரணத்தால்
கனியாத காயாய் கடும்போர் மூண்டது
உன்கோடாரியும் அம்பும் உலகை முறிக்க
எண்ணிலா படைகள் எதிரிலே சாய்ந்தன

செருக்கை அழித்த சிருங்கார அம்புகளும்
நருமதை  தடுத்த நற்கரங்களும் தாக்க
சுதர்சன சக்கரமும் சுவடின்றி போக
இதமான ஹரி இவனேயென் றிந்தான்

பக்தன் அவன் பாதங்களில் விழவே
முக்தி அளித்து முன்னின்று நின்றாய்
தந்தையை கொன்ற பகைவரைக் கொன்றாய்
இந்த உலகில் இல்லாது செய்தாய்

மீண்டும் தந்தை மேலெழுந்து வரச்செய்தாய்
ஆண்டாண்டு காலம் அரசர்களை அழித்தாய்
ஸமந்த பஞ்சகத்தில் தர்ப்பணம் செய்தாய்
அமரரை நினைத்து அமைதி உற்றாய்

எல்லாம் துறந்து இவ்வுலகில் தவமிருந்தாய்
வில்லிலே அஸ்திரம் வேள்விக்காக்க தொடுத்தாய்
அஞ்சிய கடலை அழகாய் விலக்கினாய்
கெஞ்சிடும் என்னைக் கைவிடாது அருள்வாய்

பதிகம் 37
கிருஷ்ண அவதார தொடக்கம்

ஆனந்த வடிவே அசுரர்களைக்  கொன்றவனே
பாவத்தின் விளைவில் பரலோகம் செல்லாமல்
மண்ணுலகில் சுமையாய் மாறிய அசுரர்களை
விண்ணுலகம் அனுப்ப வேண்டினாள் நிலமகள்

கொடிய மக்கள் கொடுமை தாங்காது
வாடிய நிலமகளை பிரம்மனும் கண்டான்
இழிந்த நிலையை எடுத்து சொன்ன
அழியாத தேவரையும் அங்கே கண்டான்

உன்னை அடைக்கலம் உலகினில் அடைய
பின்வாருங்கள் எல்லோரும் பாற்கடல் செல்வோம்
சிவனை முன்னிட்டு சிந்தையை திருமாலிடம்
அவனியைக் காக்க ஆலோசனை கேட்போம்

தென்றல் வீசிய தெளிவான பாற்கடலில்
இன்னல் தீரவே இருவிழி மூடினான்
உந்தன் திருமொழியை உள்ளத்தில் கண்டான்
மந்திர வார்த்தைகளை மக்களுக்கு சொன்னான்

தேவர்களுக்கும் நிலமகளுக்கும் தோன்றிய இன்னலை
தேவன் நானே தீர்த்து வைப்பேன்
யாதவ குலத்தில் யௌவனமாய் பிறப்பேன்
மாதவ தேவர்களும் மானிடராய் பிறப்பார்கள்

காதுகள்குளிர உன்மொழி கேட்டதில் நிறைவு
சாதுக்கள் சூழ சூரசேனன் மகன்
வசுதேவன் தேவகியை வகையாய் மணக்க
அசுரரை அழிக்க அங்கேநீ வருவாய்

தேவகியின் சகோதரன் தேரை ஓட்டினான்
பாவம் செய்தவனை பழிவாங்க வருவான்
இவளின் எட்டாவது இனியமகன் வருவான்
அவனைக் கொல்வான் அசரீரி சொல்லியது

தீயவன் கம்சன் தலைமயிரைப் பிடித்து
காயத்தை ஏற்படுத்தி கலக்கம் செய்தான்
குழந்தைகளை அவனிடம் கொடுக்க ஒப்புதல்
அழுதபடி கொடுக்க அமைதி கொண்டான்

முதல் குழந்தை முறையாய் கொடுக்க
அதனை கொல்லாது அவனும் விட்டான்
நாரதர் கம்சனிடம் யாதவனாய் நீ வருவாயென
யாதவரை விரட்டி யாவரையும் கொன்றான்

மாதவனே உந்தன் மாயையில் ஆதிசேடன்
காததூர ரோகிணியாக கண்ணனே கருவில்
எட்டாவது மகனாய் எழிலாய் வந்தாய்
எட்டாத உயரத்தில் எங்கும் நிறைந்தவனே !

தசகம் 38

கிருஷ்ண அவதாரம்

1
ஆனந்த வடிவே! அவதாரப் புருஷனே!
வானத்து மேகங்கள் வரைகோலம் போட்டிட
ஆர்வத்துடன் உயிரனங்கள் அழகனுக்குக் காத்திருக்க
கார்கால இரவிலே கதிர்களும் தோன்றிட

2.
நீரினால் திசைகள் நிழலாய்க் குளிர்ந்திட
பாரினில் விரும்பியது பாதையில் கிட்டிட
ஊரினில் மக்கள் உள்ளம் களித்திட
காரிருள் வேளையில் கண்ணா நீதோன்றினாய் !

3.

திருமேனியில் மின்னும் திருசக்கரமும் சங்கும்
பருவவயது உருவத்தில் பளபளக்கும் கிரீடமும்
கருமேக நிறத்தில், கைவளை தோள்வளை
முறுவல் மட்டுமே முத்தான வெண்பற்கள்

4.

கொடிய கம்சனின் கொட்டம் அடக்கிட
விடியல் தந்திடவே விளையாட்டுக் கண்ணனாய்
குடிகொண்ட இலக்குமி கூடிய கடைக்கண்ணோடு
அடியெடுத்து இவ்வுலகில் ஆவணியில் வந்தாய்

5.

அறிஞரின் முனிவரின் அறிவுக்கு எட்டாத
தெரியாத ஞானமாய் தொலைவிலே நிற்பவனை
கண்முன் வசுதேவன் கண்டதும் பெருகியதே
கண்ணீர்- இரண்டு கரம்தூக்கி துதித்தாரே !

6
துன்பத்தை போக்கி துயரம் துடைப்பவனே

இன்பத்தை எல்லோர்க்கும் இனிதே அளிப்பவனே
எல்லா உயிரையும் எடுத்து ஆதரிப்பவனே
உல்லாசமாய் நெடுநேரம் உன்னையே அவர்துதித்தார்

7.
மண்ணில் நீ பிறந்திட  மகிழ்ச்சிக்  களிப்பில்
கண்ணீர் பெருக்கியே கசிந்துருகினாள் தேவகி
உன்குணங்களைப்  புகழ்ந்து உரைத்து உன்னை
மன்குல பிறவியாய் மாறிவிடச் சொன்னாள்

8.
மானுடக் குழந்தையாய் மாயை வடிவாய்
ஊனுடல் நீபூண்டதும், ஊரை மாற்றிவிட
அன்னக் குஞ்சுபோல  அழகான உன்னையே
தன்னிரு கைகளில் தவமாய் ஏந்தினார்

9
நந்தகோபன் இல்லத்திற்கு நடுநிசி வேளையில்
சந்திரன் ஒளியில் சாகசம் செய்வதுபோல்
பூட்டிய கதவுகளும் புதிராய்த்  திறந்திட
ஆட்டிய உன்செயலால் அண்டமே அடங்கியதன்றோ!

10.

வசுதேவன் உன்னை வழிநடத்தி செல்ல
சிசுவைக்  காத்திட சிரத்திலே ஆதிசேடன்
அணிகலன் பூண்டு அழகாய் ஜொலிப்பவனே
பிணியினை அழித்தென்னைப் பேணிநீ காப்பாய்

பதிகம் 39

## யோக மாயையின் தோற்றமும் கண்ணனின் பிறந்தநாள் விழாவும்

யதுகுலத்து வசுதேவன் யாரும் அறியாது
பதுங்கி உன்னைத்தூக்கி பத்திரமாய் சென்றான்
வெள்ளமாய் ஓடிய வீரிய யமுனையும்
அளவைக் குறைத்து அடங்கி நின்றாள்

நந்தகோபன் மாளிகைக்கு நடுஇரவில் வந்தான்
தந்திரமாய் உன்னை தாயருகில் விட்டான்
அந்த இடத்தில் அழகான பெண்சிசுவை
சொந்தமாக்கி எடுத்து சுகமாய் திரும்பினான்

அழுகின்ற குரலை அரண்மனை வேலையாள்
தொழுது கம்சனிடம் தூதுசொல்லி நிற்க
வருந்தி கோபத்துடன் விரைந்து கம்சனும்
திருந்தாத ஆத்திரத்தில் திகைத்து வந்தான்

தங்கையின் கையிலிருந்து தங்கையை பறித்தான்
பொங்கிடும் சினத்தில் புவனம் மறந்தான்
மாயாவி நாராயணன் மாயையே இவளென்று
ஓயாத கோபத்தில் ஓங்கி எறிந்தான்

உன்பக்தன் எமனின் உடும்புப்பிடி விடுவதுபோல்
அன்பான தங்கை ஆங்கே அவன்கையிலிருந்து
விடுபட்டு மேலே விரும்பி சென்றாள்
தடுக்க இயலாத வகையில் திகழ்ந்தாள்

உன்தங்கை கம்சனிடம் உரக்கக் கூவினாள்
உன்னைக் கொல்பவன் ஓரிடத்தில் உள்ளான்
நன்மையை ஆராய்ந்து நல்லதே செய்வாய்
என்றே சொல்லி எங்கோ மறைந்தாள்

மாயை சொன்னதால் மதிமயங்கி கம்சன்
கோழையாய் உலகில் குழந்தைகளைக் கொன்றான்
அச்சம் இல்லாத அசுரர்கள் துணையுடன்
இச்சை கொண்டு இவ்வுலகில் வாழ்ந்தான்

நந்தகோபன் இல்லத்தில் நந்தனனின் மனைவி
சுந்தரக் குமாரனாய் சுற்றிநின்றவரை கண்டாய்
கால்களை அசைத்த களிப்பில் விழித்து
பால்வடியும் முகம்கண்டு பார்த்தோர் மகிழ்ந்தனரே

என்ன தவம் இனிதே செய்தாளோ
உன்னைப் பாலகனாய் உலகிலே பெறுவதற்கு
பாலினை அன்போடு பருகச் செய்தாள்
ஆலிங்கனம் செய்தே அரவணைத்து நின்றாள்

நந்தகோபன் மகிழ்ந்து நலங்கள் செய்தான்
அந்தணர்களை அழைத்து அளித்து நின்றான்
மங்கலம் உண்டாகி மக்கள் களிப்புற
இங்கென் பிணியை இனிதே போக்குவாய்

தசகம் 40

பூதனை மோட்சம்

கம்சனின் அடியாளாய் கனிவில்லா பூதனையென்று
தந்தை வசுதேவன் தந்திரங்கள் அறிந்தான்
நந்தகோபன் கப்பம் நலமாய் கட்டிட
சுந்தர மதுரா நகரினை அடைந்தான்

நண்பனே உன்பிள்ளை நலமாய் இருக்கட்டும்
என்பிள்ளை போலவே எனக்கு மகிழ்ச்சி
ஏதோதீயது நடக்கும் என்றே தோன்றுகிறது
ஆதலால் உடனே கோகுலம் செல்வாயென்றான்

சகுனங்கள் தீயவையாகிட சீக்கிரம் செல்வாய்
கோகுலம் சென்றிட குழந்தையைக் காப்பாய்
உடனே நந்தகோபன் ஊருக்கு சென்றான்
தடங்கல் இல்லாதிருக்க வேண்டி நின்றான்

அழகிய உருவில் அங்கொரு பெண்ணாய்
பழகிய நடையில் பதவிசாய் வந்தாள்
வண்டுகள் மொய்க்கும் வசீகரக் கூந்தலுடன்
தண்டுக் கால்களுடன் தளிர்நடை போட்டாள்

இடைச்சியர் யாரிவள் என்றே கேட்டிட
நடையில் மயக்கி நாணி நின்றாள்
உன்னைக் கையில் ஒயிலாய் எடுத்து
கண்ணை சுழற்றி காண்போரை மயக்கினாள்

உள்ளத்தைக் கவர்ந்து உட்கார்ந்து கொண்டு
கொள்ளை அழகுடன் குழந்தையை ஏந்தினாள்
நஞ்சு கலந்த தன்மார்பை கொடுத்து
வஞ்சக வடிவில் வசீகரமாய் அமர்ந்தாள்

கடுஞ்சினம் கொண்ட கார்முகில் வண்ணா
அடுக்காது அவள் பாவம் என்றே
அடியெடுத்து மடியில் அழகாய் அமர்ந்தாய்

கொடிய அவள் மார்பைக்  குடித்தாய்

மார்புடன் அன்று  மங்கையின் உயிரை
சேர்த்து குடித்தாய் சோர்ந்தே அவள்
சுயஉருவைப் பெற்று சாய்ந்து விழுந்தாள்
பயங்கர சத்தம் பாரினில் கேட்டதே

அச்சம் கொண்டு ஆய்ச்சியர் மயங்க
துச்சமாய் அவள் மார்பில் விளையாடினாய்
ஓடிவந்த கோபியர்கள் ஒய்யார உன்லீலையில்
ஆடிப்பாடி அன்று அகம் மகிழ்ந்தனரே

திருப்பெயரை காப்பாக்கி தினமும் செய்தனர்
உருவத்தில் மங்கலமான உயர்வடிவ தலைவனே
என்நோய்களை நீக்கி என்னைக் காப்பாய்
உன்தொண்டனாய் மாற்றி உயர்வு தருவாய்

தசகம் 41

பூதனையின் உடலை எரித்தலும் கண்ணனைக் கொண்டாடுதலும்

நந்த கோபன் நாட்டுக்கு வந்தான்
அந்த வழியில் அச்சம் கொண்டான்
மரங்கள் யாவும் பொடியாகும் பொருளால்
அறங்கள் ஒழிந்திடுமோ அஞ்சியே வந்தான்

நடந்ததை சொல்லக் கேட்டு நின்றான்
உடலாய் விழுந்த ஒரு அரக்கியைக் கண்டான்
பூதனை உடலை வெட்டி எரித்தான்
காததூரம் சென்று காட்டில் எரித்தான்

நீபருகிய அவள் மார்பகமே அதனால்
தாபங்கள் இல்லாது தரணியில் புகை
அகிற் கட்டையோ சந்தனமோ என்றே
அகிலம் முழுதும் ஆகாயம்வரை பரவியது

உன்னோடு கொண்ட உயரிய தொடர்பில்
மண்ணோடு மடிந்தாலும் மணங்கள் கொண்டாள்
விண்ணிலே கலந்து வினைகள் கடந்தாள்
பண்ணிய பாவங்கள் மன்னிக்க பெற்றாள்

அரக்கியால் கொல்லப்படாத அழகிய குழந்தை
உரக்க கூவியே உல்லாசம் பெற்றனர்
வியப்பிலே வியப்பு விளையாடும் வியப்பு
பயமில்லா இக்குழந்தை பரிசுத்த குழந்தை

மங்கலம் தவழ மகிழ்ச்சி பொங்க
அங்கே என்றும் ஆனந்தம் நிலவியதே
மங்காத செல்வம் மாணிக்கம் நீயென்று
தங்கிய உன்னைத் தாங்கியே சென்றனரே

கோபியர்கள் யாவும் கோகுலத்தில் உந்தன்
சோபிக்கும் அழகை சொல்லித் திரிந்தனர்
வேலைகள் இருந்தாலும் வேண்டுமென்று உன்னை
சோலையில் கண்டிட சோர்வின்றி வந்தனர்

என்னே இக்குழந்தை என்னையே பார்த்தது
என்னையே கண்டு எழிலாய் புன்னகைத்தது
என்னிடத்தில் வாவா என்றே கைநீட்டி
உன்னிடம் ஆசையுடன் உலகிலே வாழ்ந்தனர்

திருமேனி தொடுவதை தெய்வீகமாய் நினைக்க
ஒருகை மாறி ஒருகை தாவினாய்
மலர் தாவும் மருவில்லா வண்டாய்
மலர்மேனி அழகுடன் மயங்கித் தவழ்ந்தாய்

மடியில் தவழும் மாசில்லா உனக்கு
விடியலாய் சிரிக்கும் விளையாட்டு கண்ணனை
பிணிகளை நீக்கி பேறுகள் தருவாய்
மணிகள் சூழவே மடியில் தவழ்வாய்

தசகம் 42
சகடாசுர வதம்

1.
கண்ணன் பிறந்தநாளைக் கனிவுடன் கொண்டாட
பெண்களையும் உறவினரையும் பெரியாரையும் அழைக்க
மிகப்பெரிய வண்டியில் மெதுவாய் கிடத்தி
அகத்தில் வேலையை அன்னையும் செய்தாள்

2.
உன்னைக் காக்க உன்தோழர் மக்களை
உன்னருகில் இருக்க உத்தரவு இட்டிருந்தாள்
சக்கரம் முறிந்திட சத்தமும் கேட்டிட
அக்கணம் பேரொலியில் அண்டமே அதிர்ந்ததே

3.
மரங்கள் பலவும் முறிந்து விழுந்தன
உரக்க எழுந்த சத்தம் ஊரையே கூட்டியதே
கோபியர்கள் ஓடிட கொந்தளிப்பு நடந்ததே
ஆவியும் நடுங்க அனைவரும் அஞ்சினரே

4.
இடையர்கள் நந்தகோபன் எல்லோரும் வந்திட
மடைதிறந்த வெள்ளமாய் மக்கள் திரண்டிட
கண்ணனுக்கு என்னவோ கண்ணீர் பெருகியதே
கண்டவுடன் மகிழ்ந்து கட்டித் தழுவினாரே

5.
வண்டி எங்கனம் வகையாய் உடைந்தது
அண்மையில் யாரும் அரக்கர் இல்லையே
அதிசயம் ஆனால் அதுவே உண்மை
மதிக்குப் புரியாத மாயை விளையாட்டே

6.
உன்னுடைய காவல் உற்ற தோழர்கள்
கண்ணால் கண்டதை கதையாய் சொன்னாரே
பால்வேண்டி அழுத பாலகன் தன்சிறு
கால்கொண்டு உதைக்க கணத்தில் முறிந்ததே

7.
உன்பெருமை அறியாதோர் உரையை நம்பவில்லை
அன்பால் உன்னை ஆரத்  தழுவினாரே
பூதனை வதத்தினை புவனத்தில் கண்டவர்கள்
வாதம் செய்யாது வணங்கி நின்றனரே

8.
பவழம்போல் சிவந்த பாதங்கள் அடிபெற்றதோ
அழகிய தாமரை அள்ளிய கரங்களோ
அன்போடு தடவி ஆசைமுத்தம் கொடுத்து
உன்னைப் பூவாய் உச்சி முகர்ந்தனரே

9.
நந்தகோபன் உன்னை நன்றாக தழுவினான்
அந்த இறைவன் அருளே இதுவென்றான்
திருமேனி தழுவி திருக்கரம் தடவினான்
அருளை மெச்சியே ஆனந்தம் கொண்டான்

10
சடகாசுரனை வதம் செய்து சக்கரம் முறித்தாய்
இடர்கள் எதுமே இல்லாது செய்தாய்
உனக்குள் அவனை ஒளித்து விட்டாய்
கணநேரத்தில் குழந்தையாய் காட்சி தந்தாய்

11.
மங்கலம் பொங்க மனமார வாழ்த்த
மங்காத அழகுடன் மாயைகள் புரிந்தாய்
எங்கும் பரவிய எழிலான குருவாயூரப்பனே
சங்குடன் விளங்கி சங்கடம் தீர்ப்பாய்

தசகம் 43
த்ருணாவர்தன் வதம்

1.
அன்றொரு நாள் அழுத்தம் தாங்காது
உன்னைத் தூக்க முடியாமல் அன்னை
கனமாய் குழந்தை கனப்பது ஏனோவென
மனதில் குழம்பி படுக்க வைத்தாள்

2.
காற்றின் வடிவமாய் கணத்தில் அசுரன்
தோற்றத்தில் பயமுறுத்தி திசையெங்கும் வீசினான்
புழுதிகள் படர புவனம் இருண்டது
அழுதபடி அங்கே ஆயர்கள் அஞ்சினர்

3.
இருட்டில் கண்தெரியாமல் இடையர்கள் தவிக்க
தருணத்தில் காணாது தவித்தாள் யசோதை
குழந்தை எங்கேயென கூச்சல் போட
வழியில் காணாது வசனம் உற்றாள்

4.
கனத்த உன்னுடலால் கணத்தில் சுருங்கி
சினமும் அடங்கி வீரியம் குன்றினான்
புழுதிகள் குறைய பூலோகம் தெரிய
அழுகுரல் அங்கே அதிகமாய் ஆனது

5.
நந்தன் ஓடிவர நகரம் அழுதுநிற்க
அந்த அசுரன் அசதியில் உன்னை
விட்டுவிட நினைத்தான் விடாது நீயோ
பட்டென அவனை பறந்து தள்ளினாய்

6.
பாறையில் விழுந்தது பயங்கர ஓருடல்
பாறையில் அவனுடல் படுத்து கிடக்க
களைப்பின்றி நீயும் கைகொட்டி சிரிக்க
விலையில்லா மாணிக்கமே விந்தைகள் செய்தாய்

7.
பெரிய உடல் விழுந்த பேரொலி தாக்க
உரிய நேரத்தில் உற்றார் வந்தார்
உரக்க சிரித்த உன்னைக் கண்டார்
அரக்கனைக் கொன்ற அற்புதம் கண்டார்

8.
இடையர்கள் உன்னை இடைவிடாது கொஞ்ச
இடைச்சியர் கரங்களில் இனிதே தவழ்ந்தாய்
மடைபோல் பொங்கிய மகிழ்ச்சி களிப்பில்
தடைகள் நீக்கிய தாமரை மணாளனே

9.
துன்பங்கள் நேராது தூயவனே காப்பாய்
அன்னையும் அப்பனும் ஆண்டவனை வேண்ட
உன்னைக் காக்க உன்னையே வேண்ட
தன்னை வணங்கியோரை தரணியில் காப்பவனே

10
சுழல்காற்று அசுரனை சூட்சமமாய் அழித்தாய்
குழல்ஊதி எம்மை குதூகலம் செய்பவனே
வாதநோய் பிணியை வையத்தில் ஏன்வைத்தாய்
ஆதலால் என்பிணி அகற்றுவாய் ஆண்டவனே

தசகம் 44
நாமகரணம்
1
கர்க்க முனிவர் கண்ணா உனக்கு
நற்பெயர் சூட்டவே நந்தன் இல்லத்திற்கு
ஜோதிடம் கற்று ஜோதிவடிவான உன்னை
ஆதியும் அந்தமுமானவனை அழைக்க வந்தான்

2
மனம் நந்தன் மகிழ்ந்து முனிவரை
இனம் காக்கும் இவ்வுலகில் உனக்கு
இனிதே சடங்குகள் இதமாய் செய்ய
முனிவருக்கு அனுமதி முன்னின்று அளித்தான்

3.
கர்க்க முனிவர் கனிவாய் மகிழ்ந்து
நற்பெயரை இரகசியமாய் நல்ல நாளில்
தமையன் உடன் தம்பிக்கும் வைக்க
அமைதியாய் சடங்கை ஆவன செய்தார்

4.
இந்தக் குழந்தைக்கு இனிதான பெயரை
சொந்தமாய் கொள்ள, சுந்தரக் குழந்தைக்கு
எந்த பெயர் எழிலாய் சூட்டுவேன்
அந்த முனிவர் ஆலோசனை செய்திருப்பார்

5.
கிருஷி என்ற வினையையும் ணவென்ற
எழுத்தையும் கொண்ட எழிலான பெயர்
சத்திய ஆனந்தம் ஸத் என்ற உருவத்துடன்
அத்தனை பாவங்களையும் அகிலத்தில் அழிப்பவனே

6.

அயராத முனிவர் அத்தனை பெருமையை
பெயர்களின் பொருளைப் பெரியவர்களுக்கு விளக்கினார்
இராமன் என்ற இனியபெயரை தமையனுக்கும்
நாமத்தின் மகிமையை நந்தனுக்கு சொன்னார்

7.
உன்மகனிடம் அன்பை உண்மையாய் கொண்டவர்
இன்னல்கள் உலகில் இல்லாது இருப்பர்
உனக்கு வஞ்சம் ஒருவர் செய்தால்
தன்வினை சுடவே தானாக அழிவார்

8.
முனிவர் மேலும் முன்னதாக சொன்னார்
இனிவரும் காலத்தில் இந்த குழந்தை
அசுரர்களை வலிமையுடன் அழித்து காப்பான்
மாசுகள் இல்லாத மாபெரும் புகழடைவான்

9.
இவன் ஹரியேதான் என்று சொல்லாவிட்டாலும்
அவனியில் துன்பங்கள் அனைத்தும் அழிப்பான்
இவனை நம்பினால் இவ்வுலகம் நலமாகும்
இவனாலே அனைவரும் இனிமையை அடைவார்கள்

10
குருவாயூர் தலைவனே குழந்தை வடிவமே
அருமைகளை சொல்லநந்தன் அகம் மகிழ்ந்தான்
பெருமை வாய்ந்தவனேஎன் பிணிகளைப் போக்கி
கருணை செய்வாய் காத்து நிற்பாய்

தசகம் 45
பால லீலா

பலராமனுடன் கூட்டமாய் பாலகனே நீசென்றாய்
மலர்போன்ற திருவடிகள் மண்ணிலே பதிய
சலங்கை ஒலிகள் சத்தமிட்டு அழகாய்
உலகை சுற்றி ஊரினை வலம்வந்தீர்கள்

மெதுவாய் சிரிக்க  முகமும் ஜொலித்தன
பதும திருவடிகள் பதிந்தது அழகே
மணிக்கட்டில் அழகாய் மணிவளையல் நழுவ
அணிகலன் ஜொலிக்க அழகாய் நடந்தீர்கள்

மக்கள் கூட்டமாய் மகிழ்ந்து உங்கள்
பக்கமாய் ஓடிவர, பார்க்க நீங்கள்
தாமரை மலர்போன்ற தளிர்முகத்தைத் திருப்ப
கோமள வண்ணத்தை கூதுகலமாய் காட்டினரே

ஓட்டமாய் ஓடிவந்து உடனே விழுந்தீர்கள்
கூட்டமாய் வந்தவர்கள் குழந்தைகளைக் கண்டார்கள்
சேற்றில் விழுந்தாலும் செந்தாமரை என்றே
மாற்றமே இல்லாத மதுசூதனை அணைத்தார்கள்

இடையன் வேடம்பூண்டு இதயம் திருடியவனே
அடையாள முத்தமிட்டு அன்னையை அணைத்தவனே
உன்னை நினைத்தாலே உருகியவள் பால்சுரக்க
புன்முறுவல் பூத்த உன் பூமொட்டு முகம்கண்டாள்

சிறுவர்கள் பலருடன் சிந்தை கவர்ந்தபடி
சிறுகன்றுகள் பூனைகள் சின்னக் கிளிகள்
எல்லோரும் தொடர எழிலாய் நடக்க
உல்லாசமாய் அனைவரும் உன்னைத் தொடர்ந்தனர்

முரன்என்ற அசுரனை முன்னின்று கொன்றவனே
அறங்கள் செய்யும் அற்புத நாயகனே
கோபியர் மயங்கி குழந்தைபின் வந்தனர்
சோபிக்கும் அழகில் சொந்தங்கள் மறந்தனர்

வெண்ணெய் உண்டாய் விரும்பி பாடினாய்
பெண்கள் கொடுத்த நெய்யைக் குடித்தாய்
காய்ச்சிய பாலைக் கருத்துடன் குடித்தாய்
ஆய்ச்சியர் மனம்கவர்ந்து ஆடிப்பாடி நின்றாய்

இரப்பதை விட்டாய் இல்லத்தில் திருடினாய்
இரக்கும் படிமீண்டும் நடக்க ஏனோநீ
மெல்லியலாரிடம் வேண்டாமென மேவிநின்றாய்
அள்ளியே தயிரையும் நெய்யும் உண்டாய்

வெண்ணெய் திருடிய வேந்தனே நீயன்று
கண்ணைக் கவர்ந்து கருத்தைத் தொட்டாய்
சினமில்லாது உந்தன் சிறுகுறும்பை இரசித்து
மனமும் கவர்ந்து மகிழ்ச்சியில் மூழ்கினரே

சந்திரன் வேண்டுமென்று சண்டித்தனம் நீசெய்ய
அந்திப் பொழுதில் அம்புலியை நீபிடிக்க
மந்திரமோ மாயமோ மண்டலம் இறங்கியதே
தந்திரமாய் ஜோதியை தன்மடியில் கொண்டாயே

தந்தை பிரமிக்க தாய் தவிக்கநொடியில்நீ
தந்திரம் செய்தாய் தன்னுருவைக் காட்டினாய்
மாயை நீங்கிட மண்டலம் காத்தாய் அப்பனே
நோயை நீக்கி நீயேயென்னைக் காப்பாய்!

## தசகம் 46
## யசோதை கண்ணன் வாயில் உலகைக் காணல்

மல்லாந்து படுத்து மடியில் இருந்தாய்
உல்லாசமாய் பாலருந்தி ஓய்வு எடுத்தாய்
ஆவென்று நீ அண்ணாந்து விட்ட கொட்டாவியில்
ஓவென்று தெரியுமே ஒய்யார உலகம்யாவும்

குழந்தைகள் பலருடன் குதூகலமாய் ஆடினாய்
பழத்தை உண்டு பாலரை ஏமாற்றினாய்
சினந்த தோழர்கள் சீற்றமாய் வந்தனரே
உனது மண்ணுண்ட விளையாட்டைச் சொன்னாரே

நிலத்தையும் உண்டு நீரையும் உண்டு
உலகத்தை பிரளயத்தில் உருவாக்கிய உனக்கு
மண்ணை உண்டால் நோயும் வருமென்று
அன்னை யசோதை அஞ்சி நின்றாள்

துடுக்குத் தன்மை துடிப்பாய் கொண்டவனே
எடுத்து மண்ணை ஏனோ உண்டாயோ
தாய் கேட்டால் தாமரை வண்ணா
பொய் என்று பேசி சிரித்தாய்

எல்லோரும் சொல்வது எப்படி மறுப்பேன்
சொல்வது உண்மையெனில் செவ்வாய் திறப்பாய்
அன்னையின் கட்டளைக்கு அனபாய் பணிந்தாய்
உந்தன் எழில்வாயை ஒருவழியாய் திறந்தாய்

மண்ணைக் காண மனம் விரும்பினாள்
கண்ணை மயக்கும் காட்சி தந்தாய்
விண்ணைக் காட்டினாய் விளையட்டாய் உலகை
அண்ணலே நீயன்று அனைத்தும் காட்டினாய்

காடும் நிலமும் கடலும் நீரும்
நாடும் வானமும் நலமாய் தெரிய
மேகமும் பாதாளமும் மேலோகமும் தெரிய
தேவரும் அசுரரும் தெய்வீகமாய் தெரிந்தனர்

உந்தன் வாயில் உன்னையே கண்டாள்
அந்த பாற்கடல் ஆதிசேட பெருமாளை
சுந்தர வைகுண்ட சுதர்சனனைக் கண்டாள்
மந்திரமாய் மாயமாய் மகனைக் கண்டாள்

உலகங்கள் யாவும் உன்வாயில் கண்டாள்
உலகங்கள் முடிவில்லா உண்மையைக் கண்டாள்
எல்லா அழகும் எழிலான முகத்தில் கண்டாள்
சொல்லொணா ஆச்சரியம் சிந்தையில் கொண்டாள்

அன்னை உண்மையை அறிந்து கொண்டாள்
அன்பினால் மயக்கம் அடையச் செய்தாள்
அம்மா பால்கொடு அன்பாய் கேட்டாய்
எம்மைக் காப்பாய் என்றும் காப்பாய்

தசகம் 47
உரலில் கண்ணனைக் கட்டுதல்

தயிர் கடைய தாயும் அமர்ந்தாள்
தயிரை கடையவிடாது தட்டி விட்டாய்
மடி மீதேறி மார்பகப் பாலைக்
குடிக்க நீயும் குழந்தையாய் ஆனாய்

அன்போடு பாலை ஆசையுடன் குடித்தாய்
உன்முகம் தாமரை உருவாய் ஒளிவீசியது
அடுப்பில் இருந்தபாலை அணைக்க ஓடினாள்
எடுத்து இறக்க எழுந்து ஓடினாள்

பாதி குடித்தவண்ணம் படுத்திருந்த நீயும்
மீதி குடிக்க முடியாது சினமுற்றாய்
மத்தினை எடுத்து மரக்கலத்தை உடைத்தாய்
அத்தனை தயிரையும் அறியாது கொட்டினாய்

உரத்த ஓசையில் ஓடிவந்தாள் யசோதை
பரந்த நிலத்தில் பரவிய தயிர்கண்டாள்
உன்புகழ் போலவே வீடுமுழுதும் தயிர்
கண்முன் இருக்க காணாத உன்னைத் தேடினாள்

வேதநெறிக்கு கட்டுபட்டவனே விளையாட்டாய் ஈ இருப்பவனே
காததூரம் தயிர்க் கால்பதிய நீநடந்த வழிவந்தாள்
உரலில் அமர்ந்து ஒருபூனைக்கு வெண்ணெய் கொடுத்தாய்
கரங்களில் வெண்ணெயுடன் கண்ணா உன்னைக் கண்டாள்

அஞ்சியவன் போலவே அன்று நீ நடித்தாய்
கொஞ்சும் உன்முகம் குளிர்தாமரை போலிருந்தது
சினத்துடன் யசோதை சிவந்து நின்றாள்
கணத்தில் உன்னைக் கட்டிபோட முயன்றாள்

நல்லோர்கள் பலருக்கு நண்பன் நீஉன்னை
எல்லோர் முன்னாலும் எளிதில் கட்டமுடியுமோ
கயிறுகள் பலசேர்த்தாலும் கட்ட முடியவில்லை
உயிருக்குயிரானவனே இருவிரல் குறையக் கண்டாள்

தோழிகள் சிரிக்க தொய்ந்தாள் யசோதை
ஆழிமழைக் கண்ணா அதிசயக் கண்ணா
கட்டுகள் இல்லாத கட்டழகு மேனியனே
கட்டிவிட நீமனம் வைத்தாய் அது விந்தையே!

வம்பனே நீஇங்கேயே வகையாய் மாட்டியிரு
அம்மா வேலை அடுப்படியில் செய்யும்வரை
உரல்குழியில் நெய்யை உறிஞ்சிக் குடித்தாய்
மரங்கள் தகர்க்க மாலைவரை காத்தாய்

பற்றில்லாதவர் கட்ட பரவசம் கொள்ளும் நீ
பற்றுடன் யசோதை பாசத்திற்குக் கட்டுபட
முற்றும் துறந்தவரும் முழுநிலை தேவரும் வியக்க
பற்றிய என்நோயை பட்டென்று அறுப்பாய் கண்ணனே!

தசகம் 48
நளகூபர மணிக்ரீவ சாபம் நீக்குதல்

தேவர்கள் உன்னை துதித்து மகிழ
சேவகம் செய்து சிந்தையில் வணங்க
உரலில் தாமோதரன் உட்கார்ந்து இனிதாய்
மரங்கள் இரண்டை மண்மீது கண்டாய்

குபேரன் மகனாக குதூகல நளகூபன்
சபேசன் அருளில் செல்வந்தன் மணிக்ரீவர்
இருவரும் பக்தியின்றி இறுமாப்புடன் திரிய
இருளான அகந்தையில் இவ்வுலகில் வாழ்ந்தனர்

கள்ளைக் குடித்து களங்கம் செய்து
உள்ளம் குழம்பி உடைகள் அகற்றி
காமவலையில் சிக்கி கங்கை ஆற்றில்
சாமத்தில் குளிக்க சந்தித்தாரே நாரதரை

கண்டதும் காணதது போலவர் இருக்க
மண்ணில் சாபத்திற்கு மனைவியர் அஞ்சிட
உன்பக்தியும் உள்ளத்தில் அமைதியும் கிடைக்க
உன்பக்தன் நாரதன் உரக்க சபித்தான்

இருவரும் நீண்டகாலம் இவ்வுலகில் ஹரியைத்தேடி
மருதமரமாகி பிறக்க மண்ணில் சபித்தார்
இருவரும் உன்னை இதமாய் காணகோகுலத்தின்
அருகில் மரமாகி அருள்வேண்டி பிறந்தனர்

காலம் அதிகமாகி களைத்த மரங்கள்
கோலம் இழந்து குறுக்காய் இருந்தன
உளுத்த மரங்கள் உள்ளே உரலைநீவிட
மளுக்கென உடைந்து மரம் வேரறுந்தன

உடைந்த இருமரம் உயரிய தேவர்களாக
அடைந்த சாபம் ஆங்கே அழிய
ஒளிமிகுந்த தேவர்கள் உயரிய மக்களாய்
பளிங்காய் தோன்றி பாடினாரே தோத்திரங்கள்

மற்றவர் பக்தரும் மனம்மாறி உன்னைப்
போற்றி எப்போதும் புகழ்ந்து பாடுவாரே
அருளிய நாரதர் அவர்களை பக்தராக்க
பெரும் பக்தியில் பேரோளி பெற்றாரே

இடையர்கள் கேட்ட இடிசத்தத்தில் ஓடிவர
அடையும் மோட்சம் அளிக்கும் உன்னை
நந்தன் விடுவிக்க, நாடும் சுகிக்க
அந்த கோகுலத்தில் அன்பைப் பொழிந்தவனே!

ஹரியின் அருளாலே அடிபடாத குழந்தை
அரிதான விந்தையே! ஆச்சரியம் கொண்டாரே!
அன்பான ஹரியே! அத்தகைய நீயே
என்பிணி போக்கி என்னைக் காப்பாய்!

தசகம் 49
கண்ணனின் பிருந்தாவன பிரவேசம்

இடையர்கள் மரமுடைந்தது இடரென்று எண்ணி
உடைமைகளுடனே வேறு ஊருக்கு செல்லநினைத்தனர்
தீயசகுனம் என்று திடமாய் நம்பி
மாயன் உன்பெருமையை மறந்து நின்றார்கள்

உபநந்தன் என்ற ஒரு இடையன்
உபாயமாய் மேற்கே ஊரொன்று உள்ளதென்றான்
பிருந்தா வனமான பிரியமான காடு
மருவில்லா அழகான மகத்தான காடென்றான்

உடனே நந்தன் ஊர்மாற எண்ணமிட்டு
மடமடவென கோட்டையை மாற்றிட விரைந்தான்
வண்டியில் உன்னையும் வளமான தாயாரும்
அண்டியே இடையர் அனைவருமாய் சென்றனர்

குளம்பொலி கேட்க கூட்டமாய் செல்ல
உளமார மக்கள் உன்னைத் தொடர
இன்னிசைப் பேச்சை இதமாய் கேட்டு
தன்னிச்சையாய் அவர்கள் தளிர்நடை போட்டார்கள்

மலர்கள் பலசூழ மனதைத் தொட்டகாடு
அழகிய குந்தம் அடர்த்தி புற்கள்
பச்சைக் கல்லாய் படர்ந்து நிற்க
இச்சை கொண்டு இனிதாய்நீ மகிழ்ந்தாய்

அரைச் சந்திர அழகாய் வீடுகள்
இடைச் சிறுவர் இனிதே வாழ
வனத்தின் அழகை வளமையைக் கண்டு
மனமும் மக்களும் மகிழ்ந்து நின்றனர்

களிந்தன் மகள் களிப்புடன் ஓட
வழியில் யமுனை வகையாய் ஓட
அன்னப் பறவை அழகாய் நடக்க
இன்னல் நீக்கும் இனிய தாமரை கண்டாய்

மயில்கள் பலவும் மகிழ்வாய் அகவ
குயில்கள் பலவும் கூக்குரல் போட
மணிகள் பலவும் மகிழ்வுடன் பரவிட
அணுகலனாய் அந்த அழகிய மலைகண்டாய்

களிந்தன் மகள்யமுனை கனிவுடன் பாய
ஒளிர்ந்த மகன்நீ ஒய்யாரமாய் நடந்து
நான்கு புறமும் நடந்து சென்றாய்
மான்கள் பசுக்கள் மயில்கள் கண்டாய்

இடையர்கள் பலருடன் இடைவிடாது மேய்க்க
மடைதிறந்த வெள்ளமாய் மகிந்த கண்ணன்
வனத்தில் மாடுமேய்த்து வளமாய் நடந்தவனே
குணமாக்கு என்னைக் கொடிய நோயிலிருந்து !

தசகம் 50

வத்ஸாஸுரன் பகாஸுரன் வதம்

கண்ணுக்கினிய திருமேனி கண்ணன் நீகொண்டு
கன்றுகளை மேய்க்க கவரும் அழகனாய்
கொம்பும் எக்காளமும் குழலும் பிரம்பும்
அம்பலத்தன் கையில் அழகாய் தாங்கினாய்

உந்தன் தூயதிருவடி உலகைக் காக்க
அந்த திருவடியை அழகிய இலக்குமிவருட
மரமும் கொடியும் மலையும் வயலும்
உரங்கள் பெற்று உலகைக் காக்குமே

பிருந்தாவன நந்தவனம் புல்லும் பசுமையும்
அரும்பிய மலரும் அகன்ற கரையும்
ஓடும் யமுனையும் ஒய்யார  கோவர்த்தனமும்
பாடும் மயிலும் பையபைய நடந்திடுமே

கன்றின் வடிவிலே கழுத்தை திருப்பி
அன்று அந்த அசுரன் வந்தானே
கண்டவுடன் அவன் கால்களை பிடித்து
அண்டம் அதிர ஆங்கே சுழற்றினாய்

கொடிய அசுரன் காட்டில் அழிந்திட
பொடிப்பொடியாக மரங்கள் புவனத்தில் உதிர
கூடிய தேவர்கள் கூவியே ஆர்ப்பரிக்க
ஆடிப்பாடி மலர்தூவி ஆனந்தம் கொண்டனரே

மலர்கள் மேலேவிழுந்திட மண்ணில் நறுமணம்கமழ
மலர்கள் குவியலில் மங்களமாய் நீஇருந்தாய்
எங்கிருந்து மலர்கள் எழிலாய் வருகின்றன
பொங்கிடும் மரங்கள் பொலிவாய் தூவுமே

கடுவெப்பம் மிகுந்தநாளில் காட்டில் திரிந்தபடி
மடுவை நோக்கி மலைநடுவில் நடக்க
கைலாய மலைபோல் கைகளை அசைத்து
பெரியபகன் அசுரனாய் பாதையில் வந்தான்

உன்னை விழுங்க ஓடிவந்தவனை உடனே
தன்வாயால் கக்கவைத்தாய் தளராது நீயும்
இவனே அசுரன் இனியென்ன செய்வானோ
அவன் பெருத்த அலகைப் பிளந்தாய்

உடன்பிறந்த சகோதரி உலகை நீத்தாளே
உடன்பிறந்த சகோதரன் உலகை நீத்தானே
அவன் பூதனையை அடைய அகாசுரனுக்குமுன்
அவனியை விட்டு அவசரமாய் மறைந்தான்

இப்படி லீலைகள் இவ்வுலகில் செய்து
அப்படியே பிருந்தாவனம் விட்டு வந்தாய்
ஆயர்பாடியில் தந்தை அன்னை காண
மாயக்கண்ணன் ஓடிவந்து மகிழ்வைத் தந்தாய்

தசகம் 51
அகாசுரன் வதமும் வனவிருந்தும்

இடைச் சிறுவர்களுடன் இடையன் காட்டில்
விடியற்காலையில் கன்றுகளுடன் விருந்துண்ண சென்றாய்
கட்டுச்சோறும் ஊறுகாயும் கம்பளியும் எடுத்து
சிட்டுக்குருவி போல் சிறார்கள் சென்றனர்

திருவடித் தாமரை திக்கெங்கும் தூசுபறப்ப
உருவத்து அழகை உலகம் கண்டிட
கருமேனி எழிலுடன் கார்முகில் வண்ணமுடன்
சிறுபிள்ளை நீநடக்க சிந்தை மகிழுமே

அகன் என்ற அசுரன் அங்கே
அகன்ற மலைப்பாம்பாய் அசைந்து வந்திட
அச்சத்தை ஊட்டி ஆரவாரம் எழுப்பி
இச்சகத்தை கலக்கி இன்னல் தந்தான்

காட்டில் விளையாடும் காலை வேளையில்
மாட்டிய சிறுவர்கள் மறைந்தனர் வாயினுள்
பெருமலை உடலாய் பெருத்த பாம்பினுள்
மறுகணம் அவர்கள் மறைந்து சென்றனர்

கன்றுகளும் நண்பர்களும் காட்டினில் மறைய
அன்று நீஅங்கே அவர்களை மீட்க
சோம்பல் ஏதுமின்றி சொல்லாது விரைந்தாய்
பாம்பின் வாயினுள் பத்திரமாய் நுழைந்தாய்

உன்திருமேனி வளர்ந்து உள்ளுக்குள் விரிய
கண்விழி பிதுங்க கருவளையம் விரிய
நிலத்தில் விழுந்து நிலைகுலைந்த பாம்பின்
பிளந்து நீயன்று பெருமையுடன் வந்தாய்

அசுரனும் மடிய ஆங்கே பேரொளிவந்திட
அசுரன் உன்னில் ஆனந்த ஜோதியாக
தேவர்கள் பாட திருவடி தொழுதிட
காவல் புரியும் கண்ணன் மேன்மையே!

உன்னைத் தொடர்ந்து ஊருக்கு வந்து
கண்ணை மூடி களிப்புடன் ஆடிப்பாடி
உச்சி வெயிலில் உணவை அருந்த
மெச்சி உன்புகழ்பாடி மேன்மை எய்தினரே

கொம்பினை இடையில் கொலுவிருக்க வைத்தாய்
தம்பிநீ அண்ணனுடன் தாமரைமலரில் சோற்றை
அன்புடன் ஏந்தி அறுசுவை உண்டாய்
கண்ணணனே உன்னழகு காணக் கிடைக்குமோ

வனத்தின் இடையிலே வைகுண்ட வாசன்நீ
மனத்திற் கினியவனாய் மண்ணிலே உண்டாய்
திகட்டாத தேனமுது தித்திக்கும் நல்லமுது
அகத்தினில் கண்டேன் ஆருயிர் காப்பாய்!

**கம்பளியும் தோள்மேலே கட்டுச்சோறும் அதன்கீழே**
**நம்பிவந்த ஆவினங்கள் நாடிடுமே வெறும்மூங்கில்**
**கொம்பொன்றில் துளையிட்டு கூகூவென்று ஊதிடுவான்**
**அம்புவியின் அழகெல்லாம் அடைக்கலமோ இவனிடமே**

**சங்கண்ணா**

தசகம் 52
பிரம்மனின் கர்வத்தை அடக்குதல்

அகாசுரன் அழிவில் ஆற்றலை இழந்தாலும்
தகாத செயலில் தன்மையின் பெருமையை
அறிந்திட பிரம்மன் ஆவலும் கொண்டான்
தெரியாதபடி கன்றுகளை தொலைய வைத்தான்

கன்றுகளை காணாது கண்ணீருடன் இடையர்கள்
அன்று கலங்கி ஆயர்கள் இருக்க
பாதியுண்ட சோற்றுடன் பரமன் நீசெல்ல
மீதியுள்ள சிறாரையும் மெத்தனமாய் மறைத்தான்

ஒவ்வொரு கன்றும் உன்வடிவில் உருவாக
ஒவ்வொரு இடைச்சிறுவரும் உன்வடிவில் உண்டாக
புல்லாங்குழலும் உறியும் புதிய பாத்திரமும்
இல்லாத பொருள்யாவும் இருக்கச் செய்தாய்

கன்றுபசு சிறுவர்கள் கண்ணிலே தெரிந்திட
அன்று கோகுலம் அழகிலே மின்னியதே
காணக் காண கண்களும் பனிக்குமே
பூணப்பூண உருவங்கள் பொலிவாய் இருக்குமே

யாரிவன் என்றே அறியாத போதே
பாரிலே மகனென்று பந்தபாசம் கொள்கிறோம்
ஊரிலே உன்னை உயிராய்க் கொண்டவர்
பேரின்ப மகனாய் பெருமையுடன் பெற்றனரே

ஒருவருட காலம் உன்னை மகனாய்
திருமேனி சீராட்டி பாராட்டி வளர்த்தனர்
உன்தமையன் பலராமனும் உண்மை அறியாது
உன்னோடும் உறவாடி ஊரோடு வாழ்ந்தான்

ஆண்டின் முடிவில் அங்குவந்த பிரம்மன்
காண்பது கனவோஎன கண்மயங்கி விழுந்தான்
நிழல்எது நிஜமெது அறியாது நின்றான்
குழலூதி நிஜத்தை கண்ணறிய வைத்தாய்

நீருண்ட மேகமாய் நிறைந்த வடிவமாய்
பாருக்குள் படுத்த பாம்பின் அரசனாய்
சீரும் சிறப்புமாய் சிந்தை மயக்கி
ஊரும் சிறக்க உருவங்களாய் நின்றாய்

கணக்கில்லா வடிவங்களில் கண்ணிலே தெரிந்தாய்
மனத்தை மயக்கி மடமை போக்கினாய்
எல்லா இடங்களிலும் எழுந்து அருளினாய்
நெற்சோறு உருண்டையுடன் நேரிலே வந்தாய்

தசகம் 53
தேனுகாசுர வதம்

ஐந்து வயது அழகனாய் ஆனாய்
பந்துக்களாய் கொண்டு பசுக்களை மேய்த்தாய்
கன்றுபசு மேய்த்து கவர்ந்து நின்றாய்
அன்று அழகாய் ஆயர்களை மயக்கினாய்

ஓராயிரம் வண்ணங்கள் ஒளிர நின்றவனே
ஆறாவது வயதில் அதையே தொடங்கினாய்
நிலத்தைக் காத்திட நித்தம் பணிபுரிந்தாய்
உலகில் அழகனாய் உத்தமனாய் நின்றாய்

காட்டின் நடுவில் கன்றுகளோடு திரிந்தாய்
காட்டிலே அசுரனைக் காணவே சென்றாய்
ஸ்ரீதாமன் சொல்லைக் கேட்டு சென்றாய்
ஸ்ரீனிவாச அவதாரனே ஸ்ரீதரனே கேசவனே

பலராமன் உன்சொல் கேட்டு வந்தான்
பலமாய் பனைமரங்களை பலராமன் உலுக்கினான்
பழுத்தவையும் பழுக்காதவையும் பாதையில் உதிர்
கழுதைவேட தேனுகாசுரன் கடகடவென வந்தான்

தேனுவை காக்கவந்த தேவனே கண்ணனே
தேனுகாசுரனை கொல்ல திறம்பட பலராமனை
திண்ணமாய் நியமித்து தேவர்களை காத்தாய்
உண்மை அதுவே உலகம் அறியுமே

பகவானே அங்கே பலத்த அசுரர்கள்
மிகவும் வேகமாய் மெத்தன நரிகளாய்
உன்னை நோக்கி ஓடிவந்திட நீயும்
கண்ணிமைக்கும் நேரத்தில் கரங்களால் எறிந்தாய்

நரிகளின் கூட்டத்தை நாவற் பழங்கள்போல்
அரிதின்றி நீயன்று ஆவலுடன் எறிந்தாய்
வருணன் பெயரும் ஜம்புகனாய் இருக்க
கருத்தில் கொண்டு பெருமை தந்தாய்

முரன்என்ற அசுரனின் முதன்மை பகைவனே
அரன்உந்தன் புகழை அறிந்த தேவர்கள்
அவதாரப் பயனை அடைந்ததாய் துதித்தனர்நீயோ
அவதாரப் பயன் அழகான பழமென்றாய்

தேனைப் பெருக்கும் திகட்டாத பனம்பழம்
மானை குழலூதி மயக்கும் கண்ணனே
பனம்பழங்கள் பலவுண்டு பரவசமாய் இடையர்கள்
மனம்நிறைய பெருமிதத்துடன் மகிழ்வாய் இருந்தனர்

அசுரனைக் கொன்றவனே அன்பரைக் காத்தவனே
பசுக்களின் பாலகனே பலராமன் சகோதரனே
குருவாயூர் தலைவனே குலங்கள் காப்பவனே
அருளைப் பொழிவாய் அடியன்நோயை காப்பாய்

தசகம் 54
காளியனின் நஞ்சினால் துன்பம்

முன்னொரு காலத்தில் முனிவர் ஸௌபரி
பன்னிரண்டு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தான்
சிற்றின்பம் கொண்ட சிறுமீன்கள் மேலன்று
பற்றுதல் கொண்டு பவித்திரம் குறைந்தான்

கருடன் பசியின் கடுமையில் மீனை
தருணத்தில் கவ்வி தானே உண்டான்
உயிர்களை கொல்லும் உளம்கொண்ட கருடனே
உயிரை இப்போதே ஒருநொடியில் விடுவாய்

பாம்பரசன் காளியன் பகைமை கொண்டு
பாம்புகளின் செருக்கில் பகைவன் பங்கையுண்டான்
கருடன் சிறகால் அடித்து விரட்ட
கருடன் வரமுடியா யமுனைக்கு வந்தான்

கொடிய காளிங்கள் கொட்டிய விடத்தில்
மடிந்தன பறவைகள் மரங்கள் யாவும்
கூட்டமாய் அவை கீழே விழுந்திட
வாட்டத்தில் உன்மனம் வாடியே நின்றது

பலராமன் துணையின்றி பாலகன் நீசெல்ல
உலகில் வெப்பம் உடலைத் தாக்க
தாகத்தில் பசுக்கள் தண்ணீரை அருந்த
சோகமாய் நச்சுநீரை சுலபத்தில் குடித்தார்கள்

நிலத்தில் விழுந்தவரை நிறைவாக பார்த்தாய்
உலகில் அவர்களை உயிர்ப்பித்து எழச்செய்தாய்
கடைக்கண் பார்வை கணநேரம் பட்டாலே
மடைதிறந்து அமுதம் மண்ணிலே சுரக்குமே

என்ன என்ன என்ற கூக்குரலுடன்
கண்விழித்த இடையர்கள் கண்ணனைக் கண்டனர்
உன்பெருமை அறிந்ததால் உன்னருள் உணர்ந்தார்கள்
மண்ணில் உன்னருமை மனதார அறிந்தார்கள்

உயிர் பிழைத்த உன்னருமை பசுக்கள்
உன்னை சூழ்ந்து ஓடிவந்த அழகென்ன
உன்குழல் ஓசையில் உலகம் மகிழ
சின்னக் கண்ணனே சிங்கார மன்னனே

நஞ்சுண்ட இடையர்கள் நலமாக விழிக்க
தஞ்சமென்று உன்னடி தலைவணங்கி நிற்க
எங்கும் ஆனந்தம் எழிலாய் பொங்க
சங்கும் முழங்க சரித்திரம் படைத்தாய்

பக்தர்கள் உயிரிழந்தாலும் பக்கத்தில் வந்து
பக்தர் பிழைக்க பார்வை உதவுமே
என்னைப் பிடித்த இந்த நோயைநீக்க
உந்தன் ஓரவிழி ஒருமுறை விழாதோ.

தசகம் 55
காளிய நர்த்தனம்

யமுனையில் இருந்த காளியனை விரட்ட
யமுனையைக் காக்க யாதவன் நீவந்தாய்
பாம்பரசனை விரட்ட பாலகன் வந்தாய்
கதம்ப மரத்திலே கால்வைத்து ஏறினாய்

திருவடித் தாமரைகளை தளிரெனக் கொண்டு
அருளும் நோக்கிலே அன்று குதித்தாய்
அச்சத்தை கொடுக்கும் அலைகள் மோதியநீரில்
உச்சத்தில் இருந்துநீ உயர குதித்தாய்

மூன்று உலகம் முழுதாய் தாங்கியவன்
தோன்றிய அவதார திருக்கண்ண பிரானே
நீரின்அளவு மேலேயேறி நிலத்தை மூழ்கடிக்க
பாரிலே உண்டான பேரிரைச்சல் கேட்டாயோ

திசைகள் யாவும் திகைப்பில் கலங்க
தசையை கிழித்த தாண்டவ ஒலியில்
கடுஞ்சினம் கொண்ட காளிங்கன் சீறிட
மடுவிலே விரைந்து உன்னருகில் வந்தான்

தீப்பொறிகள் பறக்க திக்கெட்டும் திடுக்கிட
காப்பவனே உன்னை காளிங்கன் எதிர்கொண்டான்
பலகொடி முடிகளுடன் பருத்த கருமலையாய்
சுலபத்தில் உன்னருகில் சுதந்திரமாய் வந்தான்

பெரிய பாம்பரசன் பெற்றானே கொடுவிடம்
அரிய பாலகன் அருகில் வந்தான்
கொடிய மூச்சும் கொடிய நஞ்சும்
கொடிய கண்களும் கொண்டி ருந்தான்

இடையர்கள் உன்னை இடத்தில் காணாது
விடையைத் தேடி விரைந்து வந்தனர்
படையாய் கூடிய பசுக்களும் சூழ
தடையாய் சிலதீய சகுனங்கள் வந்ததுவே

உன்னைக் காணாது உயிரை விட்டுவிட
உன்னருமை பக்தர்கள் உடனே தயாராக
ஒருநொடியில் நீயும் உலகில் வந்தாய்
கருத்துடன் சிரித்து கணநேரத்தில் வந்தாய்

காளிங்கன் மேலே நீ கால்வைத்தாட
ஆலிங்கனம் செய்த ஆலைகள் அசைய
பாதங்கள் கிண்கிணி பரவசத்துடன் சிணுங்க
வேதங்கள் புகழும் வேணுநாதனே உன்நர்த்தனமே

திருநடனம் கண்டு தேவர்கள் மகிழ
உருவத்தில் அழகான உத்தம புருஷனே
அருமருந்தாய் நீஆடிய ஆனந்த தாண்டவமே
குருவாயூரப்பா போக்குவாய் குறையான என்நோயை

தசகம் 56
காளியனுக்கு அருள் புரிதல்

துந்துபி முழங்க தூவிடும் மலர்களில்
உந்தன் அழகை உளமார தேவர்கள்
கண்டு மகிழ களிப்புடன் பாட
குண்டலங்கள் அசைய குதூகலமாய் ஆடினாய்

வணங்கிய தலைகளைவிட்டு வணங்கா தலைமேல்
அணங்கே நீஅழகாய் ஆடிட மிதித்தாய்
திருவடித் தாமரைகள் திறம்பட பதிய
அருளிய விளையாட்டில் ஆனந்த நர்த்தனம்

மாதவனே உன்னால் மிதிக்கப் பட்டு
யாதவனின் அருளினால் யமுனையை காத்தாய்
தண்ணீர் சிவப்பாக தலைகள் தொங்க
கண்ணீருடன் மனைவியர் கண்ணனை தொழுதனரே

நீண்ட நாட்களாய் நின்புகழை அறிந்தவர்
வேண்டி உன்னை வணங்கி இருக்க
மனம் ஒன்றி மாதவனை துதிக்க
குணவானே அவர்களின் குலத்தை காப்பவனே

அவர்களின் வேண்டுதலுக்கு அன்புடன் இரங்கி
தேவனே அருள்கூர்ந்து திருவடிகள் தளர்த்தினாய்
அச்சுதன் அருளால் அரசன் உயிர்பெற
மிச்சமுள்ள தலையை மெத்தனமாய் தந்தாரே.

கடலின் நடுவில் கருடனைத் தவிர்த்து
உடலோடு இரமணகத்தீவிற்கு உடனே செல்ல
உன்சொல்லை மதித்து உளமார வணங்கி
அன்போடு காளிங்கன் அங்கே சென்றான்

காளியனின் மனைவியர் கைரத்தினங்கள் பூணி
ஆலிங்கனம் செய்த அழகான மாலைகளுடன்
கண்ணீர் பெருக்கிய கருணை மக்களுடன்
மண்ணில் நீமகிழ்ந்து மாலையில் கூடினாய்

இருள் சூழ்ந்த இரவில் அங்கே
அருளை வேண்டி அடைக்கலமாக உறங்க
காட்டுத்தீ சூழ கலக்கம் வந்திட
வாட்டமுடன் இடையர் வணங்கி நின்றனர்

காப்பாற்று என்றவர் கூக்குரலிட்டு நிற்க
காப்பாற்ற நீயும் கண்ணிமைப் பொழுதில்
கடுந்தீயை பருகி காத்து நின்றாய்
பெருந்தீயை பருகிய பேறுபெற்ற திருவாயே

மஞ்சள் வண்ணத்தை மதுசூதன் பெற்றிட
தஞ்சமென்ற மக்களை தருணத்தில் காப்பவனே
கொஞ்சும் அழகில் கொலுவிருக்கும் மன்னனே
அஞ்சலென்றேன் அடியேன் நோயைப் போக்குவாய்

தசகம் 57
ப்ரலம்பாசுர வதம்
ஒளிவீசும் அணிகளை ஒய்யாரமாய் அணிந்தவனே
அளிப்பது எல்லாம் அளிக்க வல்லவனே
இடையர்கள் பலருடன் இனிதாய் நடந்தவனே
உடையது எல்லாம் உடைய மன்னனே

பலராமன் உடன்வர பாண்டீகரம் செல்ல
அழகான ப்ருந்தா வனத்தை அளந்தவனே
தடியை எடுத்த தனிச்சிறுவர் பலருடன்
கொடிபோன்ற மேனியுடன் கோவிந்தனே வந்தாய்

கொல்ல வந்த கொடியவன் ப்ரலம்பன்
இல்லாதவன் அவன் இடையன் உருகொள்ள
மல்லுக்கு நிற்க மாதவன் உன்முன்னே
கல்லாதவன் பிரலம்பன் கண்முன் வந்தான்

அறிந்தும் அறியாதவனாய் அசுரனுடன் நட்புற்று
சிறந்த இடைச்சிறுவருடன் மற்போர் புரிய
ஆலமரத்தின் அடியில் ஆண்டவனே நீதங்க
கோலமான உன்னுருவை கோலாகலமாய் கண்டோம்

இடையரை இரண்டாக பிரித்து நிறுத்தினாய்
படைகளுக்குத் தலைவனாய் பலராமன் ஒருபுறம்
மறுபுறம் மாதவன் நீயிருக்க அசுரன் உன்
அருகில் இருக்க ஆவல் கொண்டான்

போரில் தோற்றவன் வெற்றி பெற்றவனை
பாரில் சுமக்க பலங்கள் பரீட்சித்தாய்
பக்தனுக்கு அடிமை பலமாய் சொல்ல
அக்கணம் ஸ்ரீதாமனை அங்கே சுமந்தாய்

முழுமுதற் கடவுளே முதன்மை பெற்றவனே
பொழுதில் தோற்றவர்கள் போரில் சுமக்க
பிரலம்பன் பலராமனை பெரிதாக தூக்கினான்
கரங்கள் தூக்க கால்கள் தொலைவில் நடந்தான்

பலராமன் தன்னை பலமாக்கி நிற்க

பிரலம்பன் சுயுருவம் பிரகாசமாய் காட்ட
அஞ்சியே பலராமன் அண்ணாந்து பார்க்க
கொஞ்சிய உன்திருஉருவம் கொஞ்சமாய் கண்டான்

அச்சம் விலகிட ஆரவாரம் கொண்டான்
உச்சத்தில் அசுரனை உடனே தாக்கினான்
கைமுட்டி தாக்கி கணத்தில் குத்தினான்
ஐயங்கள் அகன்று ஆகாயத்தில் தூக்கினான்

அசுரனை பலராமன் அடித்து கொல்ல
பசுக்களை மேய்ப்பவனே பாலகனே கண்ணனே
தேவர்கள் பூமாரி திவ்யமாய் பொழிய
சேவகம் செய்ய சென்றனரே எல்லோரும்

கருவண்டு போலவே கருப்பு நிறத்தவனே
அருளும் அழகனே ஆனந்த வடிவமே
இன்றே என்நோயை இக்கணமே குறைத்து
என்றும் எங்களை எழிலுடன் காப்பாய்.

தசகம் 58
காட்டுத்தீயினின்று விடுதலையும் பருவ வருணனையும்

இடையரோடு விளையாட எண்ணம் கொண்டாய்
உடையவரோடு தொலைவில் உரையாடிச் சென்றாய்
கடைசியில் ஐஷீகம் காட்டினைக் கண்டாய்
தடைகள் கடந்து தாண்டியே சென்றாய்

கோடையின் வெப்பம் கொந்தளிக்க வைக்க
வாடையில் காற்று வெந்து புழுங்க
பசுக்கள் வாடிவதங்கி பாலகனுக்கு ஏங்க
பசுக்கள் தாகத்தில் தவித்து நின்றன

தொலைதூரம் சென்றதில் துணைவர்களைத் தேடினாய்
மலைப்பிரதேசக் காட்டில் மறைந்தன பசுக்கள்
வழிதவறி சென்ற வகைவகை பசுக்களை கண்டாய்
அழிக்கும் தீயும் அக்காட்டை சூழ்ந்ததே

காட்டுத்தீ ஊர்முழுதும் கடுமையாய் பரவிட
வாட்டமிகு மக்கள் வாடி வதங்கிட
காக்கவே வந்த கருணை வள்ளலே
போக்கிடு துன்பத்தை புவியினில் இன்றே

அஞ்சியது போதும் ஆவன செய்வேன்என்றாய்
முஞ்சங்காடு இல்லை முகுந்தன் உண்டு
காட்டுத்தீ காணவில்லை கண்ணை மூடிட
பாண்டீரக மரமே பார்வைக்குத் தெரியுமே

உன்னைப் புகழ்ந்து உளமார வாழ்த்திட
புன்னகை புரிந்து புதிர்கள் செய்தாய்
மலர்கள் சூழ்ந்த மண்டலக் காட்டில்
மறுபடி சுற்றி மகிழ்வுடன் திரிந்தாய்

வெம்மையை பரப்பிய வெயில் கொடுமையில்
செம்மை உள்ளத்து சேற்றைப் போக்கி
உன்கை போன்ற உயரே கிளம்பிவெயில்
துன்பத்தை தந்திட துயரம் போக்குவாய்

காலங்கள் மாறிட காட்சியும் மாறிட
கோலமாய் மழையும் குகைகளில் பொழிய
மேகங்கள் ஒளிவீசி மின்னல் இடித்திட
சோகங்கள் போக்குபவனே சுந்தரனே கண்ணனே

கோவர்த்தன மலையின் குகைகளில் தங்கினாய்
தேவர்களின் தலைவனே திருமாலின் அவதாரமே
மயில்கள் ஒலியெழுப்ப மல்லிகை மணம்கமழ
குயில்கள் கூவிட கோவிந்தனை வணங்குவோம்

சரத்காலம் நீர்பெருக்கிட சந்தோஷம் மிகுந்ததே
வரம்தரும் நாயகனே வகைவகை பசுக்களுடன்
காட்டில் புல்மேய்ந்து காலத்தை ஓட்டினாய்
வாட்டம் தரும்என் நோயைநீயே போக்குவாய்.

தசகம் 59
வேணுகான வர்ணனம்

உந்தன் திருமேனி உள்ளம் கவர்ந்தே
சிந்தை மகிழ்ந்திட ஸச்சிதானந்தமே
அன்பினை பெருக்கும் அழகிய காயாமலரே
உன்மேனி கண்டு உள்ளம் மகிழ்ந்தனரே

கோபியர் உன்னழக் கொண்டாடி மகிழ்ந்திட
சோபிக்கும் அழகில் சுகந்தம் வீசிட
காலையில் நீயும் காட்டிற்கு செல்ல
சோலையில் மயங்கி சுந்தரமாய் சென்றனரே

மானின் விழிகளை மங்கையர் கொண்டிட
தேனிசை கேட்டிட தேடியே வந்தனர்
புல்லாங்குழலிசை பூரிப்பாய் கேட்டிட
உல்லாசமாய் உன்விளையாட்டை பாடிக் களித்தனர்

காட்டிற்கு நீயும் காலாற சென்று
பாட்டும் ஆட்டமும் பாலகன் கேட்டு
நிழல் தரும் நிலைமரத்தடியில் நின்று
குழலூதி அழகாய் குதூகலம் தந்தாய்

உன்னுடைய இன்னிசை உலகத்தை மயக்கியதே
விண்ணுலகப் பெண்டிரையும் விரைவில் மயக்கியதே
மன்மதன் அம்புகள் மண்ணுலகை தாக்க
அன்பிலே மயங்கி அண்டம் அசையாதிருந்ததே

விரல்நுனிகள் துளைகளை விளையாட்டாய் வருட
மரத்தடியில் கானம் மகிழ்வாய் பிறக்க
திருவடிகள் தாளத்திற்கு திறம்பட அசைய
கருத்தினை கவர்ந்து காற்றினிலே வந்திடுமே

உன்னைக் கண்ட உத்தம மாதர்களை
உன்னிசை கேட்ட உயரிய பறவைகளை
உன்திருவடி பசுக்களை உல்லாச விலங்குகளை
உன்னருமை பிருந்தாவனத்தை உற்றவர் கொண்டாடினரே

உதட்டில் வழியும் உருகும் அமுதத்தை
பதட்டத்துடன் அவரும் பருகிட துடிக்க
இதமாய் வேணுகானம் இன்னிசையாய் பெருகிட
அதரம் மதுரம் ஆனந்த மதுரமே

இல்லத்து வேலைகளை இவர்கள் செய்யாது
உள்ளத்தை பறிகொடுத்து உன்னையே நினைக்க
கள்ளமில்லா காதலில் கட்டுண்ட கோபியரே
அள்ளஅள்ள குறையாத அளவில்லா ஆனந்தமே

இயற்கையாய் கொண்ட இனிய காதலில்
செயற்கை இன்றி சிந்தை பறிகொடுத்து
உயரிய பேறு பெற்ற உன்னருமை கோபியரை
அயராது காப்பவனே அடியேனையும் காப்பாய்

## தசகம் 60

### கோபியரின் ஆடை கவர்தல்

காதலில் வயமிழந்து கருத்தினை பறிகொடுத்து
பாதங்களில் தலைசாய்த்து பார்வதியை வணங்கி
ஆற்றிலே மணலால் அழகான உருவம்செய்து
போற்றியே பாட பூத்திருந்து வந்தார்கள்

நந்தகோபன் மகனே நல்லதொரு கணவனாக
சிந்தை மயங்கி சிறப்புடன்  வேண்ட
மந்தகாச பெயர்களை மகிழ்வுடன் பாட
அந்த யமுனைக்கரையிலே அவர்கள் கூடினரே

ஒருமாதம் நோன்பு ஓயாது கொண்டு
அருளும் உன்னை அனுதினம் துதித்து
ஆனந்த வெள்ளத்தில் அவர்கள் மூழ்கிட
வானத்து வேந்தனே வரம்தரும் நாயகனே

ஆடைகள் அகற்றி அங்கம் துலங்குகையில்
வேடங்கள் புனையும் வேணுகானனைக் கண்டிட
ஆற்றின் கரையில் அவர்களும் வெட்கமுற
மாற்றங்கள் இல்லாதவனே மதுசூத வண்ணனே

ஆணழகன் உன்னை ஆற்றங்கரையில் கண்டதும்
நாணத்தில் தலைகுனிந்து நங்கையர் நின்றிட
ஆடைகளை எடுத்து அந்தமரங்களில் நீகட்டிட
கோடை காலத்து குளிர்நிலவே கோவிந்தனே

அழகிய கண்களுடன் அவர்களை நோக்கினாய்
பழகிய தொனியில் பரிகாசம் செய்தாய்
குழந்தை வடிவிலே கோலாகலம் செய்பவனே
குழலூதி அவர்களை கிறங்க வைத்தவனே

உன்னழகில் மயங்கி உடலும் வெட்கி
சின்னப் பிள்ளையே சித்தம் குளிர்விப்பவனே
எங்கள் ஆடைகளை எங்களிடம் தருவாய்
மங்களம் பொங்கிட மங்கையர் கேட்டனரே

உன்னையே அடைக்கலம் உள்ளத்தால் அடைந்து
உன்னைக் கைகுவித்து உவகை பெற்றவுடன்
சின்னக் குழந்தையாய் சிறகை விரித்து
புன்னகை பூத்தபடி புத்தாடைகள் தந்தாய்

உங்கள் விருப்பத்தை உள்ளபடி அறிந்தேன்
திங்கள் நிலவும் திறம்பட பேசும்
ஆற்றின் கரையில் அனுதினம் வந்திடும்
போற்றிடும் பெண்டிரே பேறுகளைப் பெறுவீர்

விழிகள் மான்போல் வீற்ற கோபியர்
வழிகாட்டிய உன்னை வருடும் பார்வையுடன்
மீண்டும் மீண்டும் மெல்லப் பருகி
வேண்டியதை நிறைவேற்ற வீட்டிற்கு சென்றனர்

அருளால் கனிந்த அந்த கோபியருக்கு
அருள்புரிந்து காத்த ஆனந்த கண்ணனே
பிணியை நீக்கிடும் பேரானந்த வள்ளலே
பேணிக் காக்கும் பிரகாச மன்னனே

தசகம் 61
அந்தணன் மனைவிக்கு அருள் புரிதல்

அந்தணப் பெண்டிருக்கு அருளும் நோக்கத்தில்
சுந்தர வடிவனே சுகந்த உருவனே
பசுக்களின் கூட்டத்துடன் பிருந்தாவனக் காட்டில்
அசுரனை வதம் செய்து அழகாய் சென்றாய்

இடைச்சிறுவர்கள் காட்டில் இல்லாத உணவினால்
விடைதேடி அலைய வேந்தனே நீஅவர்களை
வேள்வியில் ஈடுபட்ட அந்தணரிடம் உணவை
கேள்வியாய் வேண்ட அனுமதி தந்தாய்

உந்தன் திருப்பெயரை உச்சரித்து இடையர்கள்
அந்தணர் காதுபட உணவினை வேண்ட
காதுகேட்டும் கேளாதவர்போல் கண்மூடி அவர்கள்
வேதம் அறிந்தும் அறியாதவர் ஆனாரே

அந்தணர் பக்தியுணவு அறியாது இருக்கையில்
அந்தணர் உணவினை அளிக்காமல் இடையர்கள்
மனம்வருந்தி உன்னிடம் மன்றாடி வந்தனர்
குணம் பொருந்திய குலக்கொழுந்தே கோவிந்தனே

அந்தணரின் மனைவியர் அறிவர் என்னை
பந்தமிகு அவர்களிடம் யாசிக்க செல்வீர்
மணமிகுந்த மலர்சூடிய மங்கையர் அவர்கள்
உணவினை பகிர்ந்து உங்களுக்கு தருவார்

உன்னைக் காணவே ஓடோடி வந்தனரே
உன்பெயர் கேட்டதும்  உடனே வந்தனரே
உண்ணல் தின்னல் நக்கல் பருகல்
என்ற நான்வகை எடுத்து தந்தனரே

கொண்டையில் மயில்தோகை கொலுவான அழகில்
குண்டலம் காதுகளில் கசியும் ஒளியில்
மண்டலம் காப்பவனே மாறாத காட்சியனே
அந்தணர் கண்டிட ஆங்கே வந்தாயே

உன்னைக் காண ஓடிவந்த மனைவியை
தன்கை பிடித்து தடுத்து நிறுத்திட
உன்னையே எண்ணி உவகை கொண்டு
உன்திருவடி பணிந்து உயிரும் நீத்தனள்

அருளைப் பெற்ற அந்தணர் மனைவியர்
திருஉருவம் கண்டு திரளாய் உன்பின்னால்
வீட்டினை துறந்து வேள்வியை மறந்து
காட்டினில் உன்பின் காணவே வந்தனர்

திருப்பி அவர்களை திசைமாற்றி அனுப்பி
கருத்துடன் அவர்தம் கணவர்மனம் மாற்றி
பக்தியை அறிந்திட பாங்குடன் உதவினாய்
பக்தன் என்னையும் பத்திரமாய் காப்பாய்

தசகம் 62
கோவர்த்தன பலி

பொருள் ஈட்ட புவனத்தில் முனைந்து
கருத்துடன் இடையர்கள் கடமையை செய்ய
எதற்கு இந்தமுயற்சி என்று அறியாதசிறுவனாய்
பதட்டமாய்  நந்தகோபரை பாசமாய் கேட்டாய்

இந்திரன் மழையை இதமாய் தந்திட
இந்திர பூஜையை இன்புற செய்வோம்
புல்லும் நீரும் புசிக்கும் பசுக்களுடன்
அல்லும் பகலும் அவனை துதிப்போமென்றார்

மழையும் காற்றும் மக்களின் நல்லூழே
அழைக்காமல் காட்டில் அடிக்கடி மழை
இந்திரன் வேலை இல்லையே அதனால்
தந்திரமாய் சொல்லி தந்தைக்கு புரியவைத்தாய்

குலத்தின் செல்வத்தை கும்பிட வேண்டும்
மலையரசன் கோவர்த்தன் மண்ணில் அவனை
தலைவணங்கி நாமும் தினமும் நிற்போம்
சிலையான மலையை சிந்தித்து நிற்போம்

மொழி கேட்டு மகிழ்ந்து இடையர்கள்
வழிகாட்டிய உன்வழியில் வணங்கி நின்றனர்
மலையை வணங்கி பலியும் கொடுத்து
விலையில்லா உன்னடியை வேண்டி நின்றனர்

தனக்கு இட்ட பலியை உண்டவனே
சினந்து இந்திரன் சீறினாலும் கோவர்த்தனம்
மகிழ்ந்து எல்லா மக்களையும் காக்கும்
பகிர்ந்து உண்டு பாடி துதிப்போம்

தடையின்றி பூஜையை தரணியில் செய்து
இடையர்கள் மகிழ்ந்து இல்லம் வந்திட
அடைமழை பெய்யவே ஆணவம் கொண்டு
படையாய் இந்திரன் பாதை மறித்தான்

செருக்கை கொண்ட சிந்தனையுடன் இந்திரன்
பெருமைகள் அறிந்தாலும் பிழையைச் செய்தான்
இழிந்த அந்த இடையன் கண்ணன் செல்வத்தை
அழித்து விடுவேன் என்று முழங்கினான்

எல்லா உலகிற்கும் எழுந்தருளும் தலைவனே
இல்லாத மாயை இவ்வுலகில் உண்டோ
இந்திரன் ஐராவதத்தில் ஏந்திய வஜ்ராயுதமுடன்
தந்திரமாய் அழித்திட தாவியே வந்தான்

குருவாயூர் தலைவனே குணங்கள் பொருந்தியவனே
அருளிடும் மலையால் அந்தணர்கள் காக்க
இன்னும் ஏன் இந்திரன் வரவில்லையென்று
புன்னகையுடன் நீயங்கு பூத்தபடி இருந்தாயே

தசகம் 63
கோவர்த்தன மலையைத் தாங்குதல்

உன்னழகு திருமேனிக்கு ஒப்பான மேகங்கள்
விண்ணிலே இடித்து வீரியம் கொண்டன
திசைகள் நடுங்க திக்கெட்டும் இடிஇடிக்க
தசைகள் நடுங்க தரணியும் ஆடியது

ஆலங்கட்டியாய் மழைத்தாரைகள் ஆங்கே விழுந்திட
கோலங்கள் கலங்கி கோகுலம் தவித்தது
இந்திரனின் வஞ்சனை இதுவேயென்று இடையர்கள்
மந்திரம் சொல்லி மன்றாடி நின்றனர்

பசுக்களை மேய்க்கும் பாங்கான இடையரை
அசுரர்களிடம் இருந்து அழகாய் காப்பவனே
இந்திரன் உண்டாக்கிய இத்தீங்கை தடுக்க
தந்திரமாய் மலையை தாங்கி பிடித்தாயே

பெருமலையின் அடிவாரம் பெருகும் வெள்ளத்தை
அருமையாய் தடுக்க அனைவரும் பொருளோடு
உன்னருகில் வந்துவிட உயரே மலையை
உன்னழகு கரத்தால் உற்சாகமாய் தூக்கினாய்

பெண்களும் ஆண்களும் பெருமலை கீழ்வந்திட
நண்பர்கள் இன்பமாக நலமாய் உரையாடினாய்
அருகில் வந்த அழகிய கன்றை
கருத்துடன் பரிந்து கரத்தால் தடவினாய்

மலையைத் தாங்கிய மதுசூதனா உன்
நிலையைக் கண்டு நிறைமனதுடன் இடையர்
இதுவென்ன விந்தை இச்சிறுவன் இடக்கையால்
அதைத் தாங்கும் அதிசயம் காணீர் என்றார்

இறுமாப்பு மிகுந்த இந்திரன் ஏழுநாட்களுக்கு
பெருமழை செருக்குடன் பெய்ய வைத்தான்
கைகள் வலித்தால் கண்ணன் விடுவான்
ஐயமே இல்லை என்று நினைத்தான்

ஐயனே உன்னாற்றல் அளவில்லா ஆற்றல்
வையத்தில் மேகங்கள் விரட்டப் பட்டன.
இந்திரன் அச்சமுற்று இவ்விடம் விட்டான்
தந்திரங்கள் செய்யாது தடுமாறி நின்றான்

பெருமழை ஓய்ந்திட பெரிதும் மகிழ்ந்து
சிறுவர்கள் பெரியவர்கள் சிரித்தபடி வெளிவந்திட
மலையை கீழறக்கி மகிழ்வை கொண்டு
விலையில்லா ஒரு விளையாட்டு புரிந்தாய்

நிலத்தை தூக்கி நிம்மதி தந்தாய்
மலையை தூக்கி மகிழ்வை தந்தாய்
அலையாய் வந்திடும் அடுக்கான நோய்களை
நிலையின்றி செய்வாய் நிம்மதி தருவாய்.

தசகம் 64
கோவிந்த பட்டாபிஷேகம்

மலையைத் தூக்கிய மகத்துவம் கண்டு
நிலையான உந்தன் நிஜத்தை உணர்ந்து
இடையர்கள் யாவரும் இறைவன் இவனே
விடையாய் கண்டோம் வேணுவின் தலைவனை

நந்தனைக் கண்டு நாடியவர் சென்று
மந்திரங்கள் சொல்லி மகத்துவம் கண்டார்கள்
உந்தன் பெருமையை ஊரும் அறிந்திட
நந்தன் உரக்க நாவினால் சொன்னார்

உண்மையை இந்திரன் உணர்ந்து நின்றான்
கண்ணன் திருவடியை கருத்தில் கொண்டான்
மணிமுடி வணங்கி மலரைத் தொட்டான்
அணியாய் காமதேனு அவனுடன் வந்தாள்

அன்பை பாலாய் அங்கே பொழிந்து
உன்னை 'கோவிந்தனாய்' உள்ளத்தால் மாற்ற
கங்கையை கொணர்ந்து கருத்துடன் அபிஷேகம்
இந்திரனும் செய்ய இவ்வுலகம் மகிழ்ந்தது

தலைவனாய் உன்னைத் தாங்கிய கோகுலம்
விலையில்லா பெருமை வீற்றபடி கொள்ள
விண்ணும் மண்ணும் வைகுண்டமும் வியக்க
எண்ணமுடியா ஆனந்தம் எல்லையின்றி கொண்டது

உனது தந்தை ஒருநாள் யமுனையில்
தனது வேலையை தான்செய்து வர
வருணன் தூதன் விளையாட்டாய் தூக்க
உருவத்துடன் நீயும் உடனே சென்றாய்

உன்னைக் கண்டதும் உவகையுடன் வருணன்
உன்னுடன் தந்தையை உடனே அனுப்ப
உன்பெருமை அறிந்து உள்ளுக்குள் தந்தை
தன் உறவினர் தமக்கு சொன்னார்

உன்னை உணர்ந்த உறவினர் யாவரும்
உன்பெருமை புகழ்ந்து உன்னுலகம் காணவிரும்ப
உன்சக்தி மூலம் உலகத்தை காண்பித்து
உன்னருமை உறவினருக்கு உவகை தந்தாய்

முழுமுதற் கடவுளே முக்கிய பிரபுவே
அமுதத்தின் பெருக்கே ஆருயிர் தலைவனே
பெருங்கடல் மோட்சத்தில் பெரியவர் மூழ்க
அருமையுடன் அவர்களை கரையேற்றி விட்டாய்

குருவாயூர் தலைவனே குழந்தை கண்ணனே
உருவத்தில் ஆயனே உத்தம புருஷனே
காய்கனிந்த இலந்தையே கண்ணபிரான் வடிவமே
நோய்களை அகற்றி நிம்மதி தருவாய்!

தசகம் 65
கோபியர்கள் பகவான் அருகில் செல்லுதல்

மன்மத விழாவை மகளிருடன் நடத்த
இன்பத்தை அளித்து இவ்வுலகில் மீட்க
அன்பனே நீயும் அன்று யமுனைக்கு
துன்பங்கள் போக்க தூயவனாய் வந்தாய்

புல்லாங்குழல் ஊதியே புன்னகை புரிந்தாய்
இல்லாதவை ஏதுமில்லை இங்கேநீ கலந்தாய்
இசையில் ஏற்றங்கள் இனிதாய் தாழ்வுகள்
விசையில் வந்ததே வேணுவின் நாதமே

வீட்டுவேலை செய்தவரும் வெளிவேலை செய்தவரும்
காட்டிற்கு ஓடிவந்து கண்ணனைக் கண்டிட
குழலோசை கேட்டதில் குதூகலம் பொங்கிட
கயல்விழி மங்கையர் கருத்தைக் கவர்ந்தாய்

அணிகலன் பாதியணிந்து அப்படியே ஓடிவர
மணிமாலை அணிந்தவனே மன்மத கண்ணனே
அழகில்லாத போதும் அழகை உணர்பவனே
குழலூதி மயக்கி கோபியரைக் கவர்ந்தவனே

இடையில் மாலையும் கழுத்தில் ஒட்டியாணமும்
உடையில் ஏற்றமும் உருவத்தில் அவசரமும்
உன்னைக் கண்டிட உற்சாகம் பிறக்க
தன்செயல் புரியாது தடுமாறி நின்றாரே

மயக்கத்தில் மறந்தபடி மங்கையவள் ஓடிவர
தயக்கத்தை விட்டு தானென்ற அகந்தைவிட
உடலும் மறந்து உள்ளம் கனிந்து
கடமை மறந்து கன்னியர் வந்தாரே

உடலால் வரமுடியாது உள்ளத்தால் கொண்டாடி
திடமாக உன்னைத் தியானித்து இருக்க
அங்கம் அறிவு ஆன்மா மறந்து
பொங்கும் அன்பை பூரணமாய் கொள்பவனே

பரமாத்மாவை உணராது பற்றுகொண்ட காதலனாய்
உரமுடன் எண்ணி உருகி கலக்க
முக்தியெனும் பேரானந்தம் முதல்முறை அவர்கள்
பக்தியில் பெற்றிட பரவசம் அடைந்தாரே

அளவற்ற ஒளியுடன் அவர்கள் விளங்க
சுலபத்தில் அடைந்து சுகமும் கொள்ள
எல்லையில்லா ஆனந்தம் எளிதில் பெற்றிட
இல்லாது போகுமே இவ்வுலகில் ஆணவமே

தசகம் 66
கோபியர்களை மகிழ்வித்தல்

அழகிய கண்களுடன் அவர்கள் நோக்க
பழகிய தொனியில் பரவசம் பொங்கிட
ஆனந்தம் பெற்றிட அங்கே துடிக்க
வானத்து மின்னலே வகையொளி மன்னனே

ஆகாயத்தில் முனிவர்கள் ஆங்கே சூழ்ந்திட
வாகாய் அனைவரும் வாழ்த்தி இருக்க
உயர்குல பெண்டிரின் உத்தம குணங்களை
அயராது நீயும் ஆவலுடன் உரைத்தாய்

உன்னை அறிந்தே உள்ளம் நோக
கண்ணிலே காதல் கடிமலராய் மலர
தங்களை கைவிடாமல் தானே காத்திட
மங்கையர் புலம்ப மாயங்கள் செய்தாய்

வருந்தி வேண்டிய வஞ்சியர் மகிழ
விருப்பத்துடன் நீயும் விளையாட யமுனை
உல்லாச காற்றில் உற்சாகம் பொங்க
இல்லாத ஆனந்தம் இவ்வுலகில் வந்திடுமே

நிலவொளி ததும்ப நிம்மதி பொங்க
உலகத்து நாயகன் உத்தம கண்ணன்
கோபியர் மனதிற்கு கோலாகலம் தந்திட
சோபித்து கரையில் சோகங்கள் போக்கினாய்

அணைத்து அரவணைத்து ஆனந்தம் தந்தாய்
இணைந்து இறுமாப்பு இல்லையென இன்பம்தந்தாய்
வினைகள் அகற்றி விளையாட்டு புரிந்தாய்
புனைந்த முத்தங்களில் பொலிவைத் தந்தாய்

இன்பம் இதுவே என்று புரிந்திட
துன்பங்கள் ஆடைகள் தொய்வின்றி களைய
இடையனே உன்னால் இடைபட்ட ஆடைகள்
விடையாய் நீங்கிட வித்தைகள் செய்தாய்

தாமரை மேனியனே தளிர்நிற கண்ணனே
காமத்து மன்னனே காவியத் தலைவனே
துளித்த வியர்வையின் தூய ஒளியே
அளிக்கும் இன்பத்து ஆனந்த எல்லையே

பிரியும் போது பேதலிக்கும் தீயுருவே
விரியும் இன்பத்தில் விளையும் வடிவமே
இராசத்தில் மட்டும் இரம்மிய உருவமே
பாசத்தில் விளையும் பரமாத்ம சுகமே

இராதையின் அங்கத்தை இரம்மியமாய் தழுவுபனே
பாதையில் தெரியும் பரமசுக விளக்கே
நோய்களை அகற்றி நிஜத்தைத் தருவாய்
வாய்பாடும் பாட்டில் வளங்களைத் தருவாய்.

தசகம் 67

பகவானின் மறைவும் மறு தோற்றமும்

ஆனந்தம் பொங்கிட அளவாளவும் சுகத்தில்
தானாக வந்ததே நானென்ற செருக்கு
கோபியர் உள்ளத்தில் கொண்ட செருக்கில்
சோதிக்க உடனே சிந்தையும் கொண்டாய்

இவனே என்னை இங்கே கண்டான்
கவலை இன்றி காதல் கொண்டான்
கர்வம் வந்தவுடன் கண்ணன் உன்னை
அர்த்தம் அறியாது ஆங்கே காணவில்லை

செருக்கின்றி இராதை சிந்தை கொண்டதால்
கருத்துடன் அவளை காதலித்து மறைந்தாய்
விருப்பத்துடன் அவளுடன் விடுவிடுவென மறைய
அருமை நாயகனே அதிசய பாலகனே

உன்னைக் காணாது உடனே அவர்கள்
துன்பத்தில் ஆழ்ந்து துவண்டு போனர்
உன்னைத் தேடியே உலகெங்கும் சுற்ற
இன்பத்தை இழந்து இன்னல் உற்றனர்

சண்பக மரமே சரியாத மாமரமே
கண்ணனைக் கண்டாயோ கள்வனைக் கண்டாயோ
முண்முருங்கை மரமே முத்தங்கள் பெற்றாயோ
விண்ணுலகம் சென்றானோ வித்தைகள் புரிந்தானோ

கண்ணை மூடிட கண்ணுக்குள் வந்து
எண்ணங்கள் அழிந்திட எண்ணத்தில் எழுந்து
இல்லாத துன்பம் இரட்டிப்பாய் மாறிட
தள்ளாட வைத்தவனே தாமரை மணாளனே

உன்னையே எண்ணி உயிரினைப் பற்றி
உன்செய்கை செய்து உணர்ச்சிகள் பொங்க
உன்னைத் தேடியே ஊரெங்கும் செல்ல
உன்னைப் பிரிந்த உன்இராதை கண்டாரே

காட்டிலே அலைந்து கண்கள் பொங்க
வீட்டை மறந்து வினைகள் மறக்க
ஆட்டிய செருக்கை அறவே விட்டு
பாட்டிலே துதித்து பாவையர் இருந்தாரே

மாயங்கள் செய்து மயக்கம் தருபவனே
ஆயர்குல பெண்டிர்முன் அழகாய் தோன்றினாய்
உலகத்தைக் காட்டிய உத்தம புருஷனே
சுலபத்தில் காட்டி சுகத்தைத் தந்தாயே

உன்னைக் கண்டதும் உவகை பொங்கிட
அன்பனைக் கண்டதில் ஆனந்தம் கொண்டாரே
அத்தகைய நீயே அருமை கண்ணனே
உத்தமனே எந்தன் உடல்நோய் போக்குவாய்!

நாராயணப் பதிகம் 68

கோபியர்கள் பெரு மகிழ்ச்சி அடைதல்

செந்தாமரை விழியுடையவனே கிருஷ்ணா சிலையான கோபியருக்கு
மந்தகாசம் தருபவனே கிருஷ்ணா மகிழ்வை அளிப்பவனே
அமுதத்தில் நனைந்தார்களே கிருஷ்ணா அசையாது நின்றாரே
அமுதுதமாய் ஆனவனே கிருஷ்ணா அழகான கண்ணனே !

தாமரைக் கரமே கிருஷ்ணா தளிராய் எடுத்தாளே
காமத்தில் உன்னைக் கிருஷ்ணா கன்னியும் அடைந்தாளே
ஏதுமே அறியாது கிருஷ்ணா எல்லாமே மறந்து
மாதுவும் நின்றிட கிருஷ்ணா மயக்கம் தருபவனே !

மயங்கியே நின்ற கிருஷ்ணா மங்கையர் அங்கே
தயங்காது உன்னை கிருஷ்ணா தழுவியே நின்றிட
கழுத்தையும் சுற்றி கிருஷ்ணா கரமும் நிற்குமே
பழுத்த முனிவரும் கிருஷ்ணா பாரினில் தேடுவாரே !

அதரம் மதுரம் கிருஷ்ணா அதனால் ஆங்கே
இதமாய் கோபிகை கிருஷ்ணா இனிய வெற்றிலை
உன்னோடு பகிர்ந்து கிருஷ்ணா உள்ளம் மகிழ்வாளே
தன்னிலை மறந்து கிருஷ்ணா தாண்டவம் ஆடுவாளே !

வனமும் சென்று கிருஷ்ணா வாட்டத்தில் விட்டாயென்று
சினமும் கொண்டு கிருஷ்ணா சின்னவள் நிற்பாள்
கனத்த மனதோடு கிருஷ்ணா கண்ணீர் பெருக்கியே
மனமும் கலங்கி கிருஷ்ணா மங்கையும் நிற்பாள்

அங்கே யமுனை கிருஷ்ணா ஆற்றின் கரையில்
தங்கிய பெண்டிரும் கிருஷ்ணா தியானத்தில் நின்றாய்
பொங்கிய காதலில் கிருஷ்ணா பூசிய மஞ்சளில்
மங்கலம் பொங்கிட கிருஷ்ணா மாதவன்நீ அமர்ந்தாய்

சிலரோ அனைவரிடமும் கிருஷ்ணா அருளைப் பொழிவாரே
சிலரோ அண்டியவருக்கு கிருஷ்ணா மட்டுமே அருள்வாரே
அருளை வகையாய் கிருஷ்ணா அங்கே பிரித்தவனே
அருளைப் பொழிபவனே கிருஷ்ணா அன்பாய் நிறைந்தவனே!

அன்புக்கு அஞ்சியே கிருஷ்ணா அவர்களை நோக்கியே
என்னிடம் தொடர்பை கிருஷ்ணா என்றும் கொள்வாய்
மாயமாய் மறைந்ததும் கிருஷ்ணா மாதவன் விளையாட்டென
ஆயர்குல திலகனே கிருஷ்ணா ஆங்கே சொன்னாயே !

உங்களைப் போலவே கிருஷ்ணா உறவினர் இல்லையே
மங்களம் பொங்கிடும் கிருஷ்ணா மனமும் மயங்கிடும்
அழகிய யமுனை கிருஷ்ணா ஆற்றின் கரையிலே
பழகிடும் இரவுகளில் கிருஷ்ணா பாவையர் மகிழ்ந்தாரே!

குருவாயூர் தலைவனே கிருஷ்ணா கோபியர் மணாளனே
விருப்பத்துடன் அவர்களுடன் கிருஷ்ணா விளையாடி நின்றாயே
அருமையாய் அங்கே கிருஷ்ணா அருளினாயே இராசக்கிரீடை
உருவாய் வந்திங்கு கிருஷ்ணா உடல்பிணிக் காப்பாயே !

நாராயணப் பதிகம் 69

இராசக் கிரீடை - அன்பு விளையாட்டு

கொண்டையில் பீலிகள்  கொலுவிருந்த அழகென்னே
குண்டலங்கள் செவியில் கூட்டிடும் எழிலென்னே
மஞ்சள் பட்டாடையில்  மணக்கும் சந்தனமே
கொஞ்சும் மாலைகளுடன் கொண்டாடும் திருஉருவமே

அணிகலன் பூண்டு ஆடைகள் உடுத்தியே
மணிகுண்டலம் அசைய மங்கையர் சூழ்ந்திடவே
இரண்டு இரண்டாய் இளங்கோபியர் நின்றிடவே
திரண்ட மார்புடன் திருமால்நீ ஆடினாயே !

யமுனை நதிக்கரையில் யாதவன் நீஆடிட
அமுதினைப் பெற்றதாய் ஆயரும் கொண்டாடிட
நாரதர் சொல்லியே  நற்தேவரும் ஆங்கே
நேரத்தில் வந்தாரே நர்த்தனம் செய்தாரே !

இனிமையாய் குழலும் இதமாய் ஒலித்ததே
அணிந்த வளையலும் அசைவில் கலகலத்ததே
தாளத்தில் கால்கள் தாண்டவம் செய்ததே
இராசத்தில் உலகமே இரம்மியம் ஆனதே !

பாட்டும் பரதமும் பாரினில் இணைந்ததே
நாட்டியம் ஆடியே நங்கையரும்  உயந்தாரே
அபிநயம் பிடித்திட அசைந்தன மாலைகளே
புவியினில் தேவரும் பூமாரி பொழிந்தாரே!

அவிழும் கூந்தலும், அழகான தோள்களும்
புவிமணக்கும் சந்தனமும்,  புல்லாங்குழல் இசையும்
கொடியிடை வியர்த்து கோபியர் சோர்ந்திட
மடியினில் சாய்ந்து மயங்கியே விழுவாரே

கண்ணனை அடைந்திட கன்னமும் பதித்தாளே
புண்ணியம் செய்ததில் பெருமையும் கொண்டாளே
உன்னை அடைந்ததால் உண்டான பெருமையில்
தன்னையே மறந்து தாளத்துடன் ஆடினாரே

பாடல் முடிந்தாலும் பாவையர் ஆங்கே
ஆடலைத் தொடர்ந்திட, அண்டமும் அதிர்ந்ததே
உடலும் உடையும் உணர்வும் மறந்திட
இடமறியாது கோபியர் இனிதே இருந்தாரே!

உலகம் யாவும் உன்னோடு இராசமாடிட
மலர்களாய் கவர்ந்து மங்கையரும் நின்றிட
காதலுடன் கொண்டாடி கண்ணன் நீமகிழ
ஆதலால் மன்மதவிழாவும் ஆங்கே நடந்ததே

ஈசனின் தழுவலில் இன்பமும் பொங்கிட
பாசத்தின் பிணைப்பில் பாவையர் மயங்கிட
வீசிடும் தென்றலில் விளையாடும் வசந்தமே
மாசில்லா அழகே மன்மத உருவே!

புரியாத புதிராய் புவியில் விளையாடுபவனே
அறிந்த யோகியும் அடைய முடியாதவனே
பாவிகளைக் காப்பவனே பாரினை ஆள்பவனே
கோபியர் அறிந்திட்ட கேசவனே! ஈசனே!

தசகம் 70
சுதர்சனன் சாப மோட்சம் சங்கசூட வதம் அரிஷ்ட வதம்

தங்கள் வயமிழந்த தருணத்தில் பெண்கள்
பொங்கிடும் இன்பத்தில் பூவுலகம் தன்னில்
அம்பிகை வனத்து ஆலயத்துள் செல்ல
வம்பாய் நந்தனை பாம்பு வகையாய் விழுங்கியதே

கொள்ளிக் கட்டை கோடாரி என்றே
அள்ளி அவர்கள் அடித்தாலும் விடாது
எள்ளி நகையாடி எழுந்தருளும் உன்திருவடியே
தெள்ளத் தெளிவாய் பதிக்க நடந்ததே

வித்தியாதரன் நானே விந்தைகள் புரிபவனே
அத்தியாவச நேரத்தில் அருளைப் பொழிந்து
சுதர்சன சக்கரம் சூடிய நாயகனே
சுதர்சனன் சாபத்தை சுலபத்தில் போக்கியவனே

மலைப்பாம்பு வடிவம் மறைந்திட செய்தாய்
நிலையாய் தருமத்தை நிலைத்திட செய்தாய்
சங்கசூடன் பெண்களை சாகசமாய் கவர்ந்திட
மங்காது நீயவனை மடியச் செய்தாய்

காட்டிலே திரிந்து கபடநாடகம் புரிந்தாய்
வீட்டிலே பெண்டிரை விளையாட்டாய் கவர்ந்தாய்
அமுதத்தை சுவைக்க அளவின்றி தந்தாய்
அமுதமாய் குழலோசை அசைந்தாடி தந்தாய்

கம்சனின் வேலையாள் கர்வமான அரிஷ்டன்
அம்சமின்றி காளையாய் அச்சமூட்ட வந்தான்
கொடிய வழியில் கொடூரமாக கர்ஜித்தான்
வடிவழகன் உன்முன்னால் வாடிவிட வந்தான்

பெரிய வடிவம் பூண்டு துணிவை
உரியதாக்கி அவனே உன்முன் வந்திட
வேதங்கள் இருப்பிடமான வித்தக ரங்கனே
சீதள சரணங்கள் சிங்காரம் கொண்டவனே

கொடிய உருவத்தில் கொம்பினைக் கொண்டு
நொடிப் பொழுதில் நேரே வந்தான்
மடிய வைத்து மாவெற்றி கொண்டவனே
அடிமலர் பணிந்து ஆனந்தம் கொள்வோமே

உன்னால் அழிந்து உலகை நீத்தானே
உன்பெருமை அறிந்து உரியவர் துதித்தாரே
இந்திரன் மகிழ்ந்திட இவ்வுலகம் மகிழ்ந்திட
விந்தைகள் செய்பவனே வியத்தகு மன்னனே

காளையின் கொட்டத்தை கண்டவுடன் அடக்கி
வேளையில் பெருமையை வெற்றியுடன் தந்தவனே
சோலையில் நாயகனே சோபித்த அழகனே
வேலையென என்நோயை விட்டுவிடச் செய்வாய்

தசகம் 71
கேசி வதமும் வியோம வதமும்

முயற்சியில் வீண்போகா முக்கிய அசுரன்
அயராது குதிரையாய் அடங்காது இருந்தான்
உன்னை அடைய ஒருவழி அதுவென
எண்ணி அவன் எகத்தாளம் செய்தான்

அச்சத்தை உண்டாக்கி அனுதினம் நச்சரித்து
இச்சகத்தை அழிக்க இறுமாப்பு கொண்டான்
உன்னைக் காணும்வரையில் உவகை கொண்டான்
மண்ணை அழிக்க மார்தட்டி நின்றான்

காலால் உதைத்த கதையைக் கேட்டான்
காலால் உதைக்க கர்வமும் கொண்டான்
கருடன் மேலிருந்த கண்ணன் உன்மார்பில்
இறுமாப்புடன் உதைத்து ஏறியே நின்றான்

குதிரை கால்களின் குளம்பை தூக்கினாய்
உதிராது இருகரத்தால் உயரே வீசினாய்
எங்கோ மயங்கி எளிதில் விழுந்தான்
பொங்கும் சினத்தில் போராட வந்தான்

தண்டிக்க உறுதிகொண்டு தண்டம் எடுத்தாய்
தண்டமுடன் கரம்பட்டு தரையில் விழுந்தான்
அண்டமும் ஆகாயமும் அதிரவே உன்னால்
மண்டல மோட்சத்தை மண்ணிலே பெற்றான்

ஆட்டைக் கொன்று அவர்கள் பலியிட
ஊட்டமான கேசியை ஒருநொடியில் கொன்றவனே
கேசியைக் கொன்ற கேசவ மன்னனே
வீசிடும் காற்றில் வேணுவின் நாதனே

வசுதேவன் மகன்நீயென வாயார நாரதன்
அசுரகம்சனுக்கு எடுத்து அழகாய் சொல்ல
கொல்லவும் துடித்தவன் கொடூரம் குறைத்து
உல்லாசமாய் ஓடிவந்து உன்னை நாரதர்துதித்தார்

இன்னுமொரு அசுரன் இன்னல்கள் தந்தான்
துன்புறுத்திய அவன் துயரங்கள் போக்க
இடையர்கள் உடனிருக்கும் இனியபொழுதில் வந்தான்
அடைய முடியாத ஆனந்த ரூபனே

இடையரைக் கவர்ந்து எங்கோ ஒளிக்க
உடையவரைக் காணாது உலகம் தவிக்க
அசுரன் வியோமனை ஆங்கே அழித்தாய்
பசுக்களின் நண்பனே பாலகனே கண்ணனே

ஆனந்த ரூபனே ஆருயிர் கண்ணனே
கானகத்து பாலனே கார்முகில் வண்ணனே
விளையாட்டு பலசெய்து வித்தைகள் பலசெய்து
உளையும் என்நோயை உடனே தீர்ப்பாய்.

தசகம் 72
அக்ரூரனின் வருகை

பள்ளி கொண்ட பரந்தாம அரசனே
அள்ளி கருணை அருளி நிற்பவனே
நாரதன் உரைமூலம் நீயிருப்பதை அறிந்தான்
பாரத தேசத்தில் தூதனை அனுப்பினான்

அக்ரூரன் உன்னைக் ஆர்வத்துடன் காண
பக்தியுடன் கிளம்பி பரவசமாய் வந்தான்
அச்சத்தில் இதுகாறும் அடங்கி இருந்தவன்
மெச்சியுன் புகழ்பாட மெத்தனமுடன் வந்தான்

நல்வினை செய்ததால் நாடியே வந்தான்
உள்ளத்தில் மகிழ்ந்து உற்சாகமாய் வந்தான்
இடையனைக் காண இருப்பிடம் நோக்கி
இடையூறு இல்லாது இருக்க வேண்டினான்

வேதங்கள் பாடிய வித்தகன் அன்பன்
சீதளசரணம் தொடுவேனோ சிந்தை குளிர
தழுவி மகிழ்வேனோ தாளடி பணிவேனோ
முழுதான முதற்பொருளை முன்னின்று காண்பேனோ

கண்கள் தாமரையாக காட்சி தருபவனே
உண்மை மூர்த்தியாய் உலகை ஆள்பவனே
உன்னைக் காணவே உலகில் பிருந்தாவனத்தை
இன்பமாய் அக்ரூரன் இடரின்றி அடைந்தானே

விளையாடிய இடங்கள் வியத்தகு புழுதிகள்
களைப்பின்றி புரண்டு களிப்பும் அடைந்தான்
பக்தியில் மூழ்கி பரவசம் கொண்டான்
முக்தி பெற்றதுபோல் மயக்கம் கொண்டான்

வீடுகள் பலவுண்டு வெள்ளமாய் இசையுண்டு
ஆடுமாடு மேய்க்கும் அழகன் குணங்களை
இன்பமாய் பாடும் இல்லங்கள் கடந்தான்
உன்னைக் காணவே உன்வீடு வந்தான்

அப்போது பலராமனுடன் அக்ரூரன் கண்டான்
தப்பாத தாளமாய் தரணியின் காவலனை
மாடு கறப்பதை மனமகிழ காண்பதை
ஆடும் கடலை ஆனந்த ஜோதியைக் கண்டான்

நீலப் பட்டாடை நின்திருமேனி தவழ
கோல ஒளியில் கோவிந்தன் மிளிர
மஞ்சள் பட்டாடையில் மணிகள் மின்னிட
கொஞ்சும் அழகில் கோகுலத்தில் கண்டான்

தேரில் இறங்கி தேடிய பக்தனை
வாரி அணைக்க வாசலில் நின்றாய்
நலங்கள் விசாரித்து நல்வார்த்தை பேசி
குலங்கள் சிறக்க குசலம் கேட்டாய்

அக்ரூரன் நற்குணம் அறிந்து உடனே
பக்கத்தில் அமர்த்தி பாந்தமாய் இருந்தாய்
அரசன் கட்டளை அறிந்து கொண்டாய்
கரங்கள் தழுவ கட்டி யணைத்தாய்

தேடிய கோபியர் தேவன் உன்னை
பாடியே எங்கும் பரவசம் கொண்டார்
சந்திரன் வீட்டிலோ சந்திரபகையின் வீட்டிலோ
தந்திரமாய் இராதையிடமோ தங்கும் கண்ணனே காப்பாய்!

தசகம் 73
கண்ணனின் மதுரா பயணம்

அரசனின் கட்டளையை ஆயருக்கு சொன்னாய்
கரங்களை கூப்பியே கண்ணீர் விட்டனர்
கண்ணன் எப்படி கண்மறைய முடியும்
மண்ணிலே சாத்தியமோ மன்னனே சாத்தியமோ

ஒன்றுமே புரியாது உள்ளம் அழுதிட
கன்றுபசு மேய்ப்பவர் கவலை கொண்டு
தலைவிதியை நொந்தபடி தலைவணங்கி நின்றார்
விலையில்லா அன்பை வித்திட்டு கொண்டார்

தந்தையும் தோழரும் தன்னுடன் வந்திட
அந்திப் பொழுதில் அர்த்த சியாமத்தில்
பாகுபாடின்றி கோபியர் பரிதவிக்க நீயும்
கோகுலம் விட்டு குறையின்றி சென்றாய்

மீண்டும் வருவேன் மோட்சம் தருவேன்
வேண்டிய வரத்தை வெற்றியாய் தருவேன்
இன்பம் அளிக்க இனிதே வருவேன்
துன்பம் துடைக்க துணிவுடன் வருவேன்

வருத்தமுடன் கோபியர் வண்டியைத் தொடர
உருவத்தைக் காணாது உள்ளமும் வாட
ஏக்கமாய் இருப்பவரை எழிலாய் கண்டாய்
ஊக்கம் கொடுத்து உடனே சென்றாய்

உன்னைத் தொடர்ந்து ஓடிவந்தனர் உன்னோடு
பின்தொடர வேண்டி பிரியாது வந்தனர்
வாடிய மரங்களும் வருந்திய விலங்குகளும்
தேடிய விழிகளும் திரும்பி வந்தன

கடமையைச் செய்ய கண்மூடி அக்ரூரன்மூழ்க
உடமை நீயென உன்னுருவம் கண்டான்
நீரிலே நீயிருக்க நிறைந்த பெருமை
தேரிலே நியிருக்க திகழ்ந்த பெருமை

மனமகிழ்ந்து துதித்து மறுபடி மூழ்கினான்
குணவான் உன்னை குதூகலமாய் கண்டான்
சங்குசக்கரம் கதாயுதம் சார்ந்த தாமரை
பொங்கும் கோலத்தில் புதுவுருவம் கண்டான்

பேரின்பக் கடலில் பெரிதும் மூழ்கி
வேரினைப் பற்றி வேண்டி நின்றான்
மறுபடி மூழ்க மறைந்ததே உன்னுருவம்
உருவத்தைக் காட்டிய உன்னத புருஷனே

உடல் ரோமம் உயிர்த்தெழ நின்றான்
உடனிருக்கும் உன்னுருவம் கண்டான்
கண்ணனே நீவிளையாடி கண்சிமிட்டி நின்றாய்
தண்ணெனக் குளிர்கிறதோ தலைவனாய் கேட்டாய்

தசகம் 74
கண்ணன் மதுராவுக்குள் புகுதல்

நடுப்பகல் வேளையில் நடுவிலே மதுராவில்
நெடுநாள் சிநேகிதர்முன் நீதோன்றி நின்றாய்
பெண்களும் ஆண்களும் பெரியவீதிகளில் கண்டனர்
முன்பயன் காரணமாய் முன்னால் வந்தனர்

உன்னைக் காணவந்த உன்னத பெண்கள்
கண்ணைப் பறிக்கும் கவர்ச்சி கொண்டனர்
உன்திருமேனி மார்பாக உன்கண்கள் வேட்கையாக
உன்மார்பு ஆரம் உளமார அசைய அழகேஅழகு

கடைக்கண் பார்வை கண்டதும் மயங்கி
இடையனைக் கண்டு இன்புற்று நிற்க
வண்ணான் ஒருவனை வம்புக்கு இழுத்து
விண்ணிலே மோட்சம்பெற வேண்டியவை செய்தாய்

துணியை நெய்பவன் தூய்மை உணர்ந்து
அணிய நல்லாடை அளித்து நிற்க
மணிமாட மாலனே மாலைகள் அலங்கரிக்க
பணிந்தவருக் கருளி பரவசம் பெற்றனர்

கூனியிருந்த உடலுடன் குனிந்த நங்கை
கூனியாய் சந்தனம் குளிரப் பூசிவிட
மேனியில் அழகை மெருகூட்டி நீயும்
பேணிட அருளி பெரியவன் நீகாத்தாய்

பெருமையை உணர்ந்து பேரின்பம் பெற்றிட
அருமை மக்கள் அங்கே வந்தனர்
சக்திக்கு ஏற்ப வெற்றிலை பூ தந்து
பக்தியைக் காட்டி பரவசம் அடைந்தனர்

சந்தனம்பூசி கூனியை சமாதான செய்து
வந்தனம் செய்த வரிசை தாண்டி
அன்னை தேவகியை ஆவலுடன் காண
மன்னன் நீயும் மாளிகையில்  நுழைந்தாய்

வில்வைத்த சாலையில் கால்வைத்து சென்றாய்
வில்லெடுத்து நாண்ஏற்றி வீரமாய் நடந்தாய்
சொல்லாமல் அம்பினை சுறுசுறுப்பாய் தொடுத்து
செல்லும் வழியை செவ்வனே செய்தாய்

வில்முறிந்து சத்தம் வீரியமாய் கேட்டிட
வில்உடைத்த துண்டங்கள் வினயமாய் நடுங்கிட
கம்சன்அழிவு அங்கே கணத்தில் நடக்குமென
கம்சனும் அறிந்து கனநடுக்கம் கொண்டான்

அன்பினால் நல்லவர்கள் ஆங்கே கூடிட
இன்பங்கள் பெற்றிட இனிமை தவழ்ந்திட
அன்புக்குரிய இராதை ஆங்கே இல்லாத
இன்னலை உரைத்த இனியவனே காப்பாய்!

தசகம் 75
கம்ச வதம்

மறுநாள் காலை மற்போர் துவங்க
இருக்கையில் அமர்ந்த ஏவலர் பலருடன்
கம்சன் உன்னைக் காண அஞ்சியிருக்க
அம்சத்துடன் நடந்து அழகாய் வந்தாய்

பெருத்த யானை பேருருவில் குவலயாபீடம்
தடுத்த யானை தடுமாறி நிற்க
சிரித்த முகத்துடன் சிங்காரக் கண்ணன்
அடித்து வெளியில் அழகாய் வந்தாய்

துதிக்கையில் அகப்படாது குதித்து எழுந்து
அதிரடியாய் யானையின் அழகான தந்தத்தை
எதிர்த்து பிடுங்கி எடுத்து எறிந்தாய்
உதிர்ந்த முத்துக்களை உன்இராதைக்குத் தந்தாய்

போர்க்களம் புகுந்து போரிட துணிந்தாய்
ஊர்மக்கள் முன்னால் உற்சாகமாய் நின்றாய்
நந்தகோபன் யசோதை நற்கோபியர் பேற்றினை
இந்த உலகில் இங்கே யாம் பெற்றோமென்றனர்

எங்கும் நிறைந்து எதிரில் வந்தாய்
பொங்கும் பேரின்ப பொலிவாய் நின்றாய்
எல்லைகள் கடந்து எழிலாய் நின்றாய்
இல்லாத உருவாய் இடையனாய் வந்தாய்

மல்வித்தை புரிந்தாய் மல்லரை அழித்தாய்
மல்வீரன் சாணூரன் மண்ணிலே விழுந்தான்
முட்டிப் போர் புரிந்து முறித்தாய்
முட்டிகன் பலராமனுடன் முந்தியே போரிட்டான்

மென்மேனி சிறுவர்கள் மேல்நின்று தாக்க
பொன்மேனி அழகில் போர்க்களம் மின்னியது
சுழற்றிய கையில் சுருண்டான் சாணூரன்
இழந்த தோல்வியில் இறந்தான் அசுரன்

உடனே கம்சன் உற்சாக கூக்குரலிட
மடமடவென பேரிகை மண்ணிலே நிறுத்த
இனத்தைக் கொல்ல இங்ஙனமே ஆணையிட
மனதை அறிந்து மாமன்மேல் பாய்ந்தாய்

முட்டுகள் நொறுங்க முந்தியே தள்ளினாய்
விட்டுவிடாத பந்தத்தில் வீரியமாய் தாக்கினாய்
பட்டும் படாது பரந்த மேனியில்
கட்டுண்ட நிலையில் கம்சன் ஒன்றினான்

கம்சனை அழித்து கருத்தினைக் கவர்ந்தாய்
வம்சத்து தம்பிகள் வரிசையாய் கொன்றாய்
அம்மாவை அப்பாவை அன்புடன் வணங்கினாய்
இம்மாத்திரம் உத்தவனை இறுகத் தழுவினாய்

தசகம் 76

உத்தவர் தூது

பலராமன் தன்னோடு பலங்களை சேர்த்தாய்
உலகின் கலைகளை உடனே கற்றாய்
இறந்த புதல்வனை இனிதே மீட்டாய்
பரந்த பூமியில் பாஞ்சஜன்யம் முழங்கினாய்

அன்பின் மிகுதியில் அனுதினம் உன்னையே
எண்ணி வாழ்ந்த எழிலான கோபியரை
மண்ணில் காட்டிட மனம்கவர் உத்தமனை
கண்ணும் கருத்துமாய் கோகுலம் அனுப்பினாய்

மாலையில் வந்தவன் மகத்துவம் சொல்லி
சோலையில் புகழ்பாடி சொந்தங்கள் கண்டான்
காலையில் தாமரைபோல் கண்விழித்த கோபியர்
வேலைகளை விட்டுவிட்டு உத்தவனைக் கண்டார்கள்

உன்னைப் போலவே உடையணிந்த உத்தவனை
கண்டதும் பேசமுடியாது கன்னியர் நின்றனர்
தான்என்ற அகந்தை தவிர்த்து நின்றனர்
யான் அயல் எல்லாம் மறந்தனர்

உன்னை யாருக்காக உலகில் அனுப்பினான்
என்னைக் மறந்த இரக்கமில்லா கண்ணனே
அவன் தழுவலை அவனியில் யார்மறப்பார்
கவனமாய் சொல்லிடு காத்தருள வேண்டுமே

கட்டவிழ்ந்த தலைமயிருடன் கண்கவர் மேனியுடன்
கட்டியணைத்த கண்ணனே கலக்கத்தை அழிக்க
மட்டில்லா இன்பம்தர மங்கையரை மகிழ்விக்க
விட்டுப்போன அன்பனே மீண்டும் வருவாயே

உன்னைப் பற்றி உரைத்த உத்தவன்
உண்மையறிவு பலசொல்லி உன்மயமான கோபியரை
இயல்புக்கு வரச்செய்து இவ்வுலகை காத்தான்
அயராது உன்புகழை அனுதினம் சொன்னான்

எப்பொழுதும் வீட்டுவேலை எல்லா இடங்களிலும்
தப்பாது உன்னையே தொடர்ந்து எண்ணி
நனவிலும் கனவிலும் நாள்தோறும் உன்னையே
மனதால் நினைக்கும்  மகிமை கண்டான்

அன்புக்கு உரியவள் அழகான இராதை
இன்பத்தை அளிப்பவள் இதமான இராதை
அன்பன் தனிமையில் அழகாய் உரைப்பான்
என்னிடம் உன்புகழ் என்றும் உரைப்பான்

விரைவில் வருவான்  வேண்டாம் வருத்தம்
இறைவன் அவனே இங்கே வருவான்
பிரிவும் சேர்க்கையும் பின்னி ஒன்றாக
அறிவும் மோட்சமும் அன்பினில் பெருகுமே

இத்தகைய பக்தியை இவ்வுலகில் கண்டதில்லை
உத்தவன் மகிழ்ந்து உளமார வணங்கினான்
சாத்திரம் தவத்தில்  சாத்தியம் ஆகுமோ
தோத்திரம் பகவானே நோயினைப் போக்குவாய்

தசகம் 77

**உபச்லோக பிறப்பும் ஜராஸந்த யுத்தமும்**

நீண்டநாளாய் உனக்காக நித்தம் காத்திருந்தாள்
வேண்டியபடி வருவாயென்று வீட்டை அலங்கரித்தாள்
கூடும்சுகம் வேண்டுமென்று குதூகலம் கொண்டாள்
வீடும்மனமும் அழகுற வீற்று இருந்தாள்

உன்னை அடையவே உத்தமி காத்தாள்
தன்னை அலங்கரித்து தாளடி பணிந்தாள்
தனிமை சுகமே தனக்கு வேண்டினாள்
இனிதே ஸைரந்த்ரி இல்லத்தில் இருந்தாள்

இரவில் புணரும் இன்பத்தை வேண்டிட
உறவின்றி உன்னைப் புணர வேண்டவில்லை
அறிஞராய் உன்னை அறிந்திட மறந்தாள்
செறிவான மோட்சம் செவிகேட்க மறந்தாள்

உன்மகன் வேண்டி உத்தமி கேட்க
கண்மயக்கி நீயும் களிப்புடன் தந்தாய்
உபச்லோகன் மகனாக உலகில் பிறந்தான்
உபதேசம் பலபெற்று உத்தமனாய் வளர்ந்தான்

உத்தவன் பலராமன் உடன்வர நீயும்
பத்திரமாய் அக்ரூரர் பார்க்க சென்றாய்
பாண்டவர் திரும்பிய கதையு மறிந்தாய்
ஆண்ட திருதராஷ்டிரன் அகத்தை அறிந்தாய்

மருமகன் கம்சன் மாண்டதை அறிந்து
குருடனாய் அறிவிழந்து கோபித்த ஜராசந்தனை
இருபத்து மூன்றுபடை இவ்வுலகில் அழித்தாய்
அருளும் மனத்துடன் அசுரர்படை ஒழித்தாய்

கட்டிய ஜராசந்தனை கணநேரத்தில் விடுவித்தாய்
விட்டுவிட்டு படைகளை விளையாட்டாய் அழித்தாய்
இன்னும் இன்னும் என்றவன் படையுடன் வர
நின்று ஆணவத்தை நிஜமாய் அழித்தாய்

பதினாறு முறை படையெடுத்து வந்தான்
அதிசய முறையில் அக்ஷௌஹிணி படைகளை
எண்ணமுடியாத படைகளை எளிதில் கொன்றாய்
விண்ணதிர போர்புரிந்து விளையாட்டு செய்தாய்

பதினெட்டாம் முறை படையெடுத்து வந்திட
மதியில் கண்ட மகத்துவ யோகத்தில்
விசுவகர்மா கொண்டு விசித்திர நகரம் செய்தாய்
விசுவாச மக்களை விடுவித்து காத்தாய்

அஞ்சியவன் போலவே ஆங்கே நீ ஓடினாய்
மிஞ்சிய மலையில் மிலேச்சனை தொடரச் செய்தாய்
சாபங்கள் வரங்கள் சாத்தியமாக்க செய்தாய்
ஆபத்தில் திருமேனியை அழகுடன் காட்டினாய்

அரசன் அவனுக்கு மோட்சம் அளித்தாய்
குறையின்றி தவமிருக்க குலங்கள் காத்தாய்
பக்தியில் மிஞ்சுவதே முக்தி என்றாய்
சக்தியை அளிக்க சாகசம் செய்தாய்

படைகளை ஜராஸந்தன் பயமுறுத்த திரட்டினான்
உடைவாள் மறைத்தது ஒளிவதுபோல் ஓடினாய்
கடலுக்குள் ஒளிந்த கடிதுவாரகை அடைந்தாய் என்
உடலின் நோயை உடனே போக்குவாய்

தசகம் 78

கண்ணன் துவாரகையில் வாழ்தலும் உருக்மணி செய்தியறிதலும்

புதிய நகரம் பூத்து ஒளியுற
அதில் உன்னால் அழகு மிஞ்ச
இந்திரன் கொடுத்த இதமான செல்வங்கள்
சந்திர ஒளியாய் சாகரத்தில் மின்னுமே

இரேவதன் மகளை  இரம்மியமாய் மணக்க
இரேவதியுடன் பலராமன் இனிதே இணைய
யாதவ திருமணம் யாவரும் மகிழ
மாதவா நீநடத்திய மங்கள திருமணமே

உன்னை விரும்பியே உருக்குமணி உருகிட
தன்னை மறந்து தாபத்தில் இருக்க
நண்பன் சிசுபாலனுக்கு நங்கையை மணமுடிக்க
அண்ணன் உருக்குமிதன் ஆவன செய்வானே

அன்பு கொண்ட அந்த கன்னிகை
மன்மதன் கேட்டினை மனதார சொல்ல
அந்தணன் ஒருவனை அன்று அனுப்பினாளே
சுந்தரன் உன்னை சூடிட விரும்பினாளே

தீயவர் பலர் தீயஎண்ணம் கொள்ள
தூயவன் உன்னை தூரத்தில் வைக்க
அடைய முடியாத அந்த நகரத்தில்
உடையவனைக் காண ஓடியே  வந்தானே

குண்டினபுரத்து உருக்குமணி குறையில்லா உத்தமி
மண்டியிட்டு அனுப்பினாள் மனதைத் திறந்தாள்
மன்னவன் உன்மீது மனதார காதல்
உன்னிடம் கொண்டதை உரைக்க சொன்னாள்

உன்னைப் பற்றி ஊரார் சொல்ல
என்னைக் கவர்ந்த எழிலான ரூபனே
என்னைக் கைப்பற்ற ஏவிடுவான் சிசுபாலன்
என்னைக் காக்க இரங்கிடுவாய் நாயகனே

என்சொல் நீகேளாது இருந்தால் அவள்
தன்னை மாய்த்து தன்உயிர் விடுவாள்
அந்தணன் உரைத்திட அச்சம் கொள்வாய்
மந்தகாச புன்னகை மன்னவன் தந்தாய்

இன்பத் துயர் எனக்கும் உண்டு
அன்பினைக் காட்ட அவ்விடம் வருவேன்
கண்ணெதிரில் காதலி கைப்பிடிக்க வருவேன்
மண்ணில் இதுசத்தியம் மங்கையிடம் சொல்வாய்

அப்பொழுதே விரைவாக அந்தணருடன் சென்றாய்
தப்பாது தேரிலேறி தலைவனாய் வந்தாய்
குண்டினபுரம் வந்திட குறையின்றி மனம்கொண்டாய்
மண்டியிட்டு கேட்கிறேன் மனதார அருள்வாய்

## தசகம் 79
## உருக்குமணியைக் கவர்தல்

படைகள் பின்சூழ பலராமன் உடன்வர
அடைந்தாய் குண்டினபுரம் அந்தணன் தன்னோடு
உன்னை வரவேற்று உபசாரம் செய்ய
மன்னன் பீஷ்மன் மாளிகை வந்தார்

உன்னழகு பொங்கும் உடலைக் கண்டு
அன்று மக்கள் ஆனந்தம் கொண்டனர்
அரசன் மகன் அகங்காரம் நினைத்து
திரளாய் அழுது தீர்த்தனர் இரவை

சந்திரன் போலவே சாகசமாய் மின்னும்
மந்தகாச முகத்துடன் ருக்மணி நடந்தாள்
உன்னிடம் தன் உயிரைத் தந்து
மின்னும் அழகுடன் மிதமாய் நடந்தாள்

குலப் பெண்கள் குழுமியே வந்திட
குலக்கோவில் பார்வதியை கும்பிட வந்தாள்
திருவடி மலரில் திடமாய் விழுந்து
அருளை வேண்டி அவளும் வணங்கினாள்

அரசரின் கூட்டம் அவளைக் காணவே
பரபரப்புடன் கூடியே பார்வதி கோவில்வந்திட
ஒளியின் மிகுதியில் ஒய்யாரமாய் திசைகளை
வெளிச்சப் படுத்தி வீரமாய் நடந்தாள்

தேவாதி தேவனே திருமால் அவதாரமே
பாவாய் ருக்மணி பதவிசாய் நடக்க
வாலிபத்து அழகில் வசீகரம் கொண்டாள்
ஆலிங்கன அழகன் உன்னையும் மயக்கினாள்

அழகான சுந்தரியே எங்கே செல்கிறாய்
அழகன் என்னுடன் ஆவலாய் வருவாயென்றாய்
அன்போடு சென்று அருகிலே கைப்பிடித்தாய்
தன்பால் தேரிலே தானாக ஏற்றினாய்

எல்லோரும் சத்தமிட எழுந்தது போரங்கே
இல்லாத மகிமை இழிந்த அரசரை
ஆற்றல் கொண்ட ஆனந்த படை
மாற்றமின்றி வென்று மாரும் தட்டியது

போருக்கு வந்த பொல்லாத தமையனை
செருக்கை அழிக்க சோர்வின்றி கட்டினாய்
பலராமன் சொற்படி பாவமென்று விட்டாய்
இலக்குமி  அவதார இனியவளுடன் சென்றாய்

உன்னுடன் சேர்ந்திட உவகை கொண்டாள்
அன்பில் ருக்மணி ஆனந்தம் கொண்டாள்
காதல் பொங்கிட கண்ணனை அடைந்தாள்
மாதவன் உன்னுடன் மகிழக் கலந்தாள்

அல்லும் பகலும் ஆனந்தம் தந்தாய்
சொல்ல முடியா சௌக்கியம் தந்தாய்
நடுக்கம் தரும்படி கொடிய சொல்லும்
அடுக்காது சொல்லி அவளை வருத்தினாய்

பின்னர் உன்திறமையால் பாராட்டு தந்தாய்
உன்வரலாறு படிக்கும் எங்கள் பிணியை
களைப்பைத் தந்திடும் கடிநோயின் தன்மையை
களைந்து எடுப்பாய் காருண்ய செல்வனே

தசகம் 80

சியமந்தகமணி கிளைக்கதை

மணியான சியமந்தகம் மன்னவன் நீகேட்க
அணியாய் ஸத்ராஜித்து அதனைக் கொண்டான்
உன்னை விரும்பிய உத்தமி சத்திய பாமாவை
தன்னோடு சேர்க்கவே தந்திரம் செய்தாயோ

சிற்றறிவு கொண்டவன் சிறந்த மணியை
வெற்றியை கழுத்தில் விளையாட்டாய் அணிந்தான்
மணியின் ஒளியில் மாமிசம் என்றே
நினைத்து சிங்கம் கொன்று அழிந்தது

மணியைத் தேடியே மக்கள் பழிசொல்லுடன்
தனியனாய் சென்று கானகம் அடைந்தாய்
சிங்கத்தையும் பிரசேனனையும் ஜாம்பவான் தன்னையும்
அங்கே கண்டு ஆவன செய்தாய்

வயதில் முதிர்ந்தாலும் வசீகரம் புரியாது
அயலான் எனநினைத்து அண்ணல் உன்னோடு
இருபத்தி எட்டுநாட்கள் இறுமாப்புடன் மற்போரிட
உருவத்தை அறியாது உள்ளுக்குள் உன்னையே வேண்டினான்

இன்னான் என்று இனிதே அறிந்தான்
மன்னன் உனக்கு மனதார அளித்தான்
பெண்ணுடன் மணியை பேணிக் கொடுத்தான்
மண்ணில் உன்னை மகிழ்வுடன் பணிந்தான்

சத்திய பாமாவின் சத்திரஜித்து தந்தை
சத்தியம் உணர்ந்து சத்திய பாமாவை
உத்தமன் உனக்கு உருவாக்கி தந்திட
பித்தன் உன்னை பிறரும் அறிவாரோ

குந்தியின் மக்கள் குருநாட்டில் எரிந்தாரோ
அந்தகன் போலச்செய்தி ஆங்கே சென்றாய்
சததன்வா கோபித்து சத்ராஜித்தை கொல்ல
அதனால் திரும்ப ஆங்கே போர்மூண்டது

மனைவியின் துயரை மன்னவன் போக்க
துணைபோய் சததன்வாவை தொலையச் செய்தாய்
கதாயுதம் பலராமன் கற்றுத்தர சென்றான்
அதாவது மகாபாரதம் ஆங்கே ஆரம்பிக்குமே

அக்ரூரன் மனங்குளிர அந்தமணி தந்தாய்
பக்தியில் அக்ரூரன் பகவானே இருந்தான்
செல்வங்கள் பலதரும் செழிப்பான இனியவனே
இல்லையென்ற சொல்லே இல்லாது இருப்பவனே

உன்னிடம் பக்தியை உளமாரக் கொண்டாலும்
தன்மேல் கர்வம் தானாக வந்திட
செருக்கை அழிக்க சிந்தை கொண்டாய்
கருத்தைக் கவர்ந்து காத்து நிற்பாய்

நல்லவனாய் இருந்தாலும் நல்லது அல்லாது
சொல்லாமல் செய்த செல்வன் அக்ரூரனை
உண்மை சொல்ல உள்ளம் கொண்டாய்
கண்மயக்கும் பாமாவின் காதலனே காப்பாய்

தசகம் 81
காளிந்தீ மணத்தல் கற்பக மரம் கவர்தல்

சத்திய பாமாவுடன் செளக்யமாய் இருந்தாய்
தித்திக்கும் இன்பத்தில் திளைத்து இருந்தாய்
திருமணம் செய்யும்  திரௌபதி கண்டிட
விருப்பத்துடன் அஸ்தினாபுரம் வீற்று இருந்தாய்

உன்தங்கை சுபத்திரை உள்ளம் கவர்ந்திட
அன்பான அர்ச்சுனன் போலித்துறவியாய் வந்தான்
அவளை கேட்ட அந்த துரியோதனனுக்கு
அவளைத் தராதிருக்க ஆவன செய்தாய்

இந்திர பிரஸ்தத்தில் இனிதாய் இருந்தாய்
தந்திரம் பலசெய்து காளிந்தீ பெற்றாய்
அவந்தி நாட்டு மித்திர விந்தையை
அவனியில் காக்க அங்கே விரைந்தாய்

அத்தைமகள் பத்திரை அரசன்மகள் சத்தியை
உத்தமன் நீமணக்க உலகம் மகிழ்ந்ததே
எழுருவம் எடுத்தாய் ஏழுகாளை பூட்டினாய்
வீழும்மாயையில் வித்தைகள் காட்டினாய்

மத்திர மன்னன் மீன்கட்டி இலக்கினை
பத்திரமாய் நீரில் பார்வைக்கு வைக்க
தந்திர திறமை தன்னைக் காட்டி
அந்த இலக்கை அறுத்து மணந்தாய்

எட்டு மனைவிகள் எழிலாய் பெற்றாய்
விட்டு விடாத மாயையில் விளையாட்டு செய்தாய்
சத்திய பாமாவின் சாகச தேரில்
அசத்திய நரகனை அழிக்க சென்றாய்

முரனை அழிக்க முன்வந்து போரிட்டாய்
நரகனை அழிக்க நன்றாக சண்டையிட்டாய்
சக்கரா யுதம்கொண்டு சண்டைகள் புரிந்தாய்
அக்கிரங்கள் அழிந்திட ஆங்கே அருளினாய்

நிலமகள் துதிக்க நிலத்தை கொடுத்தாய்
உலகத்தை பகதத்தனுக்கு உளமாரக் கொடுத்தாய்
பதினாயிரம் பெண்களை பல்வேறு செல்வங்களை
அதிசய குவியலை அங்கே அனுப்பினாய்

விண்ணுலகம் கண்டிட  விரைந்து சென்றாய்
கண்கவர் பாமாவுடன் குண்டலம் கொண்டாய்
இந்திரனை வென்று இனிய கற்பகத்தை
மந்திரமாய் பெற்றாய் மண்ணுக்கு வந்தாய்

கற்பக மரத்தை புறக்கடையில் நட்டாய்
அற்புதமாய் ஆங்கே ஆயிரம் மணம்செய்தாய்
பற்பல உருவங்கள் பாரினில் கொண்டாய்
பற்பல பிள்ளைகள் பெற்று சிறந்தாய்

தசகம் 82
பாணனோடு போரும் நிருகனின் மோட்சமும்

உனது அம்சமாய் உருக்குமணிக்கு மகன்பிறக்க
தனது பகைவனை தனியாய்க் கொல்ல
அவனுக்கு மகனாய் அநிருத்தன் பிறக்க
அவனும் உரோசனையை அழகாய் மணந்தான்

மகாபலிக்கு பாணன் மகனாய் பிறக்க
சுகானுபாவமாய் உஷை சிறப்பாய் பிறக்க
கனவில் அநிருத்தனை கண்டு காதலுற
உனதருள் பொங்க உலகம் தொடருமே

சித்திரலேகை யோகத்தால் சித்திரம் வரைய
உத்தம அநிருத்தனை உள்ளத்தில் கண்டவனை
அறிந்த தோழியும் அறைக்கு அநிருத்தனை
அறிவான யோகத்தால் அழைத்து வந்தாளே

இன்பத்தில் திளைக்க இனிதே வந்திட
துன்பத்தில் ஆழ்த்த துரிதமாய் பாணுசுரன்
முயன்று படுத்த முன்னின்று நீயும்
அயராது முற்றுகை அங்கே இட்டாய்

சிவபக்தன் பாணுசரன் சிறந்த படையும்
சிவனின் பூதகணங்களும் சேர்ந்து தடுக்க
அவனியில் போரினை அழகன் நீசெய்ய
பவனியாய் சூழ்ந்த படைகள் முறியுமே

மயக்கம் தந்து மகேசனை வீழ்த்த
தயக்கத்துடன் பூதங்கள் தடுமாறி ஓட
கந்தனும் புறங்காட்ட கால்கடுக்க மன்மதன்ஓட
தந்திரம் தொலைந்து தானும் தோற்றானே

விற்கள் பலவேந்தி வேந்தன் போரிட
கற்கள் போலதனை கண்ணன் தகர்த்திட
போருக்கு வந்த பொன்னம்பல காய்ச்சல்
ஊருக்கு உள்ளே உன்னால் எரிந்தது

நற்குணங்கள் இருந்தாலும் நடுக்கம் தரும்
துர்குணங்கள் தலையெடுக்க தொலையும் அறிவே
உன்னை சங்கரன் உளமார துதிக்க
உன்னருள் பாணாசுரனை உடனே காத்ததே

இந்திரனை வென்று இஜ்ஜகத்தில் வருணனைவென்று
தந்திர யமுனைவென்று தாரணியில் பிரம்மனை வென்று
மந்திர மகேசனை வென்று மாணாப்பெருமை பெற்று
சுந்தர வடிவம் கொண்ட சோபிக்கும் அழகனே

அந்தணன் தானத்தில் அவதூறு செய்த
அந்த நிருகனின் அறியாமை பொறுத்தாய்
அந்தணர் பக்தியை அகிலத்திற்கு உரைத்து
பந்தங்கள் அறுத்து பாரினில் காப்பாய்

தசகம் 83
பௌண்ட்ரக வதமும் விவித வதமும்

பலராமன் கோகுலம் பத்திரமாய் வந்தான்
உலகத்து இன்பங்களை உளமார அனுபவித்தான்
அடங்காத யமுனையை அடக்கி வாழ்ந்தான்
அடங்காத பௌண்ட்ரக அசுரனும் வந்தான்

தூதன் ஒருவன் தைரியமாய் வந்து
வாதங்கள் வைத்தான் வாசுதேவன் நானென்றான்
அடைக்கலம் என்னை அடைவாய் என்றான்
விடைகள் நானே விளையாட்டாய் சொன்னான்

யாதவப் படைகள் யாவும் சூழ்ந்திட
மாதவன் நீமாறாது சென்றிட மாணிக்கம்
மகர குண்டலம் கௌஸ்துபம் மஞ்சள் பட்டாடை
சிகரத்தில் அகந்தை சிறக்கக் கண்டாய்

கருத்த இரும்பை கையில் கொண்ட
அறுக்கும் சுதர்சனம் அழகாய் தாங்கினாய்
சக்கரம் தாக்கி சங்கடம் தீர்த்தாய்
உக்கிரம் கொண்டு உண்மைகள் உரைத்தாய்

நானே வாசுதேவன் நலமாய் எண்ணியே
நானே நீயென்று நாள்தோறும் நினைத்தான்
உன்னையே அடைந்து உலகத்தைப் பிரிந்து
உன்னோடு ஒன்றியே உண்மை அறிந்தான்

காசியின் மன்னன் கழுத்தினை அறுக்க
காசியின் இளவரசன் கடுஞ்சினம் கொண்டிட
மாசில்லா உன்னை மந்திரத்தால் அழிக்க
ஏசியே ஓடியே எறிந்தான் அக்னியை

அழிக்கும் அக்னி அகிலத்தில் பரவி
ஒழிக்கப் பரவி உயரமாய் எழுந்திட
உளையும் மனதுடன் உன்னிடம் முறையிட
விளையாட்டாய் நீவளை சக்கரம் எறிந்தாய்

எதிர்க்கும் பேரொளி எதுவோ என்று
அதிரும் அந்த அக்னி கதறியே
ஏவிய சுதட்சிணனை எரித்து விட
மேவிய காசியின் மீதும் தீய்த்ததே

உனக்குதவி விவிதன் ஒருநாள் செய்ய
தனக்குதவி செய்யாமல் தீயசெயல் புரிய
தீங்குகள் பலபுரிந்து திடமாய் போரிட
ஆங்கே பலராமன் அழிக்க மறைந்தான்

துரியோதனன் மகளை துரிதமாய் கவர்ந்த
அறியா சாம்பனை ஆங்கே கட்டிவிட
இன்சொல் சொல்லியும் இறுமாந்த கௌரவர்கள்
உன்னருள் கொண்டே உயரக்கிளம்பும் அஸ்தினாபுரம்

தசகம் 84
ஸமந்த பஞ்சகத்திற்கு செல்லுதல்

ஒருநாள் கிரகணம் ஒளிவீசி திகழ
மருவில்லா சூரியன் மந்தகாசம் பொங்க
உறவினர் பலர்சூழ ஊருக்கு வந்தாய்
அறங்கள் மிகுந்த ஸமந்தபஞ்சகம் வந்தாய்

மக்களுன் நலத்திற்காக மாசில்லா நீரில்
அக்கணம் நீராடி ஆனந்தம் கொண்டாய்
பாண்டவர் கௌரவர் படைசூழ சேர்ந்தாய்
ஆண்டவன் நீயே அவனியைக் காப்பாய்

உறுதியான பக்தியுடன் உன்புகழ் திரௌபதி
கருத்தில் கொண்டு களிப்புடன் இருந்தாள்
உந்தன் மனைவியர் உளமார சொல்லும்
சுந்தர கதைகளை சுவையுடன் கேட்டாய்

கண்களில் தாபத்துடன் கோபியர் கண்டாய்
பெண்கள் பிரிந்ததில் புலம்பி நின்றார்கள்
அருகில் கண்டதும் ஆனந்தம் கொண்டார்கள்
விருப்பத்துடன் நீயும் பின்னால் சென்றாய்

செருக்கினை விட்ட சிறப்பான கோபியரின்
உருவத்தை களிப்புடன் உல்லாசமாய் அணைத்தாய்
உடலென்னும் மாயை உன்னால் அழியுமே
விடமுடியா வெட்கமும் விடுதலை ஆகுமே

அடிக்கடி யுத்தம் அதனால் காண
முடியாது போனது முறுவலுடன் நீசொல்ல
மயங்கிய இராதை வயம் இழந்தாள்
இயங்கிய உடலும் உள்ளமும் இணைந்தாள்

வருத்தங்கள் இல்லாது வாழ்ந்திட உரைத்தாய்
உருவத்திற்கு அப்பால் உள்ளஉன்னதம் உரைத்தாய்
பெரிய இன்பம் பரமாத்மாவே அதுவும் நானே
அரிய உணர்வை அறிவாய் என்றாய்

உத்தவர் அறிவுறை உள்ளதை சொல்லிட
சித்தம் பிரிவையும் சிரிப்புடன் ஏற்றது
தத்தம் அறிவுக்கு தானேபுரிய நின்நினைவே
சுத்தமான பேரின்பம் சுகந்தமாய் புரிந்தது

தந்தை வாசுதேவன் நற்செயல் யாதென
சிந்தை அறியாது செவ்வனே கேட்க
மகனாய் கண்ணன் மண்ணிலே பிறந்திட
அகத்தை தூய்மையாக்க ஆவது வேறென்ன?

முனிவர்கள் அவனை முக்கிய வேள்வியை
இனிதே செய்ய இவ்வுலகில் சொல்ல
மூன்று மாதங்கள் முடிந்த பின்னர்
சான்றாய் இன்பத்தை சந்தோஷமாய் பெற்றாரே

திரும்பவும் பிரிந்து திடமாய் செல்ல
பெருத்த முறுவலுடன் பேரின்பம் தந்தாய்
தழுவிய இராதை துன்பத்தை இழந்தாள்
அழுகின்ற என்நோயை அறவே நீக்குவாய்

தசகம் 85
ஜராசந்த வதமும் சிசுபாலன் வதமும்

மகத நாட்டு மன்னன் ஜராசந்தன்
அகந்தை கொண்டு அரசர்கள் பலரை
சிறையில் அடைத்து சித்ரவதை செய்ய
மறை போற்றும் மாதவனிடம் முறையிட்டார்கள்

அந்த ஜராசந்தனை அழிக்கப் புறப்பட்டாய்
அந்த நேரத்தில் அங்கே தருமரின் வேள்வி
எந்தப்புறம் செல்லவென எண்ணி நிற்கையில்
சொந்தமான உத்தவன் சொன்னான் அறிவுரை

நகுல சகாதேவன் நிலத்தைப் பெற்றுதர
மிகுந்த செல்வத்தை மீட்டுத் தந்திட
அருச்சனன் பீமன் அங்கே உன்னுடன்
கருத்துடன் ஜராசந்தனைக் காண வந்தனர்

நீங்கள் மூவரும் நிலத்தை அடைந்து
பாங்காய் அந்தணராய் பார்க்க வேடமிட்டு
நற்செயல் புரியாத ஜராசந்தனை போரிட்டு
மற்போர் செய்யும் மகிமை கண்டாய்

அருச்சனன் பீமன் அவனோடு போரிட
தருணத்தில் மரத்தை தரையில் உடைத்து
முடியாத போரினை முடிக்க வைத்தாய்
இடியென முறிக்க இறுமாப்பு அழியுமே

தருமரும் அரசர்கள் பலர்சூழ வேள்வியை
கருத்துடன் செய்திட கைவல்யம் செய்தாய்
அந்தணர்கள் கால்களை அலம்பவும் செய்தாய்
சிந்தை மகிழ சிறந்த யாகம் செய்தாய்

மிகவும் உயர்ந்த மேலான ரூபன்
அகத்தில் அதனை அறிந்த சகாதேவன்
உன்னை வழிபட உளமாரச் சொல்ல
உன்னையே துதித்து உன்னதம் அடைந்தனர்

இடையரில் இச்சிறுவன் இழிந்தவன் என்றே
தடைசெய்ய சிசுபாலன் தானாக கிளம்ப
கையில் ஆயுதம் கணத்தில் ஏந்தி

வைதபடி சிசுபாலன் வீறாப்பாய் எழுந்தான்

பாண்டவர் தடுக்க பாண்டவரை நீதடுத்தாய்
ஆண்டு அவனை அச்சக்கரத்தால் மீட்டாய்
உன்னோடு ஒன்றாகும் உயரிய மோட்சத்தை
கண்ணெதிரே சிசுபாலன் கணத்தில் பெற்றான்

இராஜசூய யாகம் இனிதே நடந்திட
இராஜன் தருமனையும் இனிய கண்ணனையும்
மக்கள் பெருமையுடன் மகிழ்வுடன் கொண்டாட
பக்கத்தில். மாளிகையில் துரியோதனன் தடுமாறினான்

நிலத்தை நீராகவும், நீரினை நிலமாகவும்
கலந்து உணர்ந்து கண்கள் தடுமாற
துரியோதனன் தடுமாற்றத்தை திரௌபதி பீமன்
சிரிப்பாய் சிரிக்க சிந்தை குழம்புமே

தசகம் 86
ஸால்வனின் வதமும்  பாரதப்போரும்

சிவனை வழிபட்டு சிறந்த விமானம் கொண்டு
அவனியை ஸால்வன் அழிக்க வந்தான்
இருபத்திஏழு நாட்கள் இடைவிடாது சண்டையிட்டு
பெருவீரன் தியுமரனை பிரத்யும்னன் கொன்றான்

சார்ங்க வில்லை சால்வன் நழுவச்செய்ய
சார்ந்தவர் முன்னிலையில் சாகச உருசெய்து
தந்தையை மாயையில் உருவாக்கி அழிக்க
சிந்தை அரைநொடி சிந்திக்க மறந்ததோ

ஸௌபம் விமானத்தை சாகசமாய் நொறுக்க
சாபத்தை முறிக்க சக்கரம் எறிந்து
சால்வனுக்கு மோட்சம் சாத்திரத்தில் தந்து
மால்செய்த போரில் மகிழ்வைத் தந்தாய்

சூதாட்டம் ஆடியவர் செய்தியை அறிந்து
காதால் திரௌபதி கதறல் கேட்டு
முடிவில்லா ஆடைகளை முன்னின்று அளித்து

அடியவர் துருவாசர் அவர்பசியும் போக்கினாய்

பாண்டவர் கௌரவர் பாரதப்போர் முழங்க
பாண்டவர் பக்கம் நீயிருக்க கௌரவருக்கு
ஆண்டவன் படையை அழகாய் கொடுக்க
ஆண்டவன் நானேயென்று ஆளுருவம் காட்டினாய்

அருச்சனன் போரிட அஞ்சி தவிக்க
உருவத்தில் விச்வரூபம் உயரே காட்டி
அழிவில்லா நிலையுண்டு ஆன்மாவிற்கு என்று
மொழியாய் கீதை மொழிந்து அருளினாய்

நிலச்சுமை குறைக்க நேர்த்தியாய் பீஷ்மர்
உலகத்தில் போரிட உள்ளுக்குள் அருச்சனன்
அச்சத்தில் இருக்க அங்கே சக்கராயுதம்
உச்சத்தில் நீயெடுக்க உடனே பீஷ்மர், வணங்கினார்

நாராயண அஸ்திரத்தை நாராயணனே தாங்கினாய்
மாறாத உண்மையாய் மகாபாரதத்தில் போரிட்டாய்
கர்ணன் நாகாஸ்திரம் கணத்தில் ஏவிட
அர்சுனன் தலைகாக்க அழகாய் அழுத்தினாய்

பலராமன் நைமிசாரண்யம் பக்தியுடன் செல்ல
உலகத்து ஸூதபௌராணிகள் உறுதியைக் கொல்ல
நீராடி பின்னர் நிலத்திற்கு வந்தான்
போராடி துரியோதனன் போரிடக் கண்டான்

உறங்கிய குழந்தைகளை உணர்வின்றி கொல்ல
அறங்களை இழந்து அசுவத்தாமன் போரிட்டான்
உன்துணையில் அருச்சுனன் பிரம்மாஸ்திரம் நொறுக்க
உன்னருள் சக்கரம் உத்தரையின் கருவினிலே

தன்விருப்பப்படியே பீஷ்மர் தவப்படி இறக்க
உன்னுருவம் கண்டபடி உள்ளத்தால் மோட்சம்பெற
தருமனுக்கு அறிவுரை தாராளமாய் செய்ய
கருமமே கண்ணென்று கண்ணன் சொன்னாய்

தசகம் 87
குசேலன் வரலாறு

அந்தணன் குசேலன் ஆசிரமத்துத் தோழன்
மந்தகாச இயல்புடன் மணமும் புரிந்தான்
அல்லும் பகலும் உன்னையே நினைந்தனன்
இல்லறத்தை ஏற்றவன் செல்வம் இல்லாதவன்

குசேலன் மனைவி குடும்பத் தலைவி
சிசுக்கள் பேணவே செல்வம் வேண்டினள்
கண்ணன் தோழனைக் கண்டுவிடச் சொன்னாள்
அண்ணலைக் காணவே ஆர்வமுடன் வந்தனன்

பசியால் வருந்திய பரிதாபம் கண்டான்
ரசிக்காத செல்வத்தை ரமிக்காது வெறுத்தான்
செருக்கைத் தந்திடும் செல்வம் வேண்டாம்
கருத்தைக் கவரும் கண்ணனே வேண்டும்

பளபளக்கும் நகரம் பார்வைக்கு வைகுண்டம்
அளவில்லா ஆனந்தம் அவலும் காணிக்கை
பேரின்பம் இதுவே என்றான் மகிழ்வுடன்
பாரினில் உன்னைப் பார்த்து நின்றான்

தோழனை உபசரித்து தோளோடு அணைத்தாய்
ஆரத்தழுவி வரவேற்று அன்புடன் நடந்தாய்
உன்மனைவி விசிற உபசாரணை தொடர
கண்ணசைத்து பழங்கதை கலகலத்துச் சொன்னாய்

அவலைக் கொடுக்கும் அவலநிலையில் நாணினான்
அவலைப் பிடுங்கி அமுதாய் உண்டாய்
அருளைப் புரிந்தது அளவுடன் போதுமென்று
கருத்துடன் இலக்குமி கையைப் பிடித்தாள்

அடியவருக்கு அடியவனாய் ஆண்டவனுடன் இருந்தான்
விடிந்ததும் துவாரகை விட்டு சென்றான்
செல்வம் பெறாது சென்றாலும் இன்பத்துடன்
செல்வன் குசேலன் செவ்வனே சென்றான்

கண்ணனைக் கண்ணால் கண்டதே பேரின்பம்
புன்னகையம் திருமொழியும் பூத்திடும் சீரின்பம்
இல்லாளிடம் என்ன இயம்புவேன் என்றெண்ண
இல்லம் ஒன்று இரத்தினமாய் கண்டான்

வழிமறந்தேனோ விழி அறியேனோ விந்தையென்ன
அழியாப் பெருமை ஆனந்த கண்ணனுக்கே
பொன்னும் பொருளும் புதுப்பொலிவும் சூழ
மின்னும் இரத்தினம் மிளிரக் கண்டான்

இரத்தின மாளிகையில் இருந்தபடி உன்னிடம்
திரமான பக்திகொண்டு திகழ்ந்து இருந்தான்
விருப்பங்கள் நிறைவேற்றும் வேந்தனே தலைவனே
குருவாயூர் அப்பனே குணமாக்கு அப்பனே

தசகம் 88
ஸ்ரீ சந்தானகோபலன் வரலாறு

தான்பெற்ற ஆறு தளிர்களைக் காண
தோன்றிய குழந்தைகளை தேவகி கேட்க
பலியிடம் கேட்டு மரீசி முனிவரின் மகன்களை
எளிதில் காண்பித்து ஏற்றம் தந்தாய்

தேவகியை வைகுண்டம் கூட்டிச் சென்றாய்
ஆவது எல்லாம் அண்ணல் செயலாக
அந்தணன் ச்ருத்தேவன் அரசன் பஹூலாகவன்
சிந்தையில் நினைக்க சேர்ந்தருள் புரிந்தாய்

இரண்டு உருவங்களாய் இரண்டு வீட்டுக்கும்
இரண்டு வீடுகளிலும் இன்னமுது உண்டாய்
செல்வமும் வளமும் சிறிய பழமும் ஒன்றென
சொல்லாது உண்டு சேர்ந்தருள் செய்தாய்

அந்தணன் ஒருவன் அழுதவண்ணம் இருக்க
சொந்தமாகப் பிறந்து சிசுக்கள் இறக்க
அரசனின் குற்றமே அதற்கு காரணமென்று

தரமின்றி உன்னை தாறுமாறாய் ஏசினான்

எட்டு குழந்தைகள் இறந்த நிலையில்
எட்டாத செல்வமாய் எழிலாய் ஒன்று பிறக்க
இறக்குமோ என்று இவன் அஞ்ச
இறந்தால் மீட்பேனென இரைந்தான் அருச்சனன்

செருக்குடன் அருச்சனன் செல்வாக்கு வீரத்தை
கருத்துடன் பயன்படுத்தினாலும் காணாது போனது
எங்கும்தேடி குழந்தையை எடுக்க முடியாது
பொங்கும் தாபத்தில் தீயினில் புகதுணிந்தான்

மேற்கே நோக்கி மேலே அழைத்தாய்
காற்றைக் கடந்து கண்ணிருளைப் போக்கினாய்
இருளைக் கிழித்து இனிய உலகம் காண்பித்தாய்
அருச்சனன் செருக்கை அறவே அழித்தாய்

ஆதிசேடன் படுக்கையில் அழகான இலக்குமியுடன்
ஜோதிவடிவ திருமாலை சோபிக்கும் அழகை
ஆக்கல் காத்தல் அழித்தல் ஆவது என்னால்
தாக்கிய உண்மையை தனயன் கண்டான்

வெளிப்பட்ட செல்வம் வைகுண்ட பரமாத்மா
வெளிவராத மறைந்த செல்வம் ஜீவாத்மா
உங்களைக் காணவே ஓடியே வந்தேன்
மங்காத செல்வங்களை மடியிலே எடுத்துக்கொள்

பற்பல திருவிளையாடல் பாரினில் செய்தாய்
குற்றங்கள் இல்லாத குலவிளக்காய் திகழ்ந்தாய்
கண்களால் பெண்களைக் கவர்ந்து இழுத்தாய்
மண்ணின் சுமையை மோட்சத்தால் குறைத்தாய்

இன்பத்தில் மூழ்கி இப்பிறப்பில் நாரதர்
உன்னருள் பெற்று உபதேசம் பெற்றான்
உத்தமனான பக்தன் உத்தவரும் உன்னிடம்
சித்தமாய் உபதேசம் சிறக்கப் பெற்றார்

அன்புநட்பு அச்சம் பகை அவ்வாறு உணர்வுகள்

என்பால் பொங்க எங்கும் துன்பம்
உன்னை துதிக்கும் உணர்வே இன்பம்
கண்ணனின் அவதாரமே காருண்ய ஸ்வரூபம்

தசகம் 89
வ்ருகாஸுரனின் கதையும் பிருகுவின் ஆய்வும்

செல்வம் விரைவில் செருக்கினைத் தருமென்று
சொல்லாது பக்தருக்கு சிறந்த அமைதி தருவாய்
எல்லா விருப்பங்களும் இல்லாதவருக்கு அளித்து
நல்லதை செய்யும் நாயகன் நீயே

சிலர் விரைவில் சினப்பட்டு மகிழ்வார்
அவர் பிரம்மனை பரமசிவனைத் தொழுவார்
விருகாசுரன் இதற்கு எடுத்துக் காட்டே
அருமை தெரியாத அசுரன் மகனவனே

விரைவில் இன்பம் வேண்டி கேட்டான்
இறைவன் யாரை எண்ண வேண்டுமென்றான்
நாரதன் சிவனை நாடச் சொன்னான்
மாலன் உன்னை மறந்தானோ அவனே

அரும்பெரும் கடவுளை ஆங்கே மறந்தானே
கடுந்தவம் புரிந்து கண்களில் சினம்கொண்டானே
சிவனை எண்ணியவன் சினத்தில் தலையறுத்தானே
சிவனிடம் தலைதொட்டால் இறக்கும்வரம் பெற்றானே

விருகன் காட்டில் விடுபட்ட சிங்கம்போல்
கருவத்துடன் சிவனையே கர்ஜித்துத் தொடர
தன்தலை காக்க தலைவனே அஞ்சியோட
உன்னருள் மேனியை உடனே மாற்றினாய்

அழகிய வாலிபனாய் அவன்முன் தோன்றி
குழம்பிய விருகனின் குலம் விசாரித்து
உன்தலையில் கைவைத்து உன்திறன் சோதிப்பாய்
தன்தலையில் கைவைக்க தானே அழிந்தானே

சத்துவ குணத்தில் சிறந்தவர் யாரென

சத்தியம் அறிய சரஸ்வதியாற்றின் தவமுனி
பிரம்மனைத் தொழாது சிவனிடம் சென்றான்
அறவழி நடக்காததால் ஆறாசினத்தை கொண்டான்

பின்னர் வைகுண்டத்திற்கு பிருகுமுனி வந்திட
உன்னைக் மார்பில் உதைத்து நிற்க நீயோ
உன்வரவு அறியாதுபடுத்த என்னைப் பொறுத்தருள்க
உன்திருவடி என்மார்பில் உண்டான அணிகலனென்றாய்

சத்துவ குணத்தில் சிறந்தவன் நீயே
சத்தியம் இதுவே சாத்திரம் அறியுமே
நித்திய மோட்சத்தை நின்னால் அவர்பெற
பத்திரமாய் நழுவாது பக்தரைக் காப்பாய்

வேதங்கள் துதிக்கும் விஷ்ணுவே முழுமுதலே
பாதங்கள் வணங்கி பரமாத்வை பாடிநிற்பேன்
நற்செயல் குவியலே நல்லதை தருவாய்
பெற்றவன் போலவே பேணிக் காப்பாயே!

தசகம் 90
விஷ்ணுவின் பெருமையை நிலைநிறுத்தல்

விருகாசுரன் மோகினி விதவித கதைகள்
பெருமை சொல்ல பிருகுமுனிவர் கதைகள்
சிவன் பிரம்மனைச் சிறந்த தேவன் நீயென்று
அவனியில் உறுதி அதுவே உண்மை

ஐந்து கடவள்கள் உண்டென்று சிலர்சொல்வார்
ஐந்து உருவத்திலும் ஐயமின்றி நிறைவாய்
மூன்று உலகிற்கும் முழுமுதல் பொருளே
மூன்று கடவுள்களுக்கும் மூத்த மூர்த்தியே

மூன்று குணங்களில் முதன்மை ஆனவனே
மூன்று கடவுளில் முக்கிய குணவானே
பிரம்மனும் இராசகுணம் மிகுந்து உள்ளவன்
சிவனோ தாமசகுணம் சிறந்து உள்ளவன்

எல்லாம் கடந்த ஈஸ்வரன் நீயே
இல்லாத உருவமே இல்லாத கடவுளே
சொல்ல முடியாத சௌந்தர்ய ரூபனே
நல்லதை யாவருக்கும் நவிலும் புருடோத்தமனே

ஆதிசங்கரர் மூன்று அம்சங்களில் உன்னையே
ஓதிடும் மறைகளின் உன்னதம் என்றார்
நடுநிலை தவறாது நாராயணனை துதித்து
விடுபட்டு மேன்மை வீடுபேறு பெற்றார்

ஆயிரம் நாமங்களை அழகாய் உரைத்தார்
வாயினால் உன்னழகை வர்ணித்துப் பாடினார்
பிரணவத்தில் முழுமுதலை பிரதானமாய் சொன்னார்
பிரம்மம் நீயென்று பிரமித்துச் சொன்னார்

புராணங்களில் உன் பெருமையே சிறந்தது
புராண ஸங்கிரஹம் போற்றிடும் உலகம்
உன் உலகமே உண்மையில் உயர்ந்தது
என்பதில் எமக்கு இல்லை ஐயம்

உந்தன் திருமேனி உயர்வாய் தெரியும்
அந்த பிரம்மனும் அதிசயித்து காண்பான்
பாகவதம் சொல்லும் பறைசாற்றி புகழும்
பாகவதர் ஸ்ரீமாதவர் பரந்தாமன் புகழ்பாடுவார்

இயல்புக்கு ஏற்ப இயல்பாய் நற்பயன்
வயப்படும் அதனால் வழிபடுவார் பலருண்டு
தலைவன் பெருமை தயக்கமின்றி வியாசர்
அலையாத மனத்துடன் அழகாய் சொல்வார்

நடந்ததை உரைப்பது நல்விளக்கத்துடன் உரைப்பது
இடக்காக வாதம் செய்வது உண்டு
அதனால் உன்பெருமை குறைய ஸ்காந்தம்
இதமில்லா வர்ணனை இந்நூலில் உண்டு

அர்த்த வாதங்கள் அன்றாடம் செய்தாலும்
அர்த்தங்கள் புரியாத அறிவில்லாதவன் ஆனாலும்
உன்னையே பாகவதம் உயர்வாய் துதிக்கும்

உன்பெருமை நானும் ஓயாது பாடுவேன்

தசகம் 91
பக்தியின் பெருமை

அச்சத்தை விரட்டும் அச்சதா கிருஷ்ணா!
உச்சத்தைக் காட்டும் உயரிய ரூபனே
இச்சைகளை நீக்கி இனிமை தருபவனே
மிச்சமாகும் உண்மை மிதமிஞ்சிய தேவனே

கண்களை மூடினாலும் காத்திடும் நாயகனே
உண்மை பொருளாகி உலகத்தைக் காப்பவனே
சொல் மனம் செயல் இந்திரியங்களை
நல்லவர் ஒப்படைக்க நலங்களைத் தருபவனே

அந்தணர் ஆயினும் அகத்தூய்மை உன்நினைவே
அந்த அச்சத்தை அழிக்க நீயேதுணை
மாயை சூழ்ந்திட மயங்கிடும் மனமே
மாயை அழிப்பது மதுசூதன்மேல் பக்தியே

செல்வர்கள் சேர்க்கை செல்வத்தைப் பெருக்கும்
நல்லவர் சேர்க்கை நாராயணபக்தியைப் பெருக்கும்
எப்பொழுதும் பக்தர்களை என்னுடன் சேர்ப்பாய்
தப்பாது உன்பெருமை நாவினால் சொல்லவைப்பாய்

மோட்சத்தை அடைய முனைந்து பாடவேண்டும்
காட்சியாய் கண்டு கண்கள் கலங்கவேண்டும்
சிரித்தும் அழுதும் சிந்தையில் கொள்ள வேண்டும்
திரிந்து பற்றற்று திருவாய் உரைக்கவேண்டும்

உலகின் தலைவனே உள்ளது யாவையும்
உலகில் உன்னுருவமாய் காண உறுதியைத் தா
பஞ்சபூதங்களையும் பறவை விலங்குகளையும்
அஞ்சாது உன்னுருவாய் காணும் அறிவைத் தா

உன்னிடம் நன்றியுடன் உன்னைத் தியானித்து
உன்திருவடி விலகாது ஓயாத புலனகற்றி
எல்லாமே மாயை என்பதை உணர்ந்து

உள்ளத்தில் நித்தம் உன்நினைவு கொள்ளவேண்டும்

உன்னை ஒன்றி உலகை மறக்க
என்மனதில் தகுதி இல்லை என்றால்
உன்னடியார் நட்பும் உலகின் மூடர்மேல்
என்மன அருளும் பகைசாரா உணர்வும் தா

உண்மை உருவை உன்மாயை மறைக்குமே
கண்ணுக்கு நிலமாய் காற்றாய் நீராய்தெரியுமே
உடலென்றும் உயிரென்றும் உலகில் துன்பவலை
கடனாய் எம்மை கடமைப் படுத்துமே

சிற்றுயிர் பலவகை சிறந்த ஆசிரியரே
சிற்றுயிர் படும் சிலவகை துன்பமே
பேரின்ப வடிவான பெருமை பக்தியில்
பாரில் இன்பத்தை பத்திரமாய் தந்திடுமே

தசகம் 92
கருமத்துடன் கூடிய பக்தி

செயல்கள் யாவும் செவ்வனே செய்து
பயன்கள் எதிர்பாராது பகவானை எண்ணி
வேதங்கள் மறுப்பதை வேண்டாமென ஒதுக்கி
வேதங்கள் விலக்கியதும் உன்செயலென விட்டுவிடுவேன்

உன்னை வழிபடுவதே உலகில் சிறந்தது
உன்னை தியானிக்க உருவம் தெரியுமே
கல்லிலும் மண்ணிலும் கடவுள் வடிவமே
நல்மலர் நறுமணம் நாள்தோறும் வழிபாடு

அறியாது பெண்கள் ஆவது செய்யாமல்
தெரியாது சூத்திரர் திரிந்து வாழ
அந்தணரும் வைசியரும் அரசரும் மறந்து
இந்த உலகில் இழிபட்டு வாழ்வாரே

நடத்தை மறைக்க நல்லவன் போல்உரைக்க
கடமை மறந்து கண்டபடி பிதற்ற

உடன்பிறந்தவன் எப்போதும் உள்ளத்தில் விஷ்ணு
கடமை மறந்தானோயென கண்டபடி இழிசொல்

சிறந்த முனிவர் சிந்தையில் தவம்செய்தார்
சிவந்த உருவத்திற்கு செழிப்பாய் வேள்வி
தந்திர சாஸ்திரங்கள் தொழுது நின்றார்
மந்திர வேதபொருளே மறைநான்கு யுகமே

திரேதா கிருதா துவாபர யுகங்களில்
சிரங்களத் தாழ்த்தி சிந்தை நிறுத்தினரே
கலியுக நல்வினை களங்கமில்லா நல்லுரை
கலியுகத்தில் உன்னை கண்மூடி பாடுவேன்

பக்தர்கள் மிகுந்த பாரத நாட்டில்
பக்தியுடன் பாட பலர் இருக்கின்றனர்
பக்தியுடன் நானும் பாடலைப் பாடுவேன்
பக்தியை மறைக்காது பாசக்கயிறை அறுப்பாய்

கலிபுருஷன் இரக்கமின்றி காளையை துன்புறுத்த
கலியைக் கொல்ல கைவாளை பரீட்சித்தெடுக்க
கலியின் சிலநற் குணத்தால் விட்டான்
கலியோ பக்தரை கடிநோயால் தாக்குகிறான்

புருஷோத்தமனே கலியுலகில் முனிவர்கள் எட்டை
கருத்தினில் கொள்ள காணிக்கையாய் தந்தனர்
கங்கை கீதை காயத்ரி துளசி சாளக்கிராமம்
இங்கே ஏகாதசி வழிபாடு எட்டிலும் பற்றினைத் தா

அடைக்கலம் உன்னை அடைந்து விட்டால்
கடைக்கண் என்மீது கண்டுவிட்டால் போதுமே
செயல்களின் பலனை செவ்வனே உன்னிடம்
பயமின்றி ஒப்படைக்கும் பக்தியை உண்டுசெய்

தசகம் 93
இருபத்தி நான்கு ஆசிரியர்கள்

உன்னருள் இருந்தாலே உறவினர் நட்பை
என்மனம் விடுமே எல்லாம் மாயையென்றே

உள்மனம் அறிய உண்மை புலப்படுமே
கள்ளமில்லா பக்தனுக்கு கட்டளைகளும் விலகுமே

பசியிலும் தாகத்திலும் பலஉயிர்  பற்றுகொண்டிருக்க
பசிப்பிணி கொண்டாலும் பகுத்தறிவில் சிறந்தவன்
அரிதான பிறவியில் ஆராய்ந்து உன்னை
அறிபவன் தனக்குறவினன் அல்லாலவன் பகைவன்

உன்னருள் கொண்டதால் உலகில் பலஆசிரியர்கள்
தன்னிலே பலரிருக்க தாங்கிடும் பொறுமை
மண்ணிடம் கற்போம் மாறாத பற்றின்றி
விண்ணின் ஆகாயமும் விரிந்த காற்றும்

நீரைப்போல் தெளிந்து நெருப்பைப் போலுண்டு
நீரைப்போல் தூய்மை நிலவைப் போல் வளர்தேயல்
அழியாதது ஆன்மாவென அறிய வேண்டும்
எழிலான ஜீவராசிகளிடம் எளிதில் கற்கவேண்டும்

இறந்த குஞ்சுகளைக் கண்டிறந்த புறாபோலாகாது
பிறந்த மலைப்பாம்பைப் போல் பசி பொறுக்க வேண்டும்
கடலைப்போல் மிடுக்காய் கண்மயங்கும் விட்டிலாயில்லாது
உடலில் வண்டினைப்போல் உயர்ந்த மலர்பெற வேண்டும்

செல்வத்தை சேர்த்தாலும் செருக்கில்லாதிருக்க வேண்டும்
செல்வத்தை ஈட்டினால் செல்வத்தைக் கவர்வான்
மானைப்போல் மயங்காது மீனைப்போல் உணவில்ஆசை
தேனைப்போல் தேனை ஈட்டாது பிங்களை போல்தூங்கவேண்டும்

மீன்கொத்தி போல் மீளாஆசை இல்லாது
தான் என்ற அகந்தையின்றி தளிர்சிசு போல் தவழவேண்டும்
கன்னியின் கைவளையாய் எஞ்சி கருமான் வரும் ஓசையறியாது
அந்நியர் வீட்டில் அந்த பாம்புபோல் வாழ வேண்டும்

தன்னிடத்தில் உருவாகி தன்னிலேஒன்றும் சிலந்தியாய்
உன்னைத் தியானிக்க உன்னுருவம் உருவாக
குளவியும் கற்பிக்க குலங்காக்கும் குருவாக
அளவில்லா பகுத்தறிவை ஆன்மாவும் உணர்த்துமே

உடலின் மயக்கம் உடனே அகற்று
இடரான புலனை இல்லாது அடக்கு
அழியும் உடல்மீது ஆசை அடக்கு
எழிலான உன்திருவடி என்மேல் வைத்திடு

தாமரை மலர் கண்ணனே தலைவனே குருவாயூரப்பனே
காமத்தை அழித்து காலத்தால் நிலைத்து
எல்லா நோயும் என்னை விட்டொழிந்து
நல்ல மோட்சத்தை நவில்வாய் இப்பிறவியில்

தசகம் 94
உண்மையறிவின் தோற்றம்

உன்னுருவம் இந்திரியம் உடலுக்கு அப்பாற்பட்டது
இன்னல் இல்லாது எங்கும் பரவியது சிறந்தது
பயனின்றி அறம்செய்ய பக்தியால் அறிவார்
அயராத நெருப்பாய் அண்டமாய் விரிந்தவனே

ஆசிரியர் அடிக்கட்டை அரணியாக சீடன்
மாசில்லா மேல்கட்டை அரணியாக கடைந்ததில்
எரியும் நெருப்பு எல்லாவற்றையும் எரிக்க
அறிவுத்தீயாய் அணைத்தாலும் அண்டத்தில் நிறைந்தவனே

மறைநூல் வழிகளும் மருந்தான ஆயுர்வேதமும்
இறை காட்டும் அறநூல்களும் எட்டு யோகங்களும்
குறை கொண்ட கரும்பலன்களே துன்பத்தை தவிர்க்க
நிறையுடைய தூயவனே நீயே பேரின்பமே

ஏழையின் உறவினனே எங்களின் பத்மநாதனே
கோழையாய் அஞ்சிபிரம்மன் கோடிவருடம் வாழவில்லை
அச்சம் இல்லாத அதிசய உலகம் வைகுண்டமே
இச்சகத்து தளைகளை இனிதே அறுத்தொழிப்பாய்

உண்மையில் மோட்சம் உன்னை அறிவதே
உண்மையும் பொய்யும் உலகவாழ்வில் ஓர்நிலையே
உலகத்தில் பற்றற்று உன்னைச் சரண்டைய
உலகத்தில் வாழும்போதே உள்ளம்பெறும் முக்தியே

உயிருள்ள போதே உண்மை விடுதலை
பயிராய் வளர்ந்து பற்றறுத்தவன் ஜீவமுக்தனே
அதற்கு பக்தியை ஆதாரம் ஆதலால்
அதனை அடைய அளவில்லா பக்தியை தா

எட்டாத கனியை எட்டவைக்கும் உருவமே
விட்டுவிட முடியாத வினைப்பயன் பற்றை
வேதங்கள் அறுக்குமோ விளையாடல்கள் அறுக்குமோ
வேதமொழி சுமக்காது வீடுபேற்றினை தருவாய்

முழுமுதல் பொருளே முன்னிற்கும் பெருமையே
குழுமிய பக்தர் கூட்டத்தைப் பார்த்து மகிழ்ந்து
உன்னைத் துதித்து உன்பெருமை வணங்கி
உன்நினைவை எப்போதும் உள்ளம் கொள்ளுமே

கிடைக்கும் பொருள்களை கீர்த்தியுடன் தருவேன்
அடைக்கலம் உன்னையே அடைந்தே நிற்பேன்
பொய்க்காத தொண்டுகள் புரிந்து இருப்பேன்
பொய்மை அகற்றும் பொலிவான நெருப்பே

உன்னை ஒன்றுதல் உலகத்தில் சாத்தியமே
உன்னை அடைதல் உலகத்தில் அரிதே
நியமம் விரதம் ஹோமம் தன்னடக்கம் தாண்டி
வயப்படும் கோபியர் பக்தியே வலிமை வாய்ந்ததே

## தசகம் 95
## த்யான யோகம்

உலகத்திற்குக் காரணமாய் உள்ளவனே உணர்வின்
கலப்படமான மாயை கலந்த உயிரே
அளவில்லா குணங்கள் அடுக்கடுக்காய் மாறிட
வளரும் பக்தியில் வாடிடும் மூன்றுகுணங்களே

ஸத்துவ குணம் சத்தியத்தை நாடும்
நித்தம் தாமஸ குணமும் இராஜஸ குணமும்
தத்தம் மனதை தடுமாற வைத்து

சிற்றின்ப உணர்வை சிந்தையில் வைக்கும்

உன்மேல் வைக்கும் பக்தியே உயர்ந்ததென்று
உன்வாய் மொழி உரைத்த அன்னமே பேரின்பம்
அதுவே என்றுரைத்த உத்தவன் வாக்கும்
எதுவென்று அறிந்தால் எல்லாம் சுகமே

நீர்நிலை நடுவிலிருக்க நீரேசூழத் தெரியும்
கார்மேனி கண்ணன் நினைவில் கண்கள் மயங்கும்
இந்திரன் உலகமும் இந்திரிய இன்பமும்
சிந்தை விரும்பாது சித்தியும் விரும்பாது

வந்துகூடிய மோட்சமும் விரும்பாது உன்னையே
பந்துக்களுடன் பாடிமகிழும் பக்தியின் முன்னே
இந்திரிய சிற்றின்பம் இழந்திடும் வலிமை
விந்தையான தீயிலிட்ட விறகாய் எரியுமே

உள்ளத்துக் கசிவும் உடலின் மயிர்சிலிர்ப்பும்
கள்ளமில்லா காதலும் கதைச்சுவை களிப்பும்
பயிலும் கல்வியும் பயனின்றி போகுமே
உயிரின் கண்ணும் உண்மை அறியுமே

உன்னைப் பற்றிய உயரிய தியானம்
இன்ப இருக்கையில் இருவிழி நடுவில்
ஒன்றின் மேல் ஒன்றாக சந்திரசூரிய தீ
நின்றதன் நடுவிலே நீலநிற மேனியனே

கருங்கூந்தலும் காதுகளில் குண்டலமும் வனமாலை
வருடும் மார்பும், வளமான கௌஸ்துப முத்துமாலையும்
திருக்கை நீண்ட அழகும் திகழும் பொன்னிற ஆடையும்
திருவடி தாமரையும் தியானித்து இருப்பேன்

உள்ளத்தை உன்னிடம் உள்ளதாக கொடுத்து
அள்ள முடியாத ஆனந்த நிலையை
இணையில்லா பிரம்மத்தை இதயத்தில் நிறுத்தி
அனைத்திலும் உன்னை அடிக்கடி நினைப்பேன்

எட்டுச் சித்திகளும் எட்டாத உன்னுருவை

எட்ட வைப்பதால் கிட்டே வந்தாலும் உன்னையே
காலம் தாமதிக்காது கருத்தினில் கொள்வேன்
ஆலவிழுதே முரன் அசுரனின் பகைவனே காப்பாய்

## தசகம் 96
பகவானின் பெருமைகளும், ஞான யோகங்களும்

பெருமை மிகுந்த பிரம்மமே அகரமே
பிருகுவே நாரதரே பிரமிக்கும் ஓங்காரமே
கருடனே அனந்தனே காமதேனுவே மனுவே
உருவாகும் கங்கையே பிரஹ்லாதனே உத்தமனே

அந்தணர்களில் பலியே வீரர்களில் அருச்சனனே
மந்தகாச ஒளியே மகத்தான உத்தவனே
வலிமைக்கு வலிமையே வேள்வியில் ஜபவேள்வியே
எளிமை நீயே எல்லாம் நீயே இல்லாத பொருளும் இல்லையே

வேதங்கள் காட்டும் வெவ்வேறு வழிகளில்
ஆதாரம் ஆனமூலமே ஆனந்த வடிவமே
வெவ்வேறு வடிவங்களின் வேரான காரணமே
இவ்வுலகில் சிறந்து இருக்கின்ற அறிவே

பக்திஞானம், கருமயோகங்கள் மூன்று
முக்திக்கு ஞானயோகம் முற்றிலும் துறந்தவருக்கு
சிற்றின்ப மோகம் சிறந்தவருக்கு கருமயோகம்
சிற்றின்ப பற்றும் இல்லாதவருக்கு பக்தியோகம்

பிறந்து இறந்து பிறவிக்கடலில் நீந்த
பிறப்பில் செய்யும் பிறழாத நற்செயல்கள்
படகாய் உடலும் படகோட்டியாய் குருவும்
கடலைக் கடக்க காற்றும் நீயே

அறிவை விரும்பினால் அறிஞராய் ஆகலாம்
ஆராய்ந்து பிரம்மத்தை அடையலாம் பலபிறவிகளில்
எட்டாத மோட்சத்தை எட்டிப்பிடிக்கலாம் கருமயோகத்தில்
கட்டியணைக்கும் பக்தியிலோ கணநேரத்தில் கண்டிடலாம்

அறிவிற்கு மட்டுமே ஆராய்ந்த முயற்சி
இழிவே என்கிறார் இதிகாச முனிவர்
அழிவில்லா பக்தியால் அழகான திருமேனியால்
எளிதில் மோட்சம் என்விரல் நுனியிலே

கடுமையான கருமயோகத்தில் வெறுப்புற்றேன் உந்தன்
இனிமையான வரலாற்றில் இன்புற்றேன் ஆயினும்
ஆசைகளை விடமுடியாது அவதியில் வாழ்கிறேன்
ஓசையின்றி உள்ளத்தில் உட்புகுந்து காப்பாய்

அன்று பொருளிழந்து அல்லல்பட்டு அந்தணன்
வென்று மனமே வேதனைக்குக் காரணமென்றான்
நின்று அமைதி நிறைய பெற்றடைந்தான் உன்னை
இன்று நீயும் எனக்கமைதி தருவாய்

மன்னன் புரூரவசு மனமயங்கி ஊர்வசியிடம்
இன்பத்தைக் கண்டு இச்சகத்தில் வாழ்ந்தான்
பின்னர் உன்னை பேரின்பம் என்றறிந்தான்
என்னையும் அதுபோல் ஏற்றமிகு பக்தானாக்கு

தசகம் 97
சிறந்த பக்தியை வேண்டுதலும் மார்க்கண்டேய கதையும்

அறிவும் பற்றும் அறுசுவை உணவும்
செறிவான செயலும் இன்பமும் முக்குணங்களே
உயர்ந்தவை தாழ்ந்தவை இடைப்பட்டவை இவற்றில்
அயராது உன்னை அடைவதே என்நோக்கம்

உன்னிடத்தில் மனதை உள்ளடக்கி திரிவேன்
உன்னையே எங்கும் எதிலும் காண்பேன்
உன்பக்தர்கள் நற்செயலை உளமாரச் செய்வேன்
உன்னையே என்றும் உண்மையாய் வழிபடுவேன்

திருடன் அந்தணன் விலங்கு எல்லோரிடமும்
இருக்கும் உன்னை இதயத்தால் உணர்வேன்
எங்கும் ஆன்மா என்ற உண்மையில் திரிவேன்
பொங்கும் களிப்பில் பொலிவோடு நான் நீயாவேன்

இந்த பக்தியை இனிதே செய்ய
இந்த உடலின் இம்சை நோயகற்று
அந்த மார்கண்டேயன் ஆயுளை நீட்டித்தது
அந்த கதைபோல அருளைப் பொழிவாய்

நீண்ட நாள் வாழ்ந்தவன் நின்னையே எண்ணி
ஆண்டுகள் பலதவமிருக்க ஆசைகள் மூட்ட
இந்திரன் தேவகன்னியர் இதமான தென்றல்
மன்மதன் மூலம் கலைக்க முடியாது தோற்றானே

நரனும் நாராயணனும் நாடியவனை அணுக
வரங்களை நீ வாரி வழங்கினாலும் வேண்டாமென்று
உன்பக்தி ஒன்றே போதும் என்றான்
துன்பமானாலும் உந்தன் தூயமாயை வேண்டினான்

காற்றினில் சிதறுண்ட  கருமேகங்கள் கரைபுரள
போற்றிடும் உன்திருமேனி புதுஆலிலையில் தவழ
வீற்றிருந்து அழகில் விரல் மடித்த குழந்தை
காட்சியினை மார்கண்டேயன் கண்டதும் உண்மையே

உன்னைக் கண்டதும் உன்னருகில் வந்தான்
உன்னுள்ளே மூச்சாய் உள்ளுக்குள் சென்றான்
உன்னுள்ளே அனைத்து உலகங்கள் கண்டான்
உன்னைத் தழுவிட உடனே நீ மறைந்தாய்

சிவபெருமான் சித்தம் குளிர்ந்து அவனுக்கு
அவனியில் பலவரங்களை அளித்து சென்றான்
இறப்பும் முதுமையும் இல்லாது செய்தான்
சிறந்த உன்னையே சிவனும் தொழுதான்

சத்திய உலகில் சத்தியமான மூவுலகம்
நித்தியமான வைகுண்டம் நின்னுடைய உலகம்
புத்திக்கு அறியுமோ புதிராய் இருக்குமோ
சித்திக்கும் அறிவே சிந்தையின் உண்மையே

தசகம் 98
முழுமையான பிரம்மத்தின் வழிபாடு

உன்னிடத்தில் தோன்றி உலகம் விளங்கும்
உன்னிடத்தில் ஒடுங்கி உலகம் வேறான
உருவம் பலகொண்டு உண்மை உருவத்தை
ஒருவரும் அறியாவண்ணம் ஒளிமயமே
உனக்கு வணக்கம்

பிறப்போ செயலோ பெயரோ குணமோ
இறப்போ குற்றமோ இல்லாத உண்மையே
உருவமாய் இல்லாத அருவமாய் இருக்கிறாய்
தருவாய் மோட்சத்தை தானே பேரின்பமே
உனக்கு வணக்கம்

விலங்கு பறவை விதவித மனிதர் இல்லை
உலகில் வர்ணிக்க உருவம் இல்லை
பெண்ணாக இல்லை ஆணாக இல்லை
கண்ணுக்குத் தெரியாத காருண்ய உருவமே
உனக்கு வணக்கம்

மாயை உருவாக்கி மாறும் பிம்பம் உருவாக்கி
சாயையில் எதிர்பிம்பம் உருவாக்கும் காலசக்தியே
மஹத்து பூதங்கள் மாத்திரை இந்திரியம்
அஹங்காரம் எல்லாம் அடக்கும் ஆமையே
உனக்கு வணக்கம்

கிருஷ்ணனே
எல்லா உருவமே எங்கும் நிறைபவனே
இல்லாத பொருளாய் இருக்கும் சப்தபிரம்மமே
அணுவாகி அண்டமாகி ஆன்மாவாகி சித்தாகி
நுணுக்கும் பரனாகி புருடனான தத்துவமே
உனக்கு வணக்கம்

இருக்கும் பொருளாகி இல்லாத பொருளாகி
இருந்தும் இல்லாத மாயையாகி பாம்பாகி கயிறாகி
அருள்மறை வேதமாகி ஆரண்ய சம்சாரமாகி
அறுக்கும் கோடாரியாகி அண்டத்தைக் காப்பவனே உனக்கு வணக்கம்

அணிகலனுக்குப் பொன்னாகி அகலுக்கு மண்ணாகி
தனிமனிதனுக்கு உலகமாகி தன்கண்மூட கனவாகி

கலையும் விழிப்பாகி காரிருள் பாம்பாகி கயிறாகி
அலையும் மனத்தின் அடங்கா ஓசையே
உனக்கு வணக்கம்

உனக்கு அஞ்சியே உலகம் இயங்குகிறது
கணக்கு தப்பாது கதிரவன் தோன்றுகிறான்
காற்றும் வீசுகிறது காலம் ஓடுகிறது
ஏற்றியவரை வைத்தாய் இறக்கியும் விட்டாய்
உனக்கு வணக்கம்

மூன்று குணங்களே மூன்று எழுத்தே
மூன்று கடவுள்களே மூன்று வேதங்களே
மூன்று நிலையே மூன்று யுகங்களே
மூன்று காலமே மூன்று யோகங்களே
உனக்கு வணக்கம்

உண்மையான தூய்மையான உலகத்தளை விடுபட்ட
கண்ணுக்கு விருப்பமாய் காணாத மாற்றமாய்
இணையில்லா பெருமையாய் இருப்பதின் வேராய்
அணையா ஒளியே ஆனந்த பேரின்பமே
உனக்கு வணக்கம்

விஷ்ணுவே அருட்கடலே !
உன்னால் காலச்சக்கரம் ஓடும் ஆரக்கால்கள்
பன்னிரண்டு மாதங்கள் ஆகின்ற முனைகளோ
முன்னூற் றறுபது நாட்கள் நில்லாது சுழலும்
என்னை வருத்தாது என்நோயகற்றும் திருவடியே
உனக்கு வணக்கம்

தசகம் 99
வேத ஸ்துதி

மூன்று உலகங்களை மூன்றடிகளில் அளந்தாய்
சான்றாய் உலகை சலிக்காது தாங்குகிறாய்
ஆற்றலை யாரால் அளக்க முடியும் நிலையான
போற்றலே பேரின்ப பூந்தேனை அடைவேனோ

நிலத்தின் தூசிகளை எண்ண முடியுமோ விஷ்ணுவே

உலகத்தில் புத்தம்புதிதாய் தோன்றிடும் செல்வமே
உன்னைப் பாடுபவனே உன்னைப் புகழ்பவனே
இன்னல்கள்நீங்கி வைகுண்டம் இறுதியில் அடைவானே

துதிக்கும் கவிஞர்களே துதியுங்கள் அவனை
புதிரான அளவைகளால் புரியப்பட்டவன் விஷ்ணுவே
வேதத்தின் முடிவே விளையாடும் கண்ணனே
சாதனையாய் செய்யுங்கள் சான்றோன் புகழ்பாடுங்கள்

பலவகை செயல்களால் பணியாள் போன்றும்
சிலவகை வேடங்களும் சிறப்பான தோழனும்
சிறந்த அந்தணர் சிரிப்போடு கண்டிடும்
அறங்கள் புரியும் அவனைத் தியானியுங்கள்

உந்தன் பெருமை உணர்ந்தவன் யாருமில்லை
இந்த உலகில் இன்னுமவன் பிறந்ததில்லை
இவ்வுலகங்களுக்கு அப்பால் இருக்கும் வைகுண்டமே
இவ்வுலகில் நான் இருந்தபடி உன்னையே துதிக்கிறேன்

பள்ளிகொண்ட பெருமாளே பார்த்தனின் சாரதியே
அள்ளும் அழகான அந்த தாமரைப் பூவே நாபியில்
உயிர்களை உலகத்தை உருவாக்கியது அன்றோ
உயிரான வேதமே உண்மையான விபுவே விஷ்ணுவே!

மக்களே உங்கள் மனதிலே உள்ளான்
இக்கணம் உணருங்கள் இதனை மறந்து
மறைக்கும் மாயப்பனி மூட தேடுகிறீர்கள்
இறையைத்தேடி இங்கேபல வேள்வி செய்கிறீர்கள்

பல்லாயிரக் கண்கள் பலதலைகள் கொண்டவனே
எல்லாம் கடந்து என்னுள்ளத் துளையில் இருப்பவனே
உடலும் நீயே உள்ளிருக்கும் இந்திரியமும் நீயே
கடந்த பேரின்ப கடவுளும் நீயே

முடிவில்லாத மூன்றுலக நாயகனே தூயஅறிவே
அடிக்கால் பகுதி உலகமாய் மாற முக்கால் என்னவோ
இவ்வுலகம் நீயாக இதனுள் வாழ் உயிர் நீயாக
அவ்வுலக பேரின்பமே அழியா விளக்கே வணக்கம்

குருவாயூர் தலைவனே குழந்தை கிருஷ்ணனே
உருவம் இந்திரியத்தால் உணர முடியாத
அரிதின் முயன்றால் அறியும் பேரின்பமே
துரிதமாய் என்பிணியை தொலையச் செய்வாயே!

**பதிகம்** 100

## திருமுடி முதல் திருவடி வரை வர்ணனை

உண்மையை உணர்த்தும் உபநிடதம் சூழந்திட
மண்ணிலே யோகிகள் மன்றாடித் தொழுதிட
கண்ணைக் கவரும் காயம்பூ ஒளியில்
என்னெதிரே தெரிந்திடும் எழிலான இளைஞனே

கருங்கூந்தல் அடர்ந்து காற்றிலே ஆடிட
சுருண்ட கேசத்தை சுற்றிய பீலீயே
இருளை நீக்கிடும் இரத்தின ஒளியே
புருவத்தின் இடையே பூத்திட்ட பிறைநிலவே

விசையால் இமைகள் விளையாடித் திறந்திட
அசையும் புருவங்கள் அலையாய் அருள்சொரிய
தசையை இயக்கிடும் தாமரை விழிகளே
இசைக்கும் அநாதையை இனிதே காக்குமே

நாசியின் எடுப்பில் நளினம் கூடுமே
வீசிடும் குண்டலங்கள் விளையாடும் கன்னமே
பேசிடும் புன்னகை பேரழகைப் பெருக்குமே
மாசில்லா உன்னுருவம் மனதிலே நிற்குமே

கரங்கள் இரண்டும் கலையாய் வளையுமே
தரமான குழலைத் தாளத்துடன் இசைக்குமே
குரலின் இனிமையில் குளிரும் நாதத்தில்
சிரம்தாழ செவியும் சிந்தையும் மகிழுமே

கழுத்தில் கௌஸ்துபம் கலையாயத் தவழ்ந்திட
விழுந்த முத்துமாலை விரிந்த மார்பிலாட
எழுந்து அருளும் எழிலான திருமகளுடன்
முழுதானக் கடவுளாய் முன்னே தெரிபவனே

மேனியில் சந்தனம் மேவியே மணந்திட
பேணிய உலகம் பொலிவான இடையாக
பூணியப் பட்டாடைப் பொன்னிற ஒளியாக
ஞாணில் கிங்கிணி நடனம் ஆடுமே

உறுதியைத் தந்தே உன்தொடை ஒளிர்ந்திட
உருண்ட முழங்கால் உலகைக் காத்திட

பருத்த கணுக்கால் பட்டாடை கீழிருக்க
கருத்தும் வணங்கி கலங்கி நிற்குமே

கழலடிப் பணிந்திடக் கால்நுனித் தெரியுமே
உழலும் மனமும் உணரும் பேரின்பமே
தழலான துன்பத்தைத் தளிர்விரல் துடைக்குமே
அழகான நிலவை அடைக்கலம் அடையுமே

குருவாயூர் தலைவனே கொடுக்கும் காருண்யமே
திருவடி சரணடைய தீர்ந்திடும் கவலைகளே
விரும்பியதை வழங்கிடும் விருட்சமான கற்பகமே
அருளிடு மோட்சத்தை அழகான கிருஷ்ணனே!

கிருஷ்ணா! காருண்ய சிந்தோ!!
கருணைக்கடலே! கிருஷ்ணனே!!!
அருளிடு மோட்சத்தை அழகான கிருஷ்ணனே !!